# பொருளியல் நோக்கு

ஏப்ரல் / மே 1998

## அரசிறைக் கொள்கையும் பொருளாதார அபிவிருத்தியும்

மற்றும்

- கட்டற்ற சந்தை அபிவிருத்தியும் மூன்றாவது உலகமும்
- இலங்கையில் கணக்கியல் கல்வி
- நீர்ப்பாசன அபிவிருத்தியும் உணவுப் பாதுகாப்பும்

**சிறப்புப் பகுதி**
**மாணவர் அனுபந்தம்**

மக்கள் வங்கி வெளியீடு

# நுகர்வோர் நிதி மற்றும் சமூக, பொருளாதார அளவீடு 1996/97

குடும்ப அலகுகளின் சராசரி வருமானங்கள், செலவாகும் முறைகள், தொழில்நிலை, தொழில் வாய்ப்பின்மை, வீடமைப்பு நிலைமைகள் மற்றும் சேமிப்புக்கள் என்பனவற்றை அறிந்து கொள்வதற்கான முதன்மைக் குறிக்கோளுடன் 1953இல் இலங்கை மத்திய வங்கி அதனது முதலாவது நுகர்வோர் நிதி அளவீட்டை நடாத்தியது. முதலாவது அளவீடானது இந்த விடயம் தொடர்பான முன்னோடி ஆய்வாக அமைந்ததோடு 1963,1973, 1978/79, 1981/82, 1986/87 மற்றும் 1996/97 இல் நடாத்தப்பட்ட பின்னைய அளவீட்டுத் தொடர்களுக்கான அடிப்படையினையும் வழங்கியது. இந்த அளவீடுகளின்போது மாதிரியின் அளவும் சமூகப் பொருளாதார மாறிலிகளின் உள்ளடக்கமும் விரிவாக்கப்பட்ட வேளையில் முக்கிய மாறிலிகள் தொடர்பான ஒப்பீட்டுத் தரவுகள் பேணப்பட்டன. இதன் மூலம் நான்கு தசாப்தங்களுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய தரவுகளை அவற்றின் பாவனையாளர்கள் பெற்றுக் கொள்ள இயலுமானதாக இருந்தது. நுகர்வோர் நிதி அளவீட்டுத் தொடரின் தரவுகள் ஆராய்ச்சியாளர்கள், திட்டமிடல் அலுவலர்கள், மாணவர்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் பொது மக்களினால் பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்றன. கொள்கைத் திட்டமிடலில் தனியார் மற்றும் பொது நிறுவனங்களுக்கு இந்த அளவீட்டுத் தொடர்கள் தகவலுக்கான பாரிய மூலமாக விளங்குகின்றன.

மத்திய வங்கியின் புள்ளி விபரத் திணைக்களம் 1996 ஒக்தோபரிலிருந்து 1997 திசெம்பர் வரையான காலப் பகுதியில் 1996/97 நுகர்வோர் நிதி பொருளாதார அளவீட்டின் களவேலைகளை நான்கு சுற்றுக்களில் மேற்கொண்டது. இதற்கான தகவல்கள் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் சில பகுதிகள் தவிர்ந்த நாடளாவிய ரீதியில் 8880 குடும்ப அலகுகளின் மாதிரிகளில் இருந்து சேகரிக்கப்பட்டன. இந்த அளவீடுகளின் முக்கிய கண்டுபிடிப்புக்களாவன முதிர்ச்சியடையும் குடித்தொகை, சுகாதாரம், கல்விப் பெறுபேறுகள் மற்றும் எழுத்தறிவு என்பனவற்றில் மேலும் முன்னேற்றம், தொழில்வாய்ப்பின்மை வீதத்தில் கணிசமான குறைப்பு, தொழிற்படைப் பங்கேற்பில் அதிகரிப்பு, வருமானச் சமப்படுத்தலுக்கான நகர்வு, குடும்ப அலகுகளுக்கான வசதிகள் மற்றும் உபகரணங்களைப் பெருமளவில் பெற்றுக் கொள்ளக் கூடிய தன்மை என்பனவாகும்.

வயது அடிப்படையில் குடித்தொகைப் பரம்பல் கடந்த மூன்று தசாப்தங்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. முக்கியமான மாற்றமொன்று என்னவெனில் இளம் வயதுக் குழுக்களின் பங்கு வீழ்ச்சியடைந்தமையும் முதிர்ச்சியடைந்த வயதுக் குழுவினரின் பங்கு அதிகரித்தமையுமாகும். 14 வயதுக்குக் கீழானவரின் பங்கு 1963இல் 40.5 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் 1996/97இல் 25.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதே வேளையில் 55 வயதுக்கு மேலான குடித்தொகையின் பங்கு 1963இன் 7.2 சதவீதத்திலிருந்து 1996/97இல் 13.3 சதவீதத்திற்கு அதிகரித்து குடித்தொகையின் முதிர்ச்சியடையும் தன்மையினைக் குறித்துக் காட்டியது. குடித்தொகையில் இளம் வயதுக் குழுவினரின் பங்கின் வீழ்ச்சியினால் பிரதிபலித்த குடிப்பரம்பல் மாற்றத்துக்கு கருவுறல் வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது. மறுபுறத்தில், இறப்பு வீதத்தில் காணப்பட்ட வீழ்ச்சியானது குடித்தொகையின் வாழ்வுக்கால நீடிப்புக்குப் பங்களிப்புச் செய்ததோடு முதிர்ச்சியடைந்த குடித்தொகையின் பங்கினை அதிகரிக்கச் செய்தது. இந்தப் போக்கானது பலதரப்பட்ட சமூக, பொருளாதார உட்படுத்தல்களைக் கொண்டிருக்கும். இன்னுமொரு பக்கத்தில் குடித்தொகையின் பள்ளி செல்லும் வயதினரின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சியானது கல்வி முறையின் மீது காணப்படும் அழுத்தத்தினை இலகுபடுத்துவதுடன், கல்வித் தரத்தின் மேம்பாட்டிற்கு இடமளிக்கக் கூடியதாக இருக்கும். மறுபக்கத்தில் வயது முதிர்ந்த குடித் தொகையின் பங்கின் அதிகரிப்பானது எதிர்காலத்தில் முதியவர்களைக் கவனிப்பதற்கான நலக் கவனிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு முறைகள் என்பனவற்றில் விரிவாக்கத்தினைத் தேவைப்படுத்தும்.

கல்வியைப் பொறுத்தவரையில் 1953இன் 12 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் குடித்தொகையின் 56 சதவீதத்தினர் ஆரம்பக் கல்வி மட்டத்தினைத் தாண்டியுள்ளதை 1996/97 அளவீடு வெளிக் காட்டியது. 1996/97 இல் 92 சதவீதத்தினை எய்தியிருந்த முதியோர் எழுத்தறிவு வீதம் தென் கிழக்காசிய நாடுகளில் அவதானிக்கப்பட்ட அதி உயர் மட்டத்தில் காணப்பட்ட வேளையில், கடந்த காலங்களில் நிலவிய கல்விப் பெறுபேறுகளின் பால் ரீதியான சமமின்மை படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பெண்களின் பங்கேற்பில் காணப்பட்ட அதிகரிப்பின் முதன்மைக் காரணத்தினால் தொழிற்படைப் பங்கேற்பு வீதங்கள் படிப்படியான அதிகரிப்பினைக் காட்டியுள்ளன. பெண்களின் பங்கேற்பில் காணப்பட்ட அதிகரிப்பானது பெண்களின் உயர் கல்வி பெறுபேறுகளையும் உள்ளடக்கி, உள்நாட்டுப் பொருளாதார விரிவாக்கத்தினால் உந்தப்பட்ட தொழில் நாட்டம் மற்றும் வெளிநாட்டில் வேலை வாய்ப்பை நாடும் பெண்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு என்பவற்றின் விளைவாகும்.

1996/97 இன் அளவீடானது தொழில் வாய்ப்பின்மை வீதத்தில் கணிசமான குறைப்பொன்றினையும் வெளிப்படுத்தியது. பொருளாதாரத்தில் மந்தமான வளர்ச்சியின் காரணமாக 1973 இல் தொழில் வாய்ப்பின்மையானது தொழிற்படையின் உயர்ந்த வீதமொன்றான 24 சதவீதத்தில் காணப்பட்டது. 1977 இற்குப் பிற்பட்ட காலப் பகுதியில் பொருளாதாரம் விரைவாக விரிவடைந்ததன் காரணமாக

(பின் உள்ளட்டையைப் பார்க்கவும்)

# பொருளியல் நோக்கு

மலர் 24 இதழ் 01/02 ஏப்ரல் / மே 1998

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை
கொழும்பு 2
இலங்கை.

## மாணவர் அனுபந்தம்

வின்சன்ட் மேர்வின் பெர்னான்டோ — 22 — அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளும் மாற்றுப் பொருளாதார முறைகளும்

புதிதாக அறிமுகம் செய்து வைக்கப்பட்ட $M_{2b}$ பண நிரம்பல்

## விசேஷ அறிக்கை
## அரசிறைக் கொள்கையும் பொருளாதாரமும்

பேராசிரியர் எஸ். எம். எஸ். சந்குமார — 2 — அரசிறைக் கொள்கையும் பொருளாதாரமும்

## சிறப்புக் கட்டுரைகள்

டீ. என். பி. குணவர்தன — 7 — சுதந்திர சந்தைகள், அபிவிருத்தி மற்றும் மூன்றாவது உலகம்

ஹேமா விஜேவர்தன
சேனரத் யாபா — 12 — இலங்கையில் கணக்கியல் கல்வி: சிங்கப்பூர் அனுபவத்திலிருந்து படிப்பினைகள்

ரன்டோல்ப் பார்க்கர்
எம். ஸமத் — 00 — இலங்கையில் நீர்ப்பாசன அபிவிருத்தியும் உணவுப் பாதுகாப்பும்

### அடுத்த இதழில்

தகவல் தொழில்நுட்பம்: நவ யுகத்தின் புரட்சி

அச்சுப்பதிவு: DTP அலகு, மக்கள் வங்கி

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளி விபரத்தரவுகளையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.
பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் ஒரு சமூகப்பணித் திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புகளும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

# அரசிறைக் கொள்கையும் பொருளாதார அபிவிருத்தியும்

பேராசிரியர் எஸ். எம். எஸ். சத்குமார
(பொருளியல் துறை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)

அரசிறைக் கொள்கை என்பது ஒரு பேரண்டப் பொருளியல் முகாமைச் கருவியாக இருந்து வருவதுடன் அது பொதுச் செலவுகள், வரிகள் மற்றும் மானியங்கள் என்பவற்றுக்கூடாக செயல்படுத்தப்படுகின்றது. பொருளாதாரக் கோட்பாட்டில் இரு பிரதான பேரண்டப் பொருளியல் கருவிகள் உள்ளன. இதிலொன்று நாணயக் கொள்கையாகும். இது பண நிரம்பலையும் வட்டி விகித அமைப்பையும் கட்டுப்படுத்தி வருகின்றது. இரண்டாவது கருவி அரசிறைக் கொள்கையாகும். இது குடும்பங்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையிலான வருமானப் பாய்ச்சலினை கட்டுப்படுத்தி வருவதுடன், பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் சார்பு ரீதியான விலைகளையும் நிர்ணயிக்கின்றது. உறுதியான பேரண்டப் பொருளியல் முகாமை ஒன்றுக்கு இந்த இரு கருவிகளும் இணையான அளவில் அவசியமாக உள்ளன. பண இருப்பு கட்டுப்பாட்டையும் மீறிச் சென்றால் அரசிறைக் கொள்கையின் பிடி தளர்ந்து விடும். அதே போல பணமயமாக்கல் இடம் பெற்று வரும் வழிமுறைகளில் இடையூறுகள் தோன்றும் பட்சத்தில் நாணயக் கொள்கையின் பிடி தளர்ந்து விடும். எவ்வாறிருப்பினும், வளர்முகப் பொருளாதாரங்களின் அமைப்பு ரீதியான பிரச்சினைகளை சமாளிக்கும் விஷயத்தில் நாணயக் கொள்கையிலும் பார்க்க அரசிறைக் கொள்கை மிகுந்த செயல் தாக்கம் கொண்டதாக இருந்து வருகின்றது.

## அரசிறைக் கொள்கையின் கருமங்கள்

ஒரு நாட்டின் பேரண்டப் பொருளியல் முகாமையில் அரசிறைக் கொள்கை பல கருமங்களை நிறைவேற்றி வைக்க வேண்டியுள்ளது. அரசிறைக் கொள்கையின் மூலவள ஒதுக்கல் இதில் முதலாவதானதாகும். பொருளாதாரத்தின் மொத்த வெளியீடு, பல்வேறு உற்பத்திப் பிரிவுகளுக்கிடையே மூலவளங்கள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகின்றது என்பதனைப் பொறுத்தே அமைகின்றது. தற்போதைய மொத்த வெளியீட்டு மட்டம் வெளியீட்டின் உள்ளார்ந்த மட்டமாக (அதாவது சாத்தியமான உற்பத்தி அளவாக) இல்லாமலிருக்கக் கூடும். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் மூலவளங்களின் மீள் பகிர்வானது தற்போதைய வெளியீட்டு மட்டத்துக்கும் சாத்தியமான வெளியீட்டு மட்டத்துக்கும் இடையிலான இடைவெளியை குறைக்க முடியும். இரண்டாவது அம்சம் அரசிறைக் கொள்கையின் சமத்துவக் கருமமாகும். வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றின் சமமான பகிர்வுக்கூடாக சமத்துவத்தை சாதித்துக் கொள்ள முடியும். செலுத்தும் ஆற்றல் கோட்பாட்டின் அடிப்படையில் வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றின் மீது வரியினை அறவிடுவதன் மூலம் வரி விதிப்பில் சமத்துவ நிலையை சாதித்துக் கொள்ள முடியும். செலுத்தும் ஆற்றலை ஒன்றில் வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றின் அடிப்படையிலோ அல்லது நுகர்வின் அடிப்படையிலோ நிர்ணயித்துக் கொள்ள முடியும். எனினும், பல நாடுகளில் வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றுக்கே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது. வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றின் மீது படிப்படியாக அதிகரித்துச் செல்லும் அடிப்படையில் வரி விதிப்பினை மேற்கொள்வதன் மூலமும் பெருமளவுக்கு குறை வருமானக் குடும்பங்களினால் நுகரப்பட்டு வரும் பொருட்கள் மீது பூஜ்ய அல்லது குறைந்த பண்ட வரி விதிப்பொன்றினை மேற்கொள்வதன் மூலமும் வரிக் கொள்கையில் ஒரு சமத்துவ நிலையை எடுத்து வர முடியும். குறை வருமானக் குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்பு வலையொன்றை வழங்குவதும் ஏனைய பணக் கொடுப்பனவுகளை வழங்குவதும் அரசிறைக் கொள்கையின் சமத்துவக் கோட்பாட்டினை மேலும் வலுவாக்கும். மூன்றாவது அம்சம் அரசிறைக் கொள்கையின் உறுதிப்படுத்தல் கருமமாகும். பொருளாதார உறுதிப்பாடு உள்ளக மற்றும் வெளி உறுதிப்பாட்டுடன் சம்பந்தப்பட்டுள்ளது. உள்ளக உறுதிப்பாடு உயர் உள்நாட்டுப் பணவீக்கத்தை தவிர்த்துக் கொள்வதனை குறிக்கின்றது. அதே வேளையில், வெளி உறுதிப்பாடு நாட்டின் சென்மதி நிலுவையில் உயர் அலவிலான நடைமுறைக் கணக்குப் பற்றாக் குறைகளை தவிர்த்துக் கொள்வதனை குறித்துக் காட்டுகிறது. அரசிறைக் கொள்கையின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருமம் நான்காவது விடயமாகும். நாங்கள் இங்கு எமது கலந்துரையாடலை அரசிறைக் கொள்கையின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றுடன் தொடர்பான கருமத்துக்கு மட்டும் வரையறுத்துக் கொள்கின்றோம்.

பொருளாதார அபிவிருத்தி என்ற பதம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரங்களில் ஒரு விருத்தி நிலை ஏற்படுவதனைக் குறிக்கின்றது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அவசியமான நிபந்தனை, அந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் மொத்த வெளியீட்டின் அளவு அந்நாட்டின் குடித்தொகை வளர்ச்சியிலும் பார்க்க வேகமாக வளர்ச்சியடைய வேண்டும் என்பதாகும். ஆனால், அது மட்டும் போதுமானதல்ல. அதிகரித்தளவிலான வெளியீடு அல்லது வெளியீட்டின் விரிவாக்கத்துக்கூடாக உருவாக்கப்பட்ட வருமானம் குடும்பங்களுக்கிடையே சமமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அபிவிருத்தி என்பது முழுமையான வறுமையில் ஒரு குறைவு ஏற்படுவதனைக் குறித்து நிற்கின்றது. அதாவது , பிழைப்பூதிய வருமான மட்டத்துக்கு கீழே இருந்து வரும் மக்களின் சதவீதம் காலப் போக்கில் வீழ்ச்சியடைந்து வருதல் வேண்டும். பொருளாதார அபிவிருத்தி இடம் பெறுவதாக இருந்தால் மக்கள் குறைந்த பட்சம் தமது அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மொத்த வெளியீட்டின் வளர்ச்சி விகிதம்

அல்லது பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதத்தில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு மட்டும் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என்பதனை வெறுமனே குறித்துக் காட்டமாட்டாது. ஏனெனில், வளர்ச்சியின் அனுகூலங்கள் சமமான முறையில் பகிர்ந்தளிக்கப்படும் ஒரு நிலை அபிவிருத்திக்கு அவசியமாகும். மொத்த வெளியீட்டின் விரிவாக்கத்துடன் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களும் சேவைகளும் உண்மையிலேயே மனித நலனோம்பலை உயர்த்த வேண்டும். எவ்வாறிருப்பினும், வளர்ச்சியென்பது அபிவிருத்திக்கு அவசியமான ஒரு நிபந்தனையாக இருந்து வருவதுடன், அந்த வகையில் அரசிறைக் கொள்கை வளர்ச்சியின் மீது எவ்வாறு செல்வாக்குச் செலுத்த முடியும் என்பதனை இப்பொழுது நாங்கள் நோக்குவோம்.

### அதிகரித்த உற்பத்தித் திறனுக்கூடாக வளர்ச்சி

இலங்கையைப் போன்ற நாடுகளில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மூலவளங்களின் பின்னணியில், வளர்ச்சி என்பது, மூலவளங்களின் அதிகரித்த அளவிலான உற்பத்தித் திறனிலிருந்து வர வேண்டும். பின்வருவனவற்றின் மூலம் உற்பத்தித் திறன் வளர்ச்சியை சாதித்துக் கொள்ள முடியும்:

* தற்போதைய உற்பத்தி ஆற்றலை மிகவும் செறிவான முறையில் பயன்படுத்திக் கொள்ளல்.
* அதிகரித்தளவிலான தொழில் நுட்ப அபிவிருத்தி
* மனித மூலதனத்தின் மீதான முதலீடு

### அரசிறைக் கொள்கை மூன்று வழிகளில் உற்பத்தித் திறன் வளர்ச்சியை எடுத்து வர முடியும்:

* பல்வேறு சந்தை முறிவு நிலைகள் காரணமாக தனியார் துறையினால் போதியளவில் நிரம்பல் செய்ய முடியாதிருக்கும் பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை நிதிப்படுத்துவதன் மூலம் அல்லது அவற்றை நேரடியாக நிரம்பல் செய்வதன் மூலம். (இது ஒரு சில உள்கட்டமைப்பு வசதிகள் செய்திட்டங்களையும் தனியார் துறையின் உற்பத்தித் திறனை நேரடியாக மேம்படுத்தக்கூடிய கல்வி, சுகாதாரம் போன்றவற்றை வழங்குவதனையும் உள்ளடக்குகின்றது.)
* நீண்டகால முதலீட்டு மற்றும் தொழில் முனைவு நடவடிக்கை என்பவற்றுக்கு அவசியமான அடிப்படை வசதிகளை (பொதுப் பண்டங்களை) வழங்கல் செய்வதன் செலவுகளை குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதன் மூலம்.
* தனியார் துறையின் சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தீர்மானங்களில் திரிபுகளை ஏற்படுத்தாமல் பொதுத் துறை நடவடிக்கைகளை நிதிப்படுத்துவதன் மூலம்.

### உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான பொது முதலீடு .

அரசிறைக் கொள்கையின் தலையீடு உற்பத்தித் திறன் வளர்ச்சிக்கு வழிகோலக் கூடிய பல விரிவான துறைகளை எம்மால் இனங்கண்டு கொள்ள முடியும். மிக முக்கியமான ஒரு துறை பொதுத்துறை உள்கட்டமைப்பு வசதிகள் மீதான முதலீடாகும். தனியார் துறை, சந்தை முறிவுகள் காரணமாக அல்லது பாரிய மூலதன முதலீடுகளுடன் சம்பந்தப்பட்டுள்ள நட்டவச்சங்கள் காரணமாக சமூக பொது முதலீட்டுத் திட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்வதில் தயக்கம் காட்ட முடியும். ஆனால், அவசியமான உள் கட்டமைப்பு வசதிகள் கிடைக்கக் கூடியதாக இருக்கும் நிலையில் தனியார் துறைப் பொருளாதார நடவடிக்கைகள் அவற்றின் உற்பத்தித் திறனை கணிசமான அளவில் அதிகரித்துக் கொள்ள முடியும். அந்த வகையில், உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருளாதார நடவடிக்கைகள் தனியார் துறை பொருளாதார நடவடிக்கைகளுக்கு குறை நிரப்பு செய்யக்கூடியனவாக இருந்து வரும். தனியார் இலாப நிலையிலும் பார்க்க சமூக இலாப நிலை (தேசிய பொருளாதார இலாப நிலை) உயர்வானதாக இருந்து வருமிடத்து அத்தகைய செய்திட்டங்களில் பொதுத் துறையின் ஈடுபாடு இடம் பெறுவது அவசியமாகும். மேலும், பிரமாண்டமான அளவிலான ஆரம்ப மூலதனத் தேவையும் வெளியீடு தொடர்பாக விலையிடலை மேற்கொள்ள முடியாதிருக்கும் நிலையும் பொதுத் துறையின் தலையீட்டினை நியாயப்படுத்த முடியும். வளர்முக நாடுகளில் மூலதனச் சந்தைகள் வளர்ச்சி குன்றியனவாக இருந்து வருவதனால் உள்நாட்டு மூலதனம் வரையறுக்கப்பட்ட அளவிலேயே கிடைக்கின்றது. எனவே, நிர்மாணித்து இயக்கி உரிமையாக்கிக் கொள்ளுதல் மற்றும் நிர்மாணித்து, இயக்கி, கை மாற்றிக் கொடுத்தல் போன்ற திட்டங்களின் கீழ் சமூக உள்கட்டமைப்பு வசதிகளின் முதலீடுகளில் வெளிநாட்டுத் தனியார் முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. எனவே, பொருளாதாரத்தின் தொழில் முனைவு நடவடிக்கைகளில் உள் கட்டமைப்பு வசதிகள் மீதான முதலீடு உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு அத்தியாவசியமானவையாக இருந்து வருகின்றன. இலங்கையில் ஏற்றுமதி முறைப்படுத்தும் வலயங்களின் ஸ்தாபிதத்துக்கு முன்னர் பாதைகள், நீர் வழங்கல், வடிகாலமைப்பு, புகையிரதப் பாதைகள் மற்றும் சர்வதேச விமான நிலைய வசதிகள் போன்ற அவசியமான உள்கட்டமைப்பு வசதிகள் அரசினாலேயே வழங்கப்பட்டு வந்தன. இவை இவ்வலயங்களில் ஸ்தாபிக்கப்பட்ட தொழில் முயற்சிகளின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு கணிசமான அளவில் பங்களிப்புச் செய்திருந்தன.

உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு பொதுத் துறையின் தலையீடு அவசியமாக இருந்து வரும் மற்றொரு பிரதான துறை கல்வி மீதான செலவுகளாகும். கல்வியின் மீதான அரச தலையீட்டினை சந்தை முறிவுகளின் அடிப்படையில் நியாயப்படுத்த முடியும். மூலவளங்களிலான திறமையான பகிர்வொன்றினை சாதித்துக் கொள்வதில் போட்டிச் சந்தைகள் தோல்வியடையும் நிலையை சந்தை முறிவுகள்

என வரைவிலக்கணப்படுத்த முடியும். ஒரு சில நாடுகளில் கல்வி ஓரளவுக்கு தனியார் துறையிடம் மட்டும் விடப்பட்டால் அனைவருக்கும் சமமான வாய்ப்புக்கள் கிடைக்கும் என்றோ சமூகத்துக்கு போதிய மட்டத்திலான கல்வி கிடைக்கும் என்றோ எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக சிறு தொகையினர் மட்டுமே கல்விக்கென பணம் செலுத்தக் கூடியவர்களாக இருந்து வரும் குறை வருமான நாடுகளைப் பொறுத்தவரையில் இந்நிலைமை மிகவும் தீவிரமாக இருந்து வரும். அனைத்துக்கும் மேலாக கல்வி அல்லது பயிற்சி என்பவற்றின் இறுதி அனுகூலம் கல்வியைப் பெற்றவர்களுக்கு அல்லது ஊழியரைப் பயிற்றுவித்த வேலை கொள்வோருக்கு மட்டும் சேர்ந்து விடாது. கல்வி, பயிற்சி அல்லது திறன்கள் என்பவற்றின் மூலம் கிட்டும் அனுகூலம் முழு சமூகத்துக்குமே கிட்டுகின்றது. படித்த, திறன்களைக் கொண்டுள்ள ஊழியர் படையின் விளைவாக முழு நாடும் பயனடைகிறது. கல்வி, பயிற்சி அல்லது திறன்களின் அபிவிருத்தி என்பவற்றின் இறுதி விளைவு ஊழிய உற்பத்தித் திறனின் வளர்ச்சியாகும். எமது நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் உற்பத்தித் திறனுக்கும் கைத்தொழில் வளர்ச்சி கண்டுள்ள நாடுகளைச் சேர்ந்த ஊழியர் படையின் உற்பத்தித் திறனுக்கும் இடையே கணிசமான ஒரு அளவிலான வேறுபாடு நிலவி வருகின்றது. இதனை மனித மூலதனத்தின் மீதான (கல்வி, பயிற்சி மற்றும் திறன் என்பவற்றின் மீதான செலவின்) அடிப்படையில் எடுத்து விளக்க முடியும். கல்வியின் மீதான பொதுச் செலவினம் ஒரு சமூக சேவையாக இப்பொழுது நோக்கப்படுவதில்லை. மாறாக, மனித மூலதனத்தின் மீதான ஒரு முதலீடாகவே அது நோக்கப்பட்டு வருகின்றது. மனித மூலதனத்தின் மீதான முதலீடு ஊழிய உற்பத்தித் திறனை உயர்த்துகின்றது. அந்த வகையில், ஊழியத்தின் தரத்தை அதிகரிப்பது தொடர்பான பொதுச் செலவினத்தை ஒரு தேவை என்ற முறையில் நியாயப்படுத்த முடியும்.

"உற்பத்தித் திறன் கொண்ட ஊழியர் படை துரித வளர்ச்சியின் பின்னணியில் இருந்து வந்துள்ள இரகசியமாகும்" என்ற உண்மையை கிழக்காசியப் பொருளாதாரங்களின் அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது. கல்வியின் மீது மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் விளைவாகவே இந்நிலைமை தோன்றியது. உதாரணமாக, ஜப்பானில் அனைவருக்குமான இலவசக் கல்வியில் அரசாங்கத்தின் தலையீடு பெருமளவுக்கு சமத்துவ இயல்பு வாய்ந்த சமூகம் ஒன்றை உருவாக்கியது. பாரம்பரிய கமத்தொழில் பொருளாதாரம் துரித வளர்ச்சி கண்டு வரும் கைத்தொழில் பொருளாதாரம் ஒன்றாக நிலைமாற்றம் அடைவதற்கும் அது உதவியது. சமத்துவ சமூகம் வெற்றிகரமான நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான அரசியல் உறுதிப்பாடு தோன்றுவதற்கு வசதி செய்து கொடுத்தது. ஸ்தாபிதமான வளர்ச்சிக் கோட்பாடுகளை புறமொதுக்கிய விதத்தில் கிழக்காசியப் பொருளாதாரங்கள் சமத்துவச் சமூகமொன்றில் உயர்மட்ட சேமிப்புக்களை சாதித்துக் கொள்ள முடியும் என்பதனையும், பௌதீக மூலதனத்தின் அதிகரிப்பிலும் பார்க்க மனித மூலதனத்தின் அதிகரிப்பு மிகுந்த முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது என்பதனையும் எடுத்துக் காட்டியது. மனித மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ஊழியத்தின் உற்பத்தித் திறனை உயர்த்தியது.

பெற்றுக் கொள்ளப்படும் கல்வி, பயிற்சி மற்றும் திறன்கள் என்பவற்றின் மட்டம் வருமானப் பகிர்வு மற்றும் சமூக வர்க்கப் பிரிவு என்பவற்றின் மீது மிக முக்கியமான தாக்கங்களைக் கொண்டுள்ளது. எனவே, மனித அபிவிருத்தி செய்திட்டங்கள் மீதான பொதுத் துறைச் செலவினம் அரசிறைக் கொள்கையின் ஒரு முக்கியமான கருவியாக இருந்து வருகின்றது. வருமானப் பகிர்வு தொடர்பான ஏற்றத் தாழ்வுகள் மனித மூலதனத்தின் மீதான முதலீடுகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளுடன் பெருமளவுக்கு தொடர்புபட்டவையாக இருந்து வருகின்றன. ஏற்றத் தாழ்வான கல்வி மற்றும் திறன்கள் என்பன வறுமையை நிலைத்திருக்கச் செய்து வரும் அதேவேளையில், கல்வி மற்றும் பயிற்சி வசதிகள் என்பவற்றின் நியாயமான, சமத்துவமான பகிர்வு வறுமையைக் குறைப்பதற்கு உதவுகின்றது. எனவே, மனித மூலதன உருவாக்கத்தின் மீதான முதலீடு ஒரு புறத்தில் உயர் வளர்ச்சியை சாதித்துக் கொள்வதற்கும், மறுபுறத்தில் ஏற்றத் தாழ்வு நிலை குறைந்த அளவில் காணப்படும் சமூகக் குறிக்கோளை சாதித்துக் கொள்வதற்கும் என உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது. மனித மூலதனத்தின் மீதான முதலீட்டுச் செலவினத்தை வசதி வாய்ப்புக்கள் குறைந்த சமூகப் பிரிவினர் மீது அதிகளவுக்கு கவனம் செலுத்தும் விதத்தில் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ள முடியும்.

அரசாங்க அரசிறை தலையீட்டினை நியாயப்படுத்தக் கூடிய மற்றொரு துறை பொதுச் சுகாதார பராமரிப்பாகும். சுகாதாரப் பராமரிப்பின் மீதான செலவினம் ஊழியர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதுடன் தடுப்புச் சுகாதாரம் மற்றும் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட சமூக அனுகூலங்கள் வளர்ச்சியை மேம்படுத்துகின்றன. சுகாதாரப் பராமரிப்பு மற்றும் பொதுச் சுகாதாரம் என்பவற்றின் மீதான செலவினத்தை கல்வியின் மீதான செலவினத்தைப் போலவே மனித மூலதனத்திலான ஒரு முதலீடாக கருத முடியும். ஏனெனில், அது ஒரு நபரின் உற்பத்தி சார் வாழ்க்கையை நீடிக்கச் செய்கின்றது. தடுப்புச் சுகாதாரம் மற்றும் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு என்பவற்றை வழங்குவதில் அரசாங்கத்தின் அரசிறைத் தலையீடு மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. இது உயர் சமூக அனுகூல-செலவு விகிதமொன்றைக் கொண்டுள்ளது. ஆரோக்கியமான, உற்பத்தி ஆற்றல் கொண்ட ஓர் ஊழியர் படையின் வடிவில் சமூகத்துக்கு கிடைக்கக் கூடிய பேரளவிலான அனுகூலங்களின் அடிப்படையில் நோக்கும் பொழுது, தடுப்புச் சுகாதாரம் மற்றும் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு என்பவற்றை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட செலவு சார்பு ரீதியில் மிகச் சிறியதாகவே உள்ளது. குறிப்பாக, இலங்கையைப் போன்ற நாடுகளில் குடித்தொகையில் பெரும்பாலானவர்கள் ஒரு புறத்தில் சுகாதார பராமரிப்புச் சேவைகளுக்கு பணம் செலுத்த முடியாதவர்களாக இருந்து வருவதுடன், மறுபுறத்தில் தடுப்பு மருந்தேற்றல் போன்ற நோய்த் தடுப்பு முறைகள் குறித்து அறியாதவர்களாகவும் இருந்து வருகின்றனர். அரசாங்கம் இது குறித்த விழிப்புணர்வினை அவர்களிடையே ஏற்படுத்தி இத்தகைய வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டியுள்ளது. மேலும், ஊழிய உற்

பத்தித் திறன் (குறிப்பாக பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார் என்போரின்) போஷாக்கின்மையினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டால் மக்களின் போஷாக்கு மட்டங்களை விருத்தி செய்வதற்கென மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் அனைத்தையும் மனித மூலதனத்தின் மீதான முதலீடாகக் கருத முடியும்.

பொருளாதார அபிவிருத்தியில் அரசிறைக் கொள்கை வகித்து வரும் மற்றொரு பங்கு சுற்றுச் சூழல் சீர்கேட்டினை தடுத்து நிறுத்துவதாகும். இந்த விடயத்தின் முக்கியத்துவம் கடந்த கால் நூற்றாண்டு காலத்தின் போதே மிகவும் பரவலான முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மொ. உ. உ. யில் ஏற்படும் அதிகரிப்புக்கள் மக்களின் வாழ்க்கைத் தரங்களில் ஏற்படும் அதிகரிப்புக்கு இணையானவையாக அவசியமாகவே இருந்து வருவதில்லை என்பதனை அல்லது அளவிடப்படும் மொ. உ. உ. யின் அதிகரிப்புக்கள் நீண்ட கால செல்வத்தில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்பதனைக் குறித்துக் காட்டவில்லை என்பதனையும் நாம் அறிவோம். அண்மைக் காலத்தில் "பசுமை" க் கணக்குகளை உருவாக்குவதற்கான முயற்சிகளின் போது இந்த விடயங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. பசுமைக் கணக்குகளில் பொருளாதார நடவடிக்கைகளின் போது ஏற்படும் இயற்கை வளங்களின் இழப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடு என்பன கணிக்கப்பட்டு அளவீடு செய்யப்படுவதுடன், கணிக்கப்பட்ட மொ. உ. உ. யுடன் சீராக்கம் செய்து கொள்ளப்படுகின்றன. பசுமைக் கணக்குகள் குறிப்பாக துரித வளர்ச்சி கண்டு வரும் பல நிலைமாற்றப் பொருளாதாரங்களினால் சுற்றுச்சூழல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பாரிய சேதத்தை எடுத்துக் காட்டுகின்றன. 1960 களின் முடிவின் போது ஜப்பானில் சுற்றுச்சூழல் சீரழிவினைத் தடுக்கும் பொருட்டு அரசாங்கம் மேற்கொண்ட அரசிறை ரீதியான தலையீடுகளின் விளைவாக புதிய தொழில்நுட்பங்களைத் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதனை அந்நாட்டின் அபிவிருத்தி அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது. வளி மாசடைதல் மற்றும் நீர் மாசடைதல் போன்ற சுற்றுச் சூழல் சீர்கேடுகள் குறித்த ஜப்பானிய அரசாங்கத்தின் அதிகரித்த அளவிலான கரிசனை அத்தகைய மாசாக்கலை எடுத்து வரும் கைத்தொழில்களின் மீது வரிகளை அறவிடுதல் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளை பிரயோகித்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்கு வழிகோலியது. குறைந்தளவிலான தொழில்நுட்பத்தை கொண்ட பாரிய கைத்தொழில்கள் மாசாக்கலை எடுத்து வந்த மிக முக்கியமான மூலங்களாக இருந்தன. ஒழுங்கு விதி வழிமுறைகள் அத்தகைய கைத்தொழில்களின் உற்பத்திச் செலவினை அதிகரித்தன. சார்பு ரீதியில் காரணிகளின் மிதமிஞ்சிய நிலை காரணமாக அக்கைத்தொழில்கள் அனுபவித்து வந்த ஒப்பீட்டு அனுகூலம் ஒழுங்கு விதிகளின் காரணமாக ஓரளவுக்கு இழக்கப்பட்டதுடன், இந்நிலையில் குறைந்தளவிலான மாசாக்கலைக் கொண்ட தொழில்நுட்பத்துக்கான தேவை எழுந்தது. இதன் விளைவாக குறைந்த தொழில்நுட்ப மட்டத்தைக் கொண்ட கைத்தொழில்களிலிருந்து உயர் தொழில்நுட்பத்தைக் கொண்ட கைத்தொழில்களை நோக்கி ஒரு நகர்வு இடம் பெற்றது.

இந்த முதலீட்டு மூலவளங்களை எங்கிருந்து திரட்ட முடியும்? பயன்படுத்தப்படாத உள்நாட்டு வளங்கள் கிடைக்காத ஒரு நிலையிலும் வெளிநாடுகளிலிருந்து அவற்றைத் திரட்டிக் கொள்ள முடியாத நிலையிலும் உள்ள ஒரேயொரு மாற்று வழி, முதலீட்டு நோக்கங்களுக்கு என வளங்களை விடுவிப்பதற்கென தற்போதைய நுகர்வைக் குறைத்துக் கொள்வதாகும். பல நாடுகளில் பயன்படுத்தப்படாத ஊழிய வளங்களை நீர்ப்பாசன அமைப்புக்கள், பாதைகள் மற்றும் வடிகால் அமைப்புக்கள் போன்ற எளிமையான வடிவிலான மூலதன உருவாக்கத்துக்கென பயன்படுத்திக் கொள்ள முடியும். வெளிநாடுகளிலிருந்தான முதலீட்டு நிதிகளை அலுவல் சார் கடன்கள், கொடைகள் என்பவற்றின் வடிவிலும் நேரடி தனியார் முதலீடுகளாகவும் பெற்றுக் கொள்ள முடியும். இந்த ஒவ்வொரு விடயத்திலும் அரசிறைக் கொள்கை மிக முக்கியமான ஒரு பங்கினை வகிக்க வேண்டியுள்ளது. வெளிநாட்டுதவியைப் பெற்றுக் கொள்ளும் விஷயத்தில் அது பெருமளவுக்கு விவேகத்துடன் செயல்பட வேண்டியிருப்பதுடன் தனியார் வெளிநாட்டு முதலீடுகளைப் பொறுத்தவரையில் தேவையான கவர்ச்சி அம்சங்களை அது முன்வைக்க வேண்டியுள்ளது. எவ்வாறிருப்பினும், முதலீட்டு வளங்களில் பாரிய ஒரு பகுதியை தற்போதைய நுகர்விலிருந்தே பிரித்தெடுக்க வேண்டியுள்ளது. தனியார் மற்றும் பொதுச் சேமிப்புக்களிலிருந்து உள்நாட்டு மூலதன உருவாக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். மக்கள் தாமாகவே முன் வந்து பணத்தைச் சேமிப்பதற்கு உசிதமான ஒரு சூழ்நிலை நிலவி வந்தால் தனியார் துறையிலிருந்து அதிகரித்தளவிலான உள்நாட்டுச் சேமிப்புக்களை திரட்டிக் கொள்ள முடியும். பணவீக்கத்தை குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதன் மூலமும் வீட்டுச் சேமிப்புக்களை கவர்ந்திழுப்பதற்கும் அவற்றை உற்பத்தி சார் முதலீட்டு வழிகளில் நிதிப்படுத்துவதற்கும் பொருத்தமான நிதி நிறுவனங்களை வழங்குவதன் மூலமும் சேமிப்புக்களை அதிகரிப்பதற்கு உசிதமான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு அரசிறை மற்றும் நாணயக் கொள்கைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். சேமிப்புக்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதிலும் ஆடம்பர நுகர்வு நடவடிக்கைகளை ஊக்கமிழக்கச் செய்வதிலும் வரியிடல் மிக முக்கியமான ஒரு பங்கினை வகிக்க வேண்டியுள்ளது. கம்பெனித் துறையின் இலாபங்களை முதலீடுகளாக மேற்கொள்வதனை மேம்படுத்தும் பொருட்டு ஊக்குவிப்புத் திட்டங்களுக்கூடாக கம்பெனித் துறையின் மூலதன உருவாக்கத்தினை உயர்த்திக் கொள்ள முடியும்.

ஒரு வரிக் கொள்கையின் பிரதான குறிக்கோள் வறிய குடும்பங்களுக்கு பண மாற்றல்களை மேற்கொள்வதனை உள்ளிட்ட பொதுச் சேவைகளை வழங்குவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித மூலதனம் என்பவற்றில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் போதிய வருமானத்தை உருவாக்கக் கூடிய ஒரு முறைமையை வடிவமைத்துக் கொள்வதாகும். வரி அறவிடல், முடிவுப் பொருட்களினதும் அதே போல காரணி உள்ளீடுகளினதும் சார்பு ரீதியான விலைகளை மாற்றியமைப்பதன் காரணமாக மூலவள ஒதுக்கீட்டில் திரிபுகளை எடுத்து வருகின்றது. பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் மீதான வரி

களும் காரணி விலைகள் மீதான வரிகளும் வரிக்குப் பின்னரான விலைகள் மற்றும் வரிக்கு முன்னரான விலைகள் என இரு வகைகளைச் சேர்ந்த விலைகளை உருவாக்குகின்றன. பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் அதேபோல காரணிச் சொந்தக்காரர்களும் வரிக்குப் பின்னரான விலைகளின் அடிப்படையில் நிரம்பல் செய்ய வேண்டிய அளவினையும் கேள்வி அளவினையும் தீர்மானிக்கின்றனர். இது மூலவள ஒதுக்கீட்டில் ஒரு திரிபினை எடுத்து வருகின்றது. அதாவது, இதன் விளைவாக மேற்கொள்ளப்படும் மூலவள ஒதுக்கீடு சந்தையினால் நிர்ணயிக்கப்படும் மூலவள ஒதுக்கீட்டிலும் பார்க்க வேறுபட்டதாக உள்ளது. ஒரு சிறந்த வழிமுறை மோசமான திரிபுகளை குறைந்த மட்டத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றின் மீள் பகிர்வு வரி அறவிடலின் மற்றொரு முக்கியமான குறிக்கோளாக கருதப்படுகிறது. (பௌதீக மூலதனம், செல்வம், கல்வி மற்றும் மனித மூலதனம் போன்ற) மூலவளங்களின் உரித்து ஏற்றத்தாழ்வானதாகவே காணப்படுகின்றது. அந்த அடிப்படையில் தனிநபர்களின் வருமானத்திலும் ஏற்றத் தாழ்வு உள்ளது. பொருளாதார அமைப்பின் ஆரம்பத்தில் நிலவி வரக் கூடிய ஏதேனும் மீள் பகிர்வு சமமின்மைகளை சீராக்கம் செய்வதற்கான தனது சொந்தப் பொறிமுறையை சுதந்திரச் சந்தை அமைப்பு தன்னகத்தே கொண்டிருக்கவில்லை. தற்போதைய வருமானப் பகிர்வு முறை சமூக ரீதியில் ஏற்றுக் கொள்ள முடியாததாக இருந்து வந்தால், சமூக ரீதியில் ஏற்கத்தக்க வருமானப் பகிர்வொன்றினை சாதித்துக் கொள்ளும் பொருட்டு வரி அமைப்பு நெறிப்படுத்தப்படுதல் வேண்டும். பிரதானமாக பின்வருவனவற்றுக்கூடாக மீள்பகிர்வு செயல்படுத்தப்பட்டு வருகின்றது: (1) உயர் வருமானங்களுக்கு படிப்படியாக வரி அறவிடும் முறையைக் கொண்டுள்ளதும் குறை வருமானக் குடும்பங்களுக்கு ஒரு மானியத்தைக் கொண்டுள்ளதுமான ஒரு வரிமாற்றல் திட்டம்; இதன் பிரகாரம் (2) குறிப்பாக குறை வருமானக் குடும்பங்களுக்குப் பயனளிக்கும் பொது வசதிகளை நிதிப்படுத்துவதற்கென படிப்படியான அடிப்படையிலான வருமான வரிகளை உபயோகித்தல் மூலம் மீள் பகிர்வினை செயல்படுத்த முடியும். இறுதியாக, மீள் பகிர்வு நீதியினை சாதித்துக் கொள்வதற்கு (3) பெருமளவுக்கு உயர் வருமானப் பிரிவைச் சேர்ந்த நுகர்வோரினால் கொள்வனவு செய்யப்படும் பண்டங்கள் மீது பண்ட வரிகளை அறவிடுதலும் குறை வருமானப் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களினால் பெருமளவுக்கு நுகரப்பட்டு வரும் பண்டங்கள் மீது மானியங்களை வழங்குவதும்.

## இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியின் மீதான பொதுச் செலவினம்

இலங்கையில் 1948 அரசியல் சுதந்திரத்துக்கு முன்னர் அரசிறைக் கொள்கையின் பங்கு பொது நிர்வாகம், பொதுச் சுகாதாரம் மற்றும் இலவசக் கல்வி போன்ற அடிப்படைச் சமூக சேவைகளை வழங்குவதில் மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தது. அந்த வகையில், வருவாய்த் தேவை சிறு அளவினதாகவே இருந்தது. அக்காலப் பிரிவின் போது பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் உற்பத்தியிலும் விநியோகத்திலும் தனியார் துறை கவனம் செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த ஒரு நிலையில், அரசாங்கத்தின் பங்கேற்பு மிகக் குறைவானதாகவே காணப்பட்டது. சுதந்திரத்தின் பின்னரும் கூட 1954 இல் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட ஆறாண்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் வரையில் அரசாங்கம் தீவிரமான அரசிறைக் கொள்கை எவற்றையும் அமுல் செய்திருக்கவில்லை. வரையறுக்கப்பட்ட மூலவளங்களை பல்வேறுபட்ட பொதுத் துறை முதலீட்டுத் திட்டங்களில் குறைந்தபட்ச மட்டத்தில் உபயோகப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

எவ்வாறிருப்பினும், 1957 க்கும் 1977 க்கும் இடைப்பட்ட 20 வருட காலத்தின் போது அரசாங்கத்தின் அரசிறைத் தலையீட்டில் தீவிரமான அதிகரிப்பொன்றினை அவதானிக்க முடிகின்றது.

உற்பத்தி, விநியோகம் மற்றும் நிதிப்படுத்தல் என்பவற்றில் அரசாங்கத்தின் நேரடித் தலையீடு இடம் பெற்று வந்ததுடன், சமூக சேவைகள் மீதான அரசாங்க செலவினங்களிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. இவற்றின் விளைவாக அரசாங்கச் செலவில் விரிவாக்கம் ஏற்பட்டிருந்தது. தனியார் தொழில் முயற்சிகள் தேசியமயமாக்கப்பட்டமையும் பெரும் எண்ணிக்கையிலான அரச கூட்டுத்தாபனங்கள் ஸ்தாபிக்கப்பட்டமையும் பொதுத்துறையில் விரிவாக்கத்தினை எடுத்து வந்தது. பாரிய அளவிலான அரசாங்க செலவினங்களுடன் சமூக நலன்புரிச் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டு வந்தன. அதே வேளையில், குடித்தொகையில் இடம் பெற்ற உயர் வளர்ச்சி கல்வி, சுகாதார சேவைகள் மற்றும் சமூக நலன்புரிச் சேவைகள் என்பவற்றின் மீதான அரசாங்க செலவினத்தை உயர்த்தியது.

இந்த இரு தசாப்த காலப்பிரிவின் போது அரசாங்கத்தின் வீச்செல்லையும் நடவடிக்கைகளும் பெருமளவுக்கு அதிகரித்தன. புதிய தொழில்துறை, புது முயற்சிகளின் ஸ்தாபிதம், தனியார்துறை தொழில்முயற்சிகளின் தேசியமயமாக்கல் மற்றும் பொதுத் துறை ஏகபோகங்களின் உருவாக்கம் என்பன இந்நிலைமைக்கு வழிகோலியிருந்தன. பொதுத் துறை, கல்வி கற்ற இளைஞர்களுக்கு தொழில் பாதுகாப்பினையும் உயர் வேதனங்களையும் வழங்கிய ஒரு புகலிடமாக இருந்து வந்த சூழ்நிலையில் அரசாங்க வேலை வாய்ப்புக்களில் துரித அதிகரிப்பு ஏற்பட்டது. 1970களின் பின்னரைப் பகுதியளவில் முறைசார்ந்த தனியார் துறையுடன் ஒப்பிடும் பொழுது பொதுத் துறையின் அளவு சார்பு ரீதியில் பாரிய அளவினதாக இருந்து வந்ததுடன், பொதுத் துறை வேதனங்கள் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவுகள் என்பன அரசாங்கச் செலவினத்தின் கணிசமான ஒரு பாகத்தைக் கொண்டிருந்தன.

இலங்கையின் அரசிறைத் துறையில் முக்கியமான பல மாற்றங்களை அறிமுகம் செய்து வைக்கும் நோக்கத்துடன் 1977 இல் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் அரசிறைச் சுமையை தணிக்கும் பொருட்டு தனியார் துறை வழிப்பட்ட வளர்ச்சியை ஊக்குவிப்பது இவற்றில் ஒரு மாற்றமாகும். குடித்தொகையின் வறிய பிரிவினர் தொடர்பாக மட்டும் நலன்புரிச் செலவுகளை மேற்கொள்வதற்கூடாக அரசாங்க வரவு செலவுத்

திட்டத்தின் அளவைக் குறைப்பதும், அத்தியாவசியமற்ற பொதுச் செலவுகளை தடுப்பதும் இரண்டாவது மாற்றமாகும். பொதுத் துறை தொழில் முயற்சிகள் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் மீது தங்கியிருக்கும் நிலையை குறைத்து விடும் பொருட்டு, பொதுத் துறை தொழில் முயற்சிகள் கட்டுப்பாட்டு விலைகளைத் திருத்தியமைப்பது மூன்றாவது மாற்றமாகும். எவ்வாறிருப்பினும், தனியார் துறை வழிப்பட்ட வளர்ச்சியை தூண்டுவதற்கென உள்கட்டமைப்பு முதலீடுகளிலும் சமூக வசதி முதலீடுகளிலும் இணையான ஒரு அதிகரிப்பினை எடுத்து வர வேண்டியிருந்தது. தனியார் துறை இத்தகைய முதலீடுகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்க முடியாததனால் உள்கட்டமைப்பு வசதிகளையும் ஏனைய சமூக வசதிகளையும் வழங்கும் பொறுப்பினை அரசாங்கம் ஏற்க வேண்டியிருந்தது. பொருளாதாரச் சீர்திருத்தங்களையடுத்து அரசிறைச் சுமை ஓரளவுக்கு குறைக்கப்பட்ட போதிலும் 1980 களின் தொடக்க காலத்திலும் கூட மொ உ உ யின் விகிதம் என்ற முறையில் அரசாங்கத்தின் செலவினத்தில் தொடர்ச்சியான ஒரு விரிவாக்கம் இடம் பெற்று வந்தது. உள்கட்டமைப்பு வசதிகளின் உருவாக்கம் மற்றும் சமூக வசதிகளின் உருவாக்கம் என்பவற்றின் மீது அரசாங்கச் செலவினங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தமையே இதற்கான காரணமாகும்.

எவ்வாறிருப்பினும், 1990 களில் அரசாங்கச் செலவினத்தில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இவ்வீழ்ச்சிக்கு பல காரணங்கள் வழிகோலியிருந்தன. 1980களின் போது மேற்கொள்ளப்பட்ட பொதுத் துறை முதலீட்டு செய்திட்டங்கள் பூர்த்தியடைந்தமை, நட்டத்தில் இயங்கி வந்த பொதுத் துறை தொழில் முயற்சிகள் தனியார்மயமாக்கப்பட்டமை, 1980 களின் நடுப் பகுதியின் பின்னர் செயல்படுத்தப்பட்ட அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான அரசிறை உறுதிப்பாட்டு கொள்கைகளின் கீழ் உற்பத்தி சாராத அரச செலவினம் குறைக்கப்பட்டமை என்பனவே இதற்கு வழிகோலியிருந்தன. அரசிறை உறுதிப்பாட்டுக்கென மானியப்படுத்தப்பட்ட விலை முறையை ஒழிப்பதன் மூலமும், வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பயனாளிகளை மானியங்களை வழங்குவதற்கான இலக்குகளாகக் கொள்வதன் மூலமும் அரசாங்க நலன்புரிச் செலவுகள் கட்டுப் படுத்தப்பட்டன. பண்டங்களை சந்தை விலைகளில் வாங்கும் பொருட்டு மானியம் பணமாக வழங்கப்பட்டது. 1990 களின் தசாப்தத்தின் போது பிரதானமாக தனியார் துறை நிதி நிறுவனங்கள் நாட்டின் மூலை முடுக்களில் எல்லாம் ஊடுருவிச் சென்றதனையடுத்து நிதியியல் துறையிலான அரசாங்கத்தின் ஈடுபாடு குறைக்கப்பட்டது.

மேலும், அரசாங்கம், முன்னைய தசாப்தங்களுடன் ஒப்பிடும் பொழுது 1990 களில் முதலீடு மற்றும் வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம் என்பவற்றின் மீதான அதன் பங்கினையும் கணிசமான அளவில் குறைத்துக் கொண்டிருந்தது. நிர்மாணித்து, இயக்கி, உரிமையாக்கிக் கொள்ளல் (BOO) மற்றும் நிர்மாணித்து, இயக்கி, கைமாற்றிக் கொடுத்தல் (BOT) போன்ற முறைகளின் கீழ் உள்கட்டமைப்பு அபிவிருத்திச் செய்திட்டங்களில் தனியார் துறையின் பங்கேற்பினை அது ஊக்குவித்து வந்துள்ளது. தயாரிப்புக் கைத்தொழில்களிலான அரசாங்கத்தின் தலையீடும் 1970களின் அளவுகளுடன் ஒப்பிடும் பொழுது இப்பொழுது கணிசமான அளவில் குறைவடைந்துள்ளது. முதலீடுகளை விலக்கிக் கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்தின் விளைவாக பொதுத் துறை வேலை வாய்ப்புக்களிலும் ஒரு குறைவு ஏற்பட்டுள்ளது. எனவே, கடந்த இரு தசாப்த காலத்தின் போது பொருளாதார அபிவிருத்தியின் மீதான நேரடி அரசிறைத் துறையின் ஈடுபாடு கணிசமான அளவில் குறைவடைந்திருப்பதுடன் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நுகர்வோர் நிதி மதிப்பீட்டாய்வுகள் எடுத்துக் காட்டும் பாரியளவிலான வருமான ஏற்றத் தாழ்வுகள் இதற்கு சான்று பகர்வனவாக உள்ளன.

1970 களின் நடுப்பகுதியில் வருமானப் பகிர்வில் பெருமளவிலான ஒரு சமத்துவத் தன்மை கொண்ட போக்கொன்று நிலவி வந்தது. எனினும், குறிப்பாக 1980களின் போது இப்போக்கில் ஒரு தலைகீழ் மாற்றம் ஏற்பட்டிருந்தது. வருமானம் திரண்டிருக்கும் அளவினை சுட்டிக் காட்டும் குணக விகிதம் 1973 இல் 0.35 ஆக இருந்து 1978/79 இல் 0.44 ஆகவும், 1981/82 இல் 0.45 ஆகவும் 1986/87 இல் 0.46 ஆகவும் படிப்படியாக உயர்ந்து வந்திருப்பதனை இக்கால கட்டங்களில் நடாத்தப்பட்ட நுகர்வோர், நிதி ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. மொத்த வருமானத்தில் மிக வறிய 40 சதவீதக் குடும்பங்கள் 1973 இல் 19.3 சதவீதத்தைப் பெற்றிருந்தன. இது 1978/79 இல் 16.1 சதவீதமாகவும், 1981/82 இல் 15.3 சதவீதமாகவும், 1986/87 இல் 14.2 சதவீதமாகவும் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. எனவே, (பொதுத்துறையின் அளவைக் குறைத்து) பிரதானமாக தனியார் துறையின் விரிவாக்கத்துக் கூடாக உருவாக்கப்பட்ட வளர்ச்சியின் அனுகூலம் பெருமளவுக்கு ஏற்றத்தாழ்வான முறையில் பகிரப்பட்டுள்ளது போல் தோன்றுகின்றது. அரசாங்கம் அரசிறைக் கொள்கைக் கூடாக மூலவளங்களை வழங்கும் ஒரு நிறுவனமாக இருந்து வந்த வரையில் வருமானப் பகிர்வு பெருமளவுக்கு சமத்துவ இயல்பினைக் கொண்டிருந்தது. அரசின் பங்கு, வழங்குபவர் என்ற நிலையிலிருந்து வசதி செய்து கொடுப்பவர் என்ற நிலையை நோக்கி நகர்வடைந்ததனை அடுத்து, வருமானப் பகிர்வில் திடீரென ஏற்றத் தாழ்வு தோன்றியது.

எனினும், வருமானப் பகிர்விலான சமத்துவ நிலையில் ஒரு விருத்தி நிலை தோன்றியிருப்பதனை 1996/97 நுகர்வோர் நிதியாய்வு எடுத்துக் காட்டுகின்றது. பிரசுரிக்கப்பட்ட தற்காலிக முடிவுகளின் பிரகாரம் 1986/87 இல் 0.46 ஆக இருந்து வந்த குணக விகிதம் 1996/97 இல் 0.43 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. அதே வேளையில், மிக வறிய 40 சதவீத குடும்பங்கள் நாட்டின் மொத்த வருமானத்தில் பெற்றுக் கொண்ட பங்கு 1986/87 இல் 14.2 சதவீதத்திலிருந்து 1996/97 இல் 15.3 சதவீதமாக அதிகரித்திருந்தது. தனியார் துறை வேலை வாய்ப்புக்களில் ஏற்பட்டு வரும் விரிவாக்கத்துடன் இணைந்த விதத்தில் கசிந்து செல்லும் தாக்கம் இடம் பெற்று வருவதனை இது குறித்துக் காட்டுவதாகக் கொள்ளலாம். எவ்வாறிப்பினும், சமத்துவத்துக்கும் அரசிறைக் கொள்கையின் அபிவிருத்திப் பங்குக்கும் இடையில் நிலவி வரும் மிக நெருக்கமான உறவினை மறுக்க முடியாது.

# சுதந்திர சந்தைகள், அபிவிருத்தி மற்றும் மூன்றாவது உலகம்

*கலாநிதி (திருமதி) டி. என். பி. குணவர்தன*
*(பொருளியல் துறை, பேராதனை பல்கலைக்கழகம்)*

பொருளியலாளர் ஒருவரின் அபிப்பிராயத்தின் செல்லுபடியாகும் தன்மை குறித்த ஜோசப் ஸ்டிக்லின்ஸ் என்பாரின் ஒரு குறிப்புரை இக்கலந்துரையாடல் தொடர்பாக பொருத்தமானதாக உள்ளது:

"அரசு மற்றும் தனியார் துறை என்பவற்றின் பொருத்தமான பங்குப் பணிகள் குறித்து பொருளியல் விஞ்ஞானம் என்ன கூறியிருக்கிறது என்பதுடன் சம்பந்தப்பட்ட வகையிலேயே எனது குறிப்பு அமைகின்றது. பல பொருளியலாளர்கள் உறுதியான அபிப்பிராயம் ஒன்றை வைத்திருக்கும் ஒரு விடயமாக அது உள்ளது. ஆனால், நீங்கள் ஒரு வாடகை வண்டிச் சாரதியிடம் கேட்டாலும் கூட அவரும் ஒரு அபிப்பிராயத்தை முன் வைப்பார். இங்குள்ள கேள்வி, பொருளியலாளர்கள் என்ற முறையில் எமது அபிப்பிராயம் வாடகை வண்டிச் சாரதிகளின் அபிப்பிராயங்களிலும் பார்க்க கவனமான முறையில் செவிமடுக்கப்பட வேண்டுமா என்பதாகும்."

இக்குறிப்புரையின் கருத்து பொருளியலாளர் ஒருவரின் அபிப்பிராயத்தை செவிமடுக்க வேண்டியதில்லை என்பதல்ல: அதற்கு மாறாக, ஒரு சாதாரண நபரின் அபிப்பிராயத்திலும் பார்க்க பொருளியலாளரின் அபிப்பிராயம் சிறந்ததாக இருந்து வருவதற்கான காரணம் அது பொருளாதாரக் கோட்பாடு மற்றும் அனுபவ ரீதியான சான்று என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருப்பதனாலேயாகும்.

பொருளியலாளர்கள் என்ற முறையில் நாங்கள் அபிவிருத்தி வரலாற்றிலிருந்தும், அபிவிருத்திக் கோட்பாடு குறித்து பெருகி வரும் எழுத்தாக்கங்களிலிருந்தும் சுதந்திரமான சந்தைகள் மற்றும் அபிவிருத்தி என்பன குறித்து எதனைக் கற்றுக் கொண்டுள்ளோம் என்பதனை வாசகர்களுக்கு எடுத்து விளக்குவதற்கு இக்கட்டுரை முயற்சிக்கின்றது. இந்தத் தலைப்பு தொடர்பாக ஒரு சில அண்மைக் கால கட்டுரைகள் மற்றும் முன்னைய கட்டுரைகள் என்பவற்றின் பங்களிப்புக்களை தொகுத்து வழங்குவதன் மூலம் அது மேற்கொள்ளப்படுகின்றது. இது இந்த விடயம் குறித்த எழுத்தாக்கங்களின் அனைத்துமடங்கிய ஒரு மீளாய்வாக இருக்கவில்லை. மேலும், இக்கட்டுரையின் தலைப்பில் முன்வைக்கப்பட்டுள்ள கேள்விக்கு அது ஒரு விரிவான பதிலை அளிக்கவுமில்லை. பொருளாதார அபிவிருத்தியில் சந்தைகள் வகித்து வரும் பங்குகள் குறித்தும், அரசு வகித்து வரும் பங்கு குறித்தும் அறிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டுள்ள இலங்கையர்களுக்கு அது புதிய தகவல்களை வழங்கி அவர்களுடைய சிந்தனையை தூண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1977 இல் இலங்கையின் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதன் பின்னணியிலிருந்த அணுகுமுறை பொருளாதாரத்தின் மூலவளப் பகிர்வினை சந்தைப் பொறிமுறை நிர்ணயிக்க வேண்டும் என்பதும், அரசாங்கத் தலையீடு குறைந்தபட்ச மட்டத்தில் வைத்திருக்கப்பட வேண்டும் என்பதுமாகும். மேற்கொள்ளப்பட்ட கொள்கைச் சீர்திருத்தங்களின் தொகுதி பெரும்பாலான உள்நாட்டு விலைக் கட்டுப்பாடுகளை நீக்குதல், வர்த்தகப் பாதுகாப்புக்களை குறைத்தல், செலாவணி விகிதத்தை ஒருமுகப்படுத்துதல், ரூபாவைப் பெறுமதி இறக்கம் செய்தல் மற்றும் நிர்வகிக்கப்பட்ட மிதக்கும் செலாவணி விகிதம் ஒன்றை நோக்கி நகர்ந்து செல்லல் என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தது. நிதித் துறையின் மீதான நிர்ப்பந்தங்கள் தளர்த்தப்பட்டதுடன் மூலதனச் சந்தையின் மீதான பல கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. இக்கொள்கைச் சீர்திருத்தங்கள் அதனையடுத்து வந்த காலத்தில் "வாஷிங்டன் கருத்தொற்றுமை" என வர்ணிக்கப்பட்ட விடயத்துக்கு இணையானவையாக இருந்தன. இலங்கையில் 1977 க்கு முன்னர் பின்பற்றப்பட்டு வந்த கொள்கைகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச விலைக் கட்டுப்பாடுகள், ஊக்குவிப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றின் வடிவிலான பொருளாதாரத்தின் மீதான அரச நெறிப்படுத்துதல், வரையறுக்கப்பட்ட அளவிலான வெளி நாட்டு வர்த்தகம், அரச தொழில் முயற்சிகளின் ஸ்தாபிதம் மற்றும் முகாமை என்பவற்றுக்கூடாக அரச வழிப்பட்ட கைத்தொழில்மயமாக்கல் என்பவற்றை வலியுறுத்தி வந்தன. 1977 இல் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட கொள்கைச் சீர்திருத்தங்கள் முற்றிலும் மாறுபட்டவையாக இருந்தன.

இறக்குமதிப் பிரதியீட்டு உத்தியைப் பின்பற்றிச் செல்லல் அல்லது கட்டுப்பாட்டுடன் கூடிய வர்த்தகக் கொள்கைகளுடன் துறை வாரியான முதலீட்டினை நெறிப்படுத்துவதற்கென விலைகளை உபயோகித்துக் கொள்ளல் போன்ற வழிமுறைகளை இலங்கை மட்டுமே பின்பற்றிவரவில்லை, மேலும், மேலே எடுத்துக் கூறிய சந்தை வழிப்பட்ட சீர்திருத்தங்களை இலங்கை மட்டுமே தனித்து நின்று செயல்படுத்தவுமில்லை. இச்சீர்திருத்தங்களில் சிலவற்றை அதனையடுத்து வந்த காலப் பிரிவில், அவ்விதம் செய்யும் என எதிர்பார்த்திருக்க முடியாத இந்தியா, சீனா போன்ற நாடுகளும் கூட மேற்கொண்டன. எனவே, இங்கு எழுப்பப்பட வேண்டிய கேள்வி இதுதான்: (குறிப்பாக 1960 களிலும் 1970களிலும்) முதல் தொகுதிக் கொள்கைகளை பின்பற்றும் ஒரு போக்கு வளர்முக நாடுகளிடையே நிலவி வந்தது ஏன்? இரண்டாவது "கருத்தொற்றுமை" யை நோக்கிய ஒரு நகர்வு ஏற்பட்டது ஏன்?

அபிவிருத்திப் பொருளாதாரத்தில் இடம்பெற்று வரும் பொதுப்படையான விவாதத்துக்குள் இந்த இரு கொள்கை அணுகுமுறைகளையும் எடுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்க

மாகும். அபிவிருத்திக் கோட்பாட்டுக்கு ஆரம்ப காலத்தில் பங்களிப்பு நல்கியவர்கள், சந்தைப் பொறிமுறையின் மீது தங்கியிருப்பதனால் மூன்றாவது உலக நாடுகளில் தோன்றக் கூடிய பிரச்சினைகளை வலியுறுத்தினர். வளர்முக நாடுகளில் பரவலான முறையில் சந்தை முறிவுகள் இடம்பெற்று வருகின்றன என வாதிட்ட அவர்கள், இவை அரசாங்கத் தலையீட்டினை நியாயப்படுத்துகின்றன என்றும் கூறினர். அதன் பின்னர் அரச தலையீட்டின் பிரச்சினைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதுடன், அதன் விளைவாக "அரசாங்கத்தின் தோல்வி" என்ற பதம் தோன்றியுள்ளது. இன்றும் கூட இந்த விவாதம் இடம்பெற்று வரும் அதே வேளையில், பல சித்தாந்தப் பள்ளிகளையும் சேர்ந்தவர்கள் ஏற்றுக்கொள்ளும் பொதுவான பல விடயங்கள் உள்ளன. இக்கட்டுரையில் சுதந்திர சந்தைகள் என்பதன் பொருள் என்ன என்பதனை விளக்குவதற்கு முதலில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. அதனையடுத்து, சந்தை முறிவுகள் குறித்தும், அரச தலையீட்டுக்கு ஆதரவாகவும் எதிராகவும் பொருளியலாளர்கள் முன்வைத்து வரும் வாதப் பிரதிவாதங்களையும் நாங்கள் கவனத்தில் எடுக்கின்றோம். மேலும், அபிவிருத்திக் கோட்பாடு மற்றும் வரலாறு என்பவற்றிலிருந்து ஒரு சில படிப்பினைகளையும் நாம் உதாரணங்களாகத் தருகின்றோம். இறுதியாக, அனைவரும் உடன்படக் கூடிய துறைகளை நாங்கள் அடையாளம் காட்டுகின்றோம்.

### சுதந்திர சந்தைகள்

சந்தைகள் சிறந்த முறையில் செயல்பட்டு, பூரணத்துவமான போட்டி நிலையில் இயங்கி வரும் பொழுது (ஆகக் குறைந்தது செயல்திறன் கண்ணோட்டத்திலாகிலும்) மிகச் சிறந்த மூலவள ஒதுக்கீடு இடம்பெறுகின்றது. இது ஒரு மறைமுகக் கரத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது என அடம் ஸ்மித் கூறினார். நுகர்வோர் உச்ச மட்டத்தில் திருப்தியடைவதுடன், உற்பத்தியாளர்கள் சுதந்திரமான போட்டிச் சந்தைப் பொறிமுறையொன்றுக்குள் தமது இலாபங்களை உச்ச மட்டங்களில் பெற்றுக் கொள்கின்றார்கள். (அ) உற்பத்தியாளர்களிடையே திறமையான முறையில் மூலவள ஒதுக்கீடு (ஆ) உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை நுகர்வோரிடையே திறமையான முறையில் விநியோகித்தல் மற்றும் (இ) உற்பத்திப் பொருட்களின் திறமையான கலவை என்பவற்றைக் கொண்ட ஒரு சமநிலை தோன்றுகின்றது. இது நலன்புரிப் பொருளாதாரங்களில் காணப்படும் ஒரு பொதுவான போக்காகும். இங்கு சந்தைகள் சிறந்த முறையில் செயல்படுவதில்லையென நாங்கள் அவசரமாக முடிவுக்கு வரும் காரணமாக இலங்கையைப் போன்ற நாடுகளில் இவ்விடயத்தை நாங்கள் பார்க்கத் தவறி விடுகின்றோம். அவ்வாறு செய்வதன் மூலம் சந்தையின் முக்கியமான சில நடத்தைக் குணாம்சங்களை நாங்கள் புறக்கணித்து விடுகின்றோம்.

சந்தைகள் மூலவளங்களை திறமையான முறையில் ஒதுக்கீடு செய்வது ஏன் என்பதனைப் புரிந்து கொள்ளும் பொருட்டு, பரிபூரண போட்டிச் சந்தைகள் குறித்து பொருளியல் பாடப் புத்தகங்கள் என்ன கூறுகின்றன என்பதனை நோக்குவது பயனுள்ளதாகும். இங்குள்ள முதன்மையான அம்சம் போட்டியாகும்; அல்லது ஏகபோக அதிகாரம் இல்லாதிருப்பதாகும். ஏனெனில், சுதந்திரமான முறையில் போட்டி இடம்பெற்று வரும் சந்தைகளில் இயங்கி வரும் உற்பத்தியாளர்கள் விலைகளை ஏற்பவர்களாக இருந்து வருவதுடன், நிரம்பல் விலைகள் எல்லைச் செலவுகளுக்கு அண்மித்தவையாக இருந்து வருகின்றன. உட்பிரவேசத்துக்கு தடங்கல்கள் இல்லாத நிலையில் அதிகளவு நிறுவனங்கள் சந்தையில் பிரவேசிப்பதுடன், செலவுகள், சாத்தியமான ஆகக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்கப்படுவதுடன், மூலவளங்கள் அதி உச்ச மட்டத் திறமையுடன் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. எனவே, ஒரு போட்டிச் சந்தையில் நுகர்வோர் செலுத்தும் விலை உற்பத்தியாளரின் சந்தர்ப்பச் செலவாக மட்டுமே இருந்து வருகின்றது. மேலும், சமூகத்தின் கண்ணோட்டத்தில் போட்டி வீண் விரயத்தை குறைப்பதுடன், காரணிகளுக்கு அவற்றின் உற்பத்தித் திறனுக்கு ஏற்ற விதத்தில் வெகுமதிகளையும் அளித்து வருகின்றது. இங்கு நாம் அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படைக் கோட்பாடு தனியார் துறையிலும் சரி பொதுத் துறையிலும் சரி போட்டி விரும்பத்தக்கது என்பதாகும்.

அனுகூலங்களுடன் கூடிய போட்டி தொடர்பான இலங்கையின் ஓர் உதாரணம் (சிலருரிமை நிலை நிலவி வந்தாலும் கூட) இடம் பெயர் தொலைபேசி வசதிகளுக்கான சந்தையாகும். தொடக்கத்தில் ஏகபோக உரிமை நிலவி வந்த சூழ்நிலையில் தொலைபேசிக்கான விலையும் அழைப்புக்களுக்கான கட்டணங்களும் பெருமளவுக்கு உயர்வாக இருந்து வந்தன. பெரும் செல்வந்தர்களினால் மட்டுமே இடம் பெயர் தொலைபேசியொன்றை உபயோகிக்கக்கூடிய நிலை காணப்பட்டது. மேலும், பல கம்பெனிகள் சந்தையில் பிரவேசித்த பொழுது விலைகள் செங்குத்தாக வீழ்ச்சி கண்டன. அவை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருவதுடன், கட்டுப்படியாகக் கூடிய விலைகளிலும் இப்பொழுது கிடைத்து வருகின்றன. இது தவிர, இந்த சிலருரிமை போட்டிப் பின்னணியில் கம்பெனிகள் தமது சந்தைப் பங்கினை அதிகரித்துக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் பொழுது இந்த வசதிகளின் புவியியல் பரப்பளவு படிப்படியாக விரிவடைந்து வருவதுடன், அதிகமதிகமான மக்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையும் காணப்படுகின்றது.

### சந்தை முறிவும் அரச தலையீட்டுக் கான காரணங்களும்.

நிக்கலஸ் ஸ்டேர்ன் என்பவர் அரச தலையீட்டுக்கு பல காரணங்கள் இருப்பதாகக் குறிப்பிடுகிறார். முதல் காரணம் பொதுவான நலன்புரிப் பொருளாதாரங்களிலிருந்து தோன்றுகிறது. வெளிக் காரணிகள் நிலவி வருதல், காணாமல் போகும் சந்தைகள் மற்றும் பொதுப் பண்டங்கள், அதேபோல பூரணத்துவமற்ற தகவல், ஏகபோக அதிகாரம் மற்றும் பரிமாணத்திற்கேற்ப அதிகரித்தளவிலான ஆதாயங்கள் என்பவற்றின் விளைவாக சந்தை முறிவு ஏற்படுகிறது. சந்தைகள் சமூக ரீதியில் உச்ச மட்ட விளைவுகளுக்கு தாமே வழிகோலுவதில்லை. அரசாங்க தலையீட்டுக்கான உள்ளார்ந்த ஆற்றல் இருந்து வருகின்றது.

இரண்டாவது காரணம் வறுமை மற்றும் தரித்திர நிலை என்பவற்றை கவனத்தில் எடுக்கின்றது. ஒருவர் இதனை வருமான மீள்பகிர்வு வரையில் விரிவாக்கிக் கொள்ள முடியும். இங்குள்ள மிக முக்கியமான விடயம், குறிப்பிட்ட ஒரு வருமானப் பகிர்வு மாதிரிக்குள் மட்டுமேயே சந்தைகள் செயல்

திறனுடன் இயங்கி வருகின்றன என்பதாகும். அரசாங்கங்கள் வருமானத்தை மீள்பகிர்வு செய்ய விரும்பக் கூடும். ஆகக் குறைந்தது வறுமையை ஒழிக்கும் பொறுப்பினையாவது அது கொண்டுள்ளது. இதனை எவ்வாறு மேற்கொள்வது என்பது விவாதத்துக்குரிய மற்றொரு விடயமாகும்.

ஸ்டேர்னின் மூன்றாவது காரணம் அடிப்படை உரிமைகளை கவனத்தில் எடுக்கின்றது. அபிவிருத்தி, உணவு, உறைவிடம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு போன்ற உயிர் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான மானிடத் தேவைகளை வழங்க வேண்டும் என வாதிட்டு வரும் அடிப்படைத் தேவைகள் அணுகுமுறையை ஒத்ததாக இது உள்ளது. கல்வி மற்றும் சுகாதாரம் என்பவற்றுக்கான உரிமையை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு அரசாங்கம் அவற்றில் தலையிட வேண்டும் என ஸ்டேர்ன் வாதிடுகிறார்.

நான்காவது காரணம் தீங்குகளிலிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்வதாகும். இந்த வகையில் அரசாங்கங்கள் போதை வஸ்துக்கள் போன்றவற்றை தடை செய்வது மூலம் அவற்றுக்கு அடிமையாகி சீரழிவதிலிருந்தும் தனி நபர்களை பாதுகாக்கின்றது. தனி நபர்கள் வருங்காலத்துக்கென தற்பொழுது சேமிப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என நிர்ப்பந்திக்கும் கட்டாய ஓய்வூதியத் திட்டங்கள் இதற்கான மற்றுமொரு உதாரணமாகும். இறுதியாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பினைப் பொறுத்தவரையில் வருங்கால தலைமுறையினருக்கு பயன்கள் கிட்டுவதனை உத்தரவாதப்படுத்துவதற்கென அரசாங்கங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த 5 காரணங்களும் இணைந்து அரசாங்கங்கள் தலையீட்டினை மேற்கொள்ள வேண்டிய நிலைமைகளின் விரிவான பட்டியலொன்றை முன்வைக்கின்றன. ஒரு சில புதிய சாஸ்திரியப் பொருளியலாளர்கள் இவற்றில் ஒரு சில காரணங்கள் மட்டுமே வலுவானவை என ஏற்றுக்கொள்ளக் கூடும். மேலும், அபி விருத்தி வட்டாரங்களில் அரசாங்கத் தலையீட்டுக்கு இக் காரணங்கள் போதுமானவை என்பது குறித்த ஒரு பொதுவான கருத்தொற்றுமை நிலவி வருகின்றது.

முதலில் இவற்றில் இரண்டு காரணங்களை நாம் பரிசீலனைக் குட்படுத்துவோம். சந்தை முறிவு தொடர்பான முதல் காரணத்தை நோக்குவோம். நலன்புரி பொருளாதாரத்தை நோக்கும் பொழுது, பொதுச் சமநிலையின் இரண்டாவது மிகச் சிறந்த நிலை குறித்த கோட்பாடு, உச்சமட்டப் பயனை சாதித்துக் கொள்வதற்கான நிபந்தனைகளில் ஒன்றினை நிறைவேற்றிக் கொள்ள முடியாதவிடத்து உச்சமட்ட நிலை தொடர்பாக நாங்கள் புதிய நிலைமைகளைப் பெற வேண்டியிருப்பதுடன், அவற்றைத் திருப்திப்படுத்தவும் வேண்டும். உதாரணமாக, ஒரு சந்தையில் பூரணத்துவமற்ற போட்டி இருந்து வந்தால் ஏனைய சந்தைகளில் நிலவும் போட்டி அவசியமாகவே எமக்கு இரண்டாவது மிகச் சிறந்த தீர்வினை வழங்க மாட்டாது. அகற்ற முடியாத விதத்தில் தற்பொழுது ஒரு திரிபு நிலை நிலவி வரும் பொழுது சமூக நலனை 'விருத்தி செய்வதற்கு நாம் மற்றொரு திரிபினை அதற்கு சேர்க்க வேண்டுமா? துரதிர்ஷ்டவசமாக பொருத்தமான தலையீட்டு முறைகளை வடிவமைப்பது இலகுவான காரியமாக இருந்து வரவில்லை. பொருத்தமான இரண்டாவது கொள்கையை உருவாக்குவதற்கு முதல் தரமான ஒரு பொருளியலாளர் அவசியம் என ஹரி ஜோன்சன் குறிப்பிட்டுள்ளார். எனினும், அத்தகைய கொள்கைகள் பொதுவாக நான்காவது சிறந்த பொருளியலாளர்களினால் வடிவமைக்கப்பட்டு வருவதுடன் மூன்றாவது சிறந்த நிர்வாகிகளினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தலையீட்டுக்கான இரண்டாவது காரணத்தைப் பொறுத்தவரையில் பொருளாதாரக் கோட்பாட்டிலிருந்து நாங்கள் தெளிவான வழிகாட்டு நெறிமுறைகளைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. இரண்டாவது நலன்புரிக் கோட்பாடு, குறிப்பிட்ட சில நிலைமைகளின் கீழ் போட்டி சமநிலையாக திறமையான மூலவள ஒதுக்கீட்டினை சாதித்துக் கொள்ள முடியும் என வலியுறுத்துகின்றது. இது குறிப்பிட்ட ஒரு பொருள் தொடர்பான அல்லது நலன்புரிச் சேவையின் விநியோகம் தொடர்பான அளவுகோல் எவ்வாறாக இருந்து வந்த போதிலும் அதனை சாதித்துக் கொள்வதற்கு ஒருவர் போட்டிச் சந்தைகளை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதனையே குறிக்கின்றது. சந்தை முறையில் விலைகள் இரு பங்குகளை வகித்து வருகின்றன: ஒதுக்கிக் கொடுத்தல் மற்றும் விநியோகித்தல். விலைகளின் ஒதுக்கும் பங்கு சார்பு ரீதியான தட்டுப்பாட்டினை சுட்டிக் காட்டுவதாகவே உள்ளது. பல்வேறுபட்ட பண்டங்களை பல்வேறுபட்ட முகவர்கள் எந்தளவில் கொள்வனவு செய்ய முடியும் என்பதை நிர்ணயிப்பதே விநியோகப் பங்கின் பணியாகும். இரண்டாவது நலன்புரிக் கோட்பாட்டின் கருத்து விலைகள் தட்டுப்பாட்டினை பிரதிபலிக்க வேண்டும் என்பதாகும். செல்வத்தின் எந்த ஒரு தொகையான மாற்றலின் மூலமும் விநியோகக் குறிக்கோள்களை சாதித்துக் கொள்ள முடியும். இது திரிபுத் தன்மை அற்றதாகும். ஏனெனில், ஒரு தொகை மீள் பகிர்வின் மூலம் திறமையான வள ஒதுக்கீட்டினை சாதித்துக் கொள்ள முடியும். இந்த வகையில், நாம் வறியவர்களுக்கு உணவளிக்க வேண்டுமானால் விலைக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக (உணவு முத்திரைகள் போன்ற) பொருட்களின் வடிவிலோ அல்லது பண வடிவிலோ ஒரு தொகையை அவர்களுக்கு மாற்றல் செய்து கொடுப்பது போதுமானது என பொருளாதாரக் கோட்பாடு எமக்குக் கூறுகின்றது.

## அபிவிருத்திக் கோட்பாடு

இந்த விடயம் குறித்து அபிவிருத்திக் கோட்பாடு என்ன கூறுகின்றது என்பதனை இப்பொழுது பார்ப்போம். இது எம்மை அமைப்பியல்வாதிகள் அல்லது அபிவிருத்திப் பொருளியல் சிந்தாந்தப் பள்ளி அல்லது "நவீன அபிவிருத்தி முன்னோடிகள்" என அடல் மன் மற்றும் மொரிஸ் என்போர் அழைக்கும் தரப்பினரின் வாதங்களுக்கு இட்டுச் செல்கின்றது. "முதலீட்டுப் பற்றாக்குறை, உள்கட்டமைப்பு வசதிகளின் குறைபாடு, பூரணத்துவமற்ற தார நோக்கு, முழுமை பெறாத தொலைந்து போன சந்தைகள் என்பன துறைகளுக்கிடையிலான முறையான ஒழுங்கிலான வள மாற்றங்களை தடுத்து நிறுத்துகின்றன. இது தனி நபரின் இலாப உச்சமாக்கல் நடவடிக்கைக்கு எதிராக இடம் பெற்று வருவதுடன், பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக அமைப்பியல் வாதியின் அணுகுமுறைக்கான தளத்தினையும் அளிக்கின்றது." வளர்முக நாடுகள் குறைந்த மட்ட சமநிலைப்

பொறியொன்றுக்குள் சிக்கியுள்ளன. இது குறைந்த மட்ட பௌதீக மூலதனத்தில் இடம் பெறுவதுடன், குறைந்த மட்ட மூலதனத் திரட்டல் மற்றும் மல்தூஸியஸின் குடித்தொகை வளர்ச்சி என்பவற்றினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. கைத்தொழில் உற்பத்தி தொழில்நுட்ப பகுபடா நிலைகளுக்கு ஆளாகி இருப்பதுடன், இது வெளிக் காரணிகளின் செல்வாக்குக்கு வழி கோலுகின்றது. ஒருங்கிணைப்பில் காணப்படும் தோல்விகள் நாடுகள் தமது குறைந்த வருமான மட்டப் பொறியிலிருந்து தப்பிச் செல்வதனை கடினமாக்கியுள்ளன.

இச்சித்தாந்தப் பள்ளியின் சிந்தனை பகவதி மற்றும் குரூகர் போன்ற புதிய சாஸ்திரிய அபிவிருத்திக் கோட்பாளர்களின் சிந்தனையிலும் மாறுபட்டதாக உள்ளது. பின்னர் குறிப்பிடப்பட்டவர்களை "வர்த்தகம் போதுமானது" சித்தாந்தப் பள்ளியைச் சேர்ந்தவர்கள் என அடல்மன் மற்றும் மொரிஸ் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். சர்வதேச வர்த்தகம், குறைந்த உள்நாட்டுக் கூட்டு மொத்தக் கேள்விக்கு பதிலீடு செய்ய முடியும் என அவர்கள் வலியுறுத்துகின்றனர். நிலையான பொருளாதார வளர்ச்சியையும் அமைப்பு ரீதியான மாற்றத்தையும் எடுத்து வருவதற்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச தாராளமயமாக்கல் போதுமானதாகும். நவீன அபிவிருத்தி முன்னோடிகள் இக்கண்ணோட்டம் தொடர்பாக பின்வரும் பிரச்சினைகளைக் கொண்டுள்ளன: (அ) பொருளாதாரங்களை விருத்தி செய்வதற்காக வர்த்தகத்துக்கு அவசியமான இறக்குமதி மற்றும் வர்த்தக அசைவுகள் தொடர்பான நியதிகள் என்பன குறித்து அவர்கள் நம்பிக்கையற்றவர்களாக உள்ளனர். மேலும், (ஆ) (1) மூலவளங்களின் துறைகளுக்கிடையிலான ஒதுக்கீட்டினை விலை சாராத தடங்கல்கள் தடுத்து நிறுத்தும் என்றும் (2) ஒருங்கிணைக்கப்படாத முதலீடுகள் பொருளாதாரத்தை தொடர்ந்தும் குறைந்த மட்ட சமநிலைப் பொறியில் வைத்திருக்கும் என்றும் (3) செய்வதன் மூலம் பழகிக் கொள்ளல் என்பது குழந்தைப் பருவக் கைத்தொழில்களின் பாதுகாப்பைக் குறிக்கின்றது என்றும் (4) போட்டித் திறன் மிக்க உள்நாட்டுக் கைத்தொழில் எழுச்சியடைவதற்கு பௌதீக மற்றும் சமூக உள்கட்டமைப்பு வசதிகள் அவசியம் என்றும் சுட்டிக் காட்டினர்.

வளர்முக நாடுகள் இறுதியில் போட்டித் திறன் கொண்ட உள்நாட்டுச் சந்தைகளை கொண்டிருக்கும் என நவீன அபிவிருத்தி முன்னோடிகள் எதிர்பார்க்கின்றனர் என்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும். இதனை எவ்வாறு சாதித்துக் கொள்வது என்ற விடயம் குறித்து மட்டுமே அவர்கள் புதிய சாஸ்திரியப் பொருளியல் கோட்பாட்டாளர்களிடமிருந்து வேறுபட்டிருந்தனர். மேலும், "மனித மூலதனம் போதுமானது." என்ற சித்தாந்தப் பள்ளியைச் சேர்ந்தவர்களின் கருத்திலிருந்தும் இவர்கள் மாறுபட்டிருந்தனர். குறைந்த மனித மூலதன வளமே வளர்ச்சிக்கான முதன்மையான இடையூறாக இருந்து வருகின்றது என இவர்கள் கருதுகின்றனர். இச் சித்தாந்தப் பள்ளியைச் சேர்ந்த கோட்பாட்டின் கொள்கை வழிமுறை, பொருளாதாரத்தை குறைந்த வளர்ச்சி நிலையிலிருந்து உயர் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு அரசாங்கங்கள் செய்யவேண்டியது மனித மூலதனத்திலும் அறிவிலும் முதலீடுகளை மேற்கொள்வதாகும்.

## அரசாங்கத்தின் தோல்வி

அரசாங்கத்தின் கொள்கைத் தோல்வி என்றும் அறியப்படும் இந்த விடயம், அரசாங்கக் கொள்கை சந்தையிலும் பார்க்க .சிறந்த முறையில் செயற்படாதிருக்கும் ஒரு நிலைமையை குறித்துக் காட்டுகிறது. சுதந்திர சந்தைகளின் கீழ் எடுத்து வரப்படும் சமூக ரீதியிலான உச்சமட்ட மூலவள ஒதுக்கீட்டினை முழுமையான திட்டமிடலின் கீழும் சாதித்துக் கொள்ள முடியும். திட்டமிடலாளர்கள் சமூக ரீதியில் உச்ச மட்ட பெறுபேற்றினை எடுத்து வந்த விலைகளைக் கண்டறிந்து, இவ்விலைகளுக்கு எதிர்விளைவு காட்டுமாறு பொருளியல் முகவர்களைத் தூண்டக் கூடியதாக இருந்து வந்தால் அதன் விளைவாக சமூக ரீதியில் உச்ச மட்ட விளைவு கிடைக்கும்.

அரசாங்க நிர்வாக அமைப்பு தானே ஒரு அக்கறைக் குழுவாக இருந்து வருவதுடன், மத்தியமயப்படுத்தப்பட்ட ஓர் அமைப்பில் தனிநபர்களுக்கு ஊக்குவிப்புக்கள் கிடைப்பதில்லை. மேலும், நிர்வாகத்தின் நெகிழ்வற்ற தன்மை காரணமாக நுகர்வோர் விருப்புக்கள் குறித்த போதிய தகவல்கள் அரசாங்கத்துக்கு கிடைப்பதில்லை. இவற்றின் காரணமாகவே அரசாங்கத் தோல்வி இடம் பெறுகிறது. இதன் விளைவாக தனியார் துறை அக்கறைக் குழுக்கள் அரசாங்க அனுசரணையைப் பெற முயற்சிப்பதுடன், இலஞ்சத்துக் கூடாக கொள்கையின் மீது செல்வாக்குச் செலுத்த முயற்சிக்கின்றன. அத்தகைய நடவடிக்கைகள் வாடகையைத் தேடும் நடத்தை என அறியப்படுகிறது.

எனவே, சந்தைத் தோல்வி தொடர்பான பிரச்சினையை அரசாங்கத்தின் தோல்வி தொடர்பான பிரச்சினையின் பின்புலத்தில் வைத்து நோக்குதல் வேண்டும். துரதிர்ஷ்டவசமாக வாடகையைத் தேடும் நடத்தையின் அளவை நிர்ணயித்துக் கொள்ள முடியாதவர்களாக நாங்கள் இருந்து வருகிறோம். அதன் காரணமாக அது எவ்வளவு பெரிய பிரச்சினையாக உள்ளது என்பதும் எமக்குத் தெரியவில்லை. மறுபுறத்தில், அரசாங்கத் தோல்வி குறித்த ஒரு திட்டவட்டமான பிரச்சினை இருந்து வருகின்றது என்பதனை எழுத்தாக்கங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே, சந்தைகள் தோல்வியடைவதனால் அரசாங்கம் தலையிட வேண்டும் என்று கூறுவது மட்டும் போதாது; அரசாங்கம் சந்தையை விடவும் சிறந்த முறையில் செயற்படக் கூடிய ஆற்றலைக் கொண்டதாகவும் இருந்து வர வேண்டும்.

## வரலாற்றின் படிப்பினைகள்

அரசாங்கத் தலையீட்டின் பொருத்தமான மட்டம் குறித்த வரலாற்றுப் படிப்பினைகளை பல ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. பல்வேறு விதமான மக்கள் வரலாற்றை பல்வேறு விதமாக நோக்குகிறார்கள். எனவே, வரலாற்றுச் சான்றுகள் முன்வைக்கும் அபிவிருத்தி உத்திகள் இவைதான் என எவற்றையும் அறுதியிட்டுக் கூற முடியாதுள்ளது. கிழக்காசிய அற்புதம் இதற்கான ஓர் உதாரணமாகும். புதிய சாஸ்திரிய பொருளியலாளர்கள் அதனை சர்வதேச வர்த்தகத்தின் திறந்த தன்மை, விலைக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏனைய திரிபுபடுத்தும் கொள்கைகள் என்பன இல்லாதிருந்தமை என்பவற்றின் வெற்றியாக நோக்குகிறார்கள். மறுபுறத்தில், கிழக்காசியாவில் கைத்தொழில் கொள்கை முறைகளும் நிதிச் சந்தையில் தலையீடுகளும் இருந்து வந்தன என அரச

தலையீட்டு ஆதரவாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பொருளியலாளர்கள் சிறந்த கருவிகளை அபிவிருத்தி செய்து பயன் படுத்தி வந்திருப்பதனால் பிரச்சினையின் இயல்பை அவர்கள் நன்கு புரிந்து கொள்கிறார்கள் என ஆன் குருகர் ஒரு கட்டுரையில் (1994) வாதிடுகிறார். இதன் காரணமாகவே பெரும்பாலான வளர்முக நாடுகள் தாராளமயப் படுத்தப்பட்ட சந்தைகளையும் கட்டற்ற வர்த்தக உத்திகளையும் பின்பற்றி வருகின்றன என அவர் முடிவாகக் கூறுகிறார். அவர் எழுப்பும் கேள்வியின் ஒரு பகுதிக்கான பதில் (அதாவது, "எவர் பணம் செலுத்துகிறாரோ அவரே கட்டளையிடுகின்றார்") மிக எளிமையானதாக இருந்து வந்த போதிலும் அவருடைய வாதம் சுவாரஷ்யமானதாகவும், கவனத்தில் எடுக்க வேண்டிய ஒன்றாகவும் இருந்து வருகின்றது.

எவ்வாறிருப்பினும், இக்கட்டுரையில் (பெருமளவுக்கு வேறுபட்ட கோட்பாட்டு அணுகுமுறைகளைக் கொண்டிருக்கும்) பொருளியலாளர்களும் பொதுவாக ஏற்றுக்கொள்ளும் துறைகளை இனங்கண்டு கொள்வோம்.

1. சந்தைகள் சிறப்பான முறையில் செயற்பட்டு வரும் சந்தர்ப்பங்களில் அவை சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்பதை இரு தரப்புக்களையும் சேர்ந்த பொருளியலாளர்களும் ஏற்றுக்கொள்வார்கள். எந்த அளவுக்கு சந்தைத் தோல்வியை அனுமதிப்பதற்கு அவர்கள் விரும்புகிறார்கள் என்பதிலும், அதனையடுத்து அரசாங்கம் வகிக்க வேண்டிய பங்கு எந்த அளவில் இருந்து வர வேண்டும் என்பதிலுமே அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு நிலவி வருகின்றது.

2. கட்டற்ற வர்த்தகம் அல்லது வர்த்தகத்துக்கு திறந்து விடப்பட்டிருக்கும் நிலை மிக முக்கியமாகும். புதிய சாஸ்திரீய கோட்பாட்டாளர்கள் வினைத் திறன் காரணங்களை முன்வைத்தும், அபிவிருத்திப் பொருளியலாளர்கள் சந்தை விரிவாக்கத்தை முன்வைத்தும் இதனை ஊக்குவித்து வருகின்றனர். நெகிழ்ச்சித்தன்மை குறித்த அவ நம்பிக்கை வாதம் அவசியமற்றது என்பதனை அனுபவ ரீதியான சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. நீண்ட காலத்தில் வர்த்தக நிலுவைகள் விருத்தியடைய முடியும். குழந்தைப் பருவ கைத்தொழில்களின் பாதுகாப்பு ஒரு தற்காலிக சட்டம் மட்டுமேயாகும்.

3. வறுமை ஒழிப்பு அரசாங்கத்தின் பொறுப்பாகும். விலைகளில் தலையிடுவதிலும் பார்க்க செல்வந்தர்களிடமிருந்து வறியவர்களுக்கு ஒரேயடியாக தொகைகளை மாற்றல் செய்வதன் மூலம் இதனைச் சாதித்துக் கொள்ள முடியும் என புதிய சாஸ்திரீய பொருளியலாளர்கள் வாதிடலாம். அபிவிருத்திப் பொருளியலாளர்கள் இதனை மறுக்க மாட்டார்கள்; ஆனால், அவர்கள் வறுமை ஒழிப்பு என்ற விடயத்தை முழுப் பொருளாதாரத்தையும் அதன் தற்போதைய குறைவருமான மட்டப் பொறியிலிருந்து வெளியே எடுத்து வரும் முயற்சியின் ஒரு பாகமாக நோக்குவார்கள்!

4. சமூக மற்றும் பௌதிக உள் கட்டமைப்பு வசதிகளை அரசு வழங்குதல்: கல்வி, சுகாதாரம் என்பன சமூக உள்கட்டமைப்புக்களாகும். பாதைகள் மற்றும் மின்சாரம் போன்றவை பௌதிக உள்கட்டமைப்பு வகைகளில் அடங்குகின்றன.

5. போட்டி மிக முக்கியமாகும். ஒரு பொதுத் துறை தொழில் முயற்சியை திறந்த பொருளாதாரத்துக்கு எதிரில் வைத்து போட்டியிட வைப்பது வினைத் திறனை விருத்தி செய்ய முடியாது. அதே போல ஒரு தனியார் துறை நிறுவனத்துக்கு ஏகபோக உரிமையை வழங்குவதும் வினைத்திறனை விருத்தி செய்ய மாட்டாது. எனவே, உரித்து சூழ் நிலையிலும் பார்க்க குறைந்த முக்கியத்துவத்தையே கொண்டுள்ளது.

இது இறுதியில் இலங்கை குறித்த சில படிப்பினைகளை எமக்கு எடுத்து வருகின்றது. அவையாவன:

1. சுதந்திரமான சந்தைகள் குறித்து வெட்கப்படத் தேவையில்லை. போட்டி விரும்பத்தக்கது என்பதனை கோட்பாடும் அனுபவமும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

2. முன்னர் குறிப்பிட்டது போல குறிப்பாக வறுமை ஒழிப்பிலும் உள் கட்டமைப்பு வசதிகளை வழங்கும் விஷயத்திலும் அரசாங்கம் ஒரு பங்கினை வகிக்க வேண்டியுள்ளது. சமூக உள் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில் நாங்கள் மிகச் சிறந்த முறையில் செயற்பட்டு வந்துள்ளோம். ஆனால், பௌதீக உள் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில் நாங்கள் திருப்தியடைய முடியாது. உதாரணமாக, எமது நகரக் குடித்தொகையில் சுமார் 35 சத வீதத்தினர் மட்டுமே 1982இல் மின்சார வசதியைப் பெற்றிருந்தனர். இது இந்தியா மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளின் சதவிகிதங்களிலும் பார்க்க உயர்வானதாகும். ஆனால், இந்தோனேஷியா, மலேசியா, பிரேஸில், கோர்ட்டே டெவொயார், லைபீரியா மற்றும் செனிகல் போன்ற நாடுகளின் சதவீதங்களிலும் பார்க்க குறைவானதாகும். இதில் மிக முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய விஷயம் எமது கிராமக் குடித்தொகையில் 8 சதவீதத்தினர் மட்டுமே மின்சார வசதியைப் பெற்றுள்ளார்கள் என்பதாகும். இது இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, தாய்லாந்து, பொலிவியா, பிரேஸில், கோர்ட்டே டெவொயார் மற்றும் செனிகல் போன்ற நாடுகளின் சதவீதங்களிலும் பார்க்க குறைவானதாகும்.

3. வார்த்தை ஜாலமும் கொள்கையும் ஒரு போதும் பொருந்திச் செல்வதில்லை. உதாரணமாக, எமது சர்வதேச விலைகள் "தாராளமயமாக்கப்பட்டு," செலாவணி விகிதம் பெயரளவில் பெறுமதியிறக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும் எமது ரூபாய் மிகையாக மதிப்பிடப்பட்டுள்ளது போல் தோன்றுகின்றது. இதன் விளைவாக, ஏற்றுமதி மேம்பாடு குறித்த எமது வார்த்தை ஜாலங்களுக்கு மத்தியிலும் ஏற்றுமதிகளுக்கு எதிரான ஒரு பாரபட்ச நிலை காணப்படுகிறது.

4. அரசாங்கத்தின் நற்பண்புகளை முழுமையாக நம்பிவிட வேண்டும். அரசாங்கத்தின் தோல்வி குறித்த கருதுகோள் இலங்கையர்களுக்கு பரிச்சயமானதொன்றல்ல. சுதந்திரச் சந்தைகள் குறித்த எமது சந்தேக உணர்வுடன் கை கோர்த்துக் கொண்ட விதத்தில் அரசாங்கத்தின் ஆற்றல் குறித்த ஒரு ஆரோக்கியமான சந்தேக உணர்வும் இருந்து வருதல் வேண்டும். இந்த இரு பக்கங்களிலும் ஏதாவது ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்ள முன்னர் நாங்கள் கவனமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

# இலங்கையில் கணக்கியல் கல்வி: சிங்கப்பூரின் அனுபவத்திலிருந்து கிடைக்கும் படிப்பினைகள்

ஹேமா விஜேவர்தன
செனரத் யாபா

*கலாநிதி ஹேமா விஜேவர்தன தற்பொழுது அவுஸ்திரேலியாவின் வொலொங்கொங் பல்கலைக்கழகத்தின் கணக்கியல் பிரிவில் மூத்த விரிவுரையாளராக பணியாற்றி வருகின்றார். அவுஸ்திரேலியாவின் பட்டயக் கணக்காளர் ஒருவரான அவர் முன்னர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வணிகவியல் துறை பேராசிரியராக இருந்தார்.*

*செனரத் யாபா வொலொங்கொங் பல்கலைக்கழகத்தில் கணக்கியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக பயின்று வருகிறார். அவரும் முன்னர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர் ஆவார்.*

பல வளர்முக நாடுகளில் கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வரலாற்று ரீதியான பகுப்பாய்வுகள், அந் நாடுகளின் கணக்கியல் கல்வி முறைகளில் வளர்ச்சியடைந்த மேலைய நாடுகளின் செல்வாக்கு கணிசமான அளவில் இருந்து வருவதனை எடுத்துக் காட்டியுள்ளன. கணக்காளர்களுக்கு கிடைக்கும் கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றின் விளைவாகத் தோன்றும் கணக்கீட்டு நடைமுறை அநேகமாக அனைத்து வளர்முக நாடுகள் மீதும் வளர்ச்சியடைந்த நாடுகளால் திணிக்கப்பட்டிருப்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இத்திணிப்பு வளர்முக நாடுகளின் சமூகத் தேவைகளை நிறைவு செய்து வைக்கும் வகையில் மேற்கொள்ளப்படவில்லை; மாறாக, ஆரம்பத்தில் காலனித்துவத்துக்கு ஊடாகவும், பின்னர் பல்தேசிய கூட்டுத்தாபனங்கள் மற்றும் தொழில்சார் கணக்கியல் நிறுவனங்கள் என்பவற்றின் செயற்பாடுகளுக்கூடாகவும், பொருளாதார உதவி ஒப்பந்தங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட விசேஷ நிபந்தனைகள் மூலமும் இத்திணிப்பு இடம் பெற்றது. இது குறிப்பாக இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளைப் பொறுத்தவரையில் பெருமளவுக்கு உண்மையாகும். இவ்விரு நாடுகளும் சுமார் 150 வருட காலம் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்து வந்தன. சுதந்திரத்தின் பின்னரும் கூட இவ்விரு நாடுகளிலும் கணக்கியல் கல்வியிலும் நடைமுறையிலும் பிரிட்டனின் செல்வாக்கு தொடர்ந்தும் வேரூன்றியிருந்தது. அந்த வகையில் இலங்கையும் சிங்கப்பூரும் தமது கணக்கியல் கல்வியை முழுவதுமாக பிரிட்டிஷ் முறையிலிருந்து மரபுரிமையாகப் பெற்றிருந்தன. எனவே, இலங்கையின் கணக்கியல் கல்வி முறை அதன் அபிவிருத்தியின் தொடக்க கட்டத்தில் சிங்கப்பூரின் கணக்கியல் கல்வி முறையைப் பெருமளவுக்கு ஒத்ததாகவே இருந்து வந்தது.

எனினும், இவ்விரு நாடுகளினதும் கணக்கியல் கல்வியின் தற்போதைய நிலை கணிசமான அளவில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இலங்கையுடன் ஒப்பிடும் பொழுது, சிங்கப்பூர் கணக்காளர்களின் கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றில் பெருமளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. குறிப்பாக, கணக்காளர்களாக வரவிரும்புபவர்களுக்கு கல்வி வழங்கும் விஷயத்தில் சிங்கப்பூர் பழைய பிரிட்டிஷ் மாதிரியிலிருந்து வெற்றிகரமாக நகர்ந்து சென்றுள்ளது. அது மட்டுமன்றி சுதந்திரத்தையடுத்து வந்த ஆரம்ப வருடங்களில் பொருளாதார ரீதியில் இலங்கையிலும் பார்க்க பின்தங்கிய நிலையில் இருந்து வந்த அந்நாடு அண்மைய தசாப்தங்களில் குறிப்பிடத்தக்க அளவிலான பொருளாதார அபிவிருத்தியை சாதித்துக் கொண்டுள்ளதுடன், புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட ஒரு (NIC) நாடாகவும் எழுச்சியடைந்துள்ளது. 1994 இல் சிங்கப்பூரின் தலைக்குரிய வருமானம் 23,660 அ. டொலராக மிக உயர் மட்டத்தில் நிலவி வந்தது. இது முழு ஆசியப் பிராந்தியத்திலும் ஜப்பானுக்கு அடுத்த ஆகக் கூடிய தலைக்குரிய வருமான மட்டமாக உள்ளது. அதே வேளையில், இலங்கையின் தலைக்குரிய வருமானம் 640 அ. டொலர்களாக மட்டுமே இருந்து வந்தது (உலக வங்கி, 1995). சிங்கப்பூரின் கணக்கியல் கல்வியும் நடைமுறையும் அந்நாட்டின் அதியற்புதமான பொருளாதாரச் சாதனைகளுக்கு கணிசமான அளவில் பங்களிப்பினை நல்கி வந்திருப்பதும் தெரிய வந்துள்ளது. எனவே, இவ்விரு நாடுகளிலும் கணக்கியல் கல்வியில் ஏற்பட்டு வந்திருக்கும் அபிவிருத்தியைப் பரிசீலனை செய்வதும், இலங்கை சிங்கப்பூரின் அனுபவத்திலிருந்து ஏதேனும் படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்பதனை நோக்குவதும் மிக முக்கியமாகும். எமது கட்டுரை இத்திசையிலான ஒரு முயற்சியை மேற்கொள்கிறது.

## சிங்கப்பூரில் கணக்கியல் கல்வி

வரலாற்று ரீதியாக நோக்கும் பொழுது சிங்கப்பூர் 1959 இல் சுதந்திரம் பெறும் வரையில் சுமார் 1 1/2 நூற்றாண்டு காலம் (1940 களில் இடம் பெற்ற குறுகிய கால ஜப்பானிய ஆக்கிரமிப்புத் தவிர) ஒரு பிரிட்டிஷ் காலனித்துவ நாடாக இருந்து வந்துள்ளது. அதன் விளைவாக ஆரம்பக் கல்வி தொட்டு பல்கலைக்கழக மட்டம் வரையிலான அதன் பொதுக் கல்வி முறை பிரிட்டிஷ் கல்வி முறையிலிருந்து மரபுரிமையாக பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கல்வி முறையாகவே இருந்து வந்துள்ளது.

கணக்கியல் கல்வியும் இதற்கு விதிவிலக்காக இருந்து வரவில்லை. கணக்கியல் கல்வி தொடர்பான பிரிட்டிஷ் கல்வி முறை காலனித்துவ ஆட்சிக் காலத்தின் போது சிங்கப்பூரின் மீது பல்வேறு வழிகளுக்கூடாகவே திணிக்கப்பட்டது: (1.) பிரிட்டிஷ் கணக்கீட்டு ஆளணியினரின் ஏற்றுமதி (2) பிரிட்டிஷ் கணக்கியல் தகைமைகளின் ஏற்றுமதி (3) பிரிட்டிஷ் தொழில்சார் கணக்கியல் அமைப்புக்களின் தேர்வு மையங்கள் சிங்கப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டமை (4) சிங்கப்பூரின் கல்வித்துறை நிறுவனங்களின் அபிவிருத்தியில் திட்டமிடல், நெறிப்படுத்தல், போதனை மற்றும் பல்வேறு வடிவங்களிலான உதவி என்பவற்றில் பிரிட்டிஷ் நிபுணர்கள் சம்பந்தப்பட்டிருந்தமை (5) சிங்கப்பூரின் ஆரம்ப நாட்களில் வணிகம், கல்வி மற்றும் நிர்வாகச் சூழல் என்பவற்றில் காணப்பட்ட பிரிட்டிஷ் செல்வாக்கு.

சிங்கப்பூர் 1956 வரையில் மாணவர்களை உள்ளூர் கணக்கியல் தகைமை ஒன்றுக்கு தயார் செய்யும் எந்த ஒரு கல்வி நிகழ்ச்சித்திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. இந்த நிலையில் மாணவர்கள் வெளிநாட்டு தொழில்சார் கணக்காளர் நிறுவனங்களால் நடாத்தப்பட்ட தேர்வுகளுக்கூடாக மட்டுமே கணக்கியல் கல்வியைப் பெற முடிந்தது. ஐக்கிய இராச்சியத்தின் சான்றளிக்கப்பட்ட கணக்காளர் நிறுவனம் (ACCA), ஐக்கிய இராச்சியத்தின் செலவு மற்றும் வேலைகள் கணக்காளர் நிறுவனம் (ICWA) மற்றும் கணக்காளர்களின் அவுஸ்திரேலிய கழகம் (ASA) போன்ற நிறுவனங்களே இத்தேர்வுகளை நடத்தி வந்தன. வெளி நாடொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கணக்கியல் தகைமையொன்றுக்கு ஊடாக மட்டுமே ஒருவர் கணக்கீட்டுத் துறையில் குறிப்பாக, பொதுத் துறையில் தொழிலொன்றைப் பெறக் கூடியதாக இருந்தது. கணக்கீட்டில் சிறப்புப் படிப்புடன் கூடிய வணிகத் துறையில் பட்டம் வழங்கும் முதலாவது உள்நாட்டுப் பாடநெறி 1956 இல் நன்யாங் பல்கலைக் கழகத்தால் துவக்கி வைக்கப்பட்டது. அதற்கு அடுத்த வருடத்தில் சிங்கப்பூர் பல்தொழில்நுட்பக் கல்லூரியின் வணிகத் துறை காலனித்துவ அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டதுடன், அத்துறை ஏனைய பாடநெறிகளுடன் முழு நேர அடிப்படையில் கணக்கீட்டிலான கல்லூரி டிப்ளோமா சான்றிதழை வழங்கும் பாடநெறியொன்றையும் வழங்கியது. கணக்கியலில் தொழில்சார் டிப்ளோமா சான்றிதழை வழங்கும் நோக்கில் முழு நேர மற்றும் பகுதி நேர பாடநெறிகளை போதிப்பதற்கென இந்த வணிகத் துறை 1958 இல் கணக்கியல் துறையாக மாற்றப்பட்டது. சிங்கப்பூர் கணக்காளர் கழகத்தில் (SSA) உறுப்புரிமையைப் பெறுவதற்குப் போதிய தகைமையாக 1963 இல் இந்த டிப்ளோமா அங்கீகரிக்கப்பட்டது. தொழில்சார் கணக்காளர்களை பதிவு செய்வதற்கும், சிங்கப்பூரில் கணக்கீட்டு நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்குமென அரசாங்கத்தினால் இக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. சிங்கப்பூர் பல்தொழில்நுட்பக் கழகம் ஒரு பல்கலைக்கழகமாக நிலைமாற்றமடைவதனைக் 'குறிக்கும் வகையில் 1965-66 கல்வியாண்டில் அதன் கணக்கியல் துறை கணக்கியல் பள்ளி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதனையடுத்து கணக்கியல் பாடநெறி, டிப்ளோமா சான்றிதழ் நிலையிலிருந்து பல்கலைக்கழக பட்டமாக தரமுயர்த்தப்பட்டது. இத்தொழில் நுட்பக் கல்லூரிக்கும் சிங்கப்பூர் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக சிங்கப்பூர் பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு தனது கணக்கியல் பட்டத்தை வழங்குவதற்கு இப்பல்கலைக்கழகம் இணங்கியது. இக்கணக்கியல் பள்ளி 1969 இல் சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் வணிக நிர்வாகத் துறையுடன் இணைக்கப்பட்டமை சிங்கப்பூரின் கணக்கியல் கல்வி அபிவிருத்தியின் மற்றொரு மைல் கல்லாகும். இந்த இணைப்பையடுத்து கணக்கியல் பள்ளி சிங்கப்பூர் பல்கலைக்கழகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நன்யாங் பல்கலைக்கழகத்தினால் 1956 தொடக்கம் வழங்கப்பட்டு வந்த வணிகவியல் (கணக்கியல்) பட்டம் 1971 இல் சிங்கப்பூர் கணக்காளர் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்டமை மற்றொரு முன்னேற்றமாகும். 1978 இல் நன்யாங் பல்கலைக்கழகமும் சிங்கப்பூர் பல்கலைக்கழகமும் இணைந்து கணக்கியலிலான கூட்டுப் பாட நெறிகளை அறிமுகம் செய்து வைத்தன. இரு கணக்கியல் பள்ளிகளும் 1980 இல் இணைந்து சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் கணக்கியல் பள்ளியாக உருவாகியது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் மற்றும் நன்யாங் தொழில்நுட்ப நிறுவனம் என்பவற்றின் உருவாக்கத்துக்கூடாக சிங்கப்பூர் பல்கலைக்கழக முறைமை மறுசீரமைக்கப்பட்டதனையடுத்து நாட்டின் கணக்கியல் கல்வி முறை அதியுயர் வளர்ச்சியை சாதித்துக் கொண்டது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் கணக்கியல் பள்ளி 1987 இல் நன்யாங் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு எடுத்துக் செல்லப்பட்டதுடன், 1990 இல் கணக்கியல் மற்றும் வணிகப் பள்ளி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத்தொழில்நுட்ப நிறுவனம் 1991 முழுப் பல்கலைக்கழகம் என்ற பெயரைப் பெற்றுக் கொண்டது. இப்பல்கலைக்கழத்தின் கணக்கியல் மற்றும் வணிகப் பள்ளி தென் கிழக்காசியாவில் கணக்கீட்டுக் கல்வியில் பட்டப் படிப்பினையும் பட்டப் பின்படிப்பினையும் வழங்கும் முன்னணி நிறுவனம் என்ற முறையில் நல்ல கீர்த்தியைப் பெற்றுக் கொண்டுள்ளது. இப்பட்டங்கள் தவிர வணிக நிர்வாகத்தில் முது நிலைப்பட்டத்துக்கு வழிகோலும் தொழில்சார் பட்டப் பின்படிப்பு பாடநெறியொன்றையும் இது நடத்தி வருகிறது. சிங்கப்பூர் சான்றளிக்கப்பட்ட பொதுக் கணக்காளர் நிறுவனம் இவ்விரு பட்டங்களையும் (நடைமுறை அனுபவம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன்) அங்கீகரிப்பதுடன், இப்பட்டங்களைப் பெற்றிருப்பவர்களுக்கு தற்காலிக உறுப்புரிமையையும் வழங்குகின்றது. நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கணக்கியல் பாடநெறி (இளங்கலை) இது வரையில் சுமார் 10,000 கணக்கியல் பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. 1992 இன் முடிவில் இப்பட்டதாரிகளில் 7442 பேர் சான்றளிக்கப்பட்ட சிங்கப்பூர் பொதுத்துறை கணக்காளர் நிறுவனத்தில் உறுப்புரிமையைப் பெற்று தொழில்சார் கணக்காளர்களாக இருந்து வந்தனர். இது தவிர இப்பல்கலைக் கழகம் கணக்கியலில் முதுகலைப் பட்டம் மற்றும் கலாநிதிப் பட்டம் என்பவற்றுக்கு வாய்ப்பளிக்கும் பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சிப் பட்டங்களையும் வழங்கி வருகின்றது.

நன்யாங் தொழில்நுட்ப பல்

கலைக்கழகத்தின் கணக்கியல் இளங்கலைப் பட்டம் மூன்றாண்டு முழு நேர பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இப்பயிற்சி நெறியில் சேர்ந்து பயிலும் மாணவர்கள் அனைவரும் தமது இரண்டாவது வருட கல்வி முடிவில் 10 வார கைத்தொழில் துறை நகழ்ச்சித்திட்டமொன்றில் பயிற்சி பெறுவது அவசியமாகும். இத்திட்டத்தின் கீழ் மாணவர்கள் நடைமுறைப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்காக பொதுத் துறை கணக்கீட்டு நிறுவனங்களில் சேர்ந்து பணியாற்றுகிறார்கள். இந்த நடைமுறைப் பயிற்சியின் பிரதான நோக்கம் மாணவர்களிடையே தொழில்சார் நெறிமுறைகளைப் பதியச் செய்வதும், சரியான வேலை மனப்பாங்குகளை வளர்ப்பதுமாகும். அதன் விளைவாக அவர்கள் பட்டம் பெற்ற பின்னர் தாம் பணிபுரியும் நிறுவனங்களில் வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமான விதத்திலும் பணிபுரியக்கூடியதாக இருந்து வரும்.

தொழில்சார் கணக்காளர் நிறுவனத்தின் ஸ்தாபிதம் தொடக்கம் அது பல்கலைக்கழகத்தின் கணக்கியல் பள்ளியுடன் மிக நெருங்கிய தொடர்புகளை பராமரித்து வருகின்றது. இப்பள்ளியின் ஒவ்வொரு நிலைமாற்றக் கட்டத்தின் போதும் இந்நிறுவனத்தின் ஆலோசனை பெறப்பட்டமை இத்தொடர்பை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. கணக்கியல் மற்றும் வணிகப் பள்ளியின் பிரதிநிதியொருவர் நிதியமைச்சரினால் சிங்கப்பூர் சான்றளிக்கப்பட்ட பொதுத்துறை கணக்காளர் நிறுவனத்தின் பேரவையில் சட்டபூர்வ உறுப்பினராக நியமனஞ் செய்யப்படுகிறார். மேலும், இப்பள்ளி அதன் பட்டப் படிப்பு நெறிகளின் பொருத்தப்பாட்டை தொடர்ந்தும் பேணிவரும் நோக்குடன் தொழில்சார் கணக்கீட்டு கழகங்களுடனும் வணிக சமூகத்துடனும் ஏனைய தொழில்சார் அமைப்புக்களுடன் நெருக்கமான உறவுகளைப் பராமரித்து வருகின்றது.

## இலங்கையில் கணக்கியல் கல்வி

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இலங்கையின் பொருளாதாரத்தில் பெருந்தோட்டத் துறையை அறிமுகம் செய்து வைத்ததுடன், காலனித்துவ ஆட்சிக் காலத்தின்போது இலங்கையின் வணிகத் துறை நடவடிக்கைகளின் கவனம் முழுவதும் அத்துறையை நோக்கியே நெறிப்படுத்தப்பட்டிருந்தது.

பிரிட்டிஷ் முதலீடுகள் வருவதற்கு வசதி செய்து கொடுக்குமுகமாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கூட்டுப் பங்கு கம்பெனிகளுக்கு ஊடாக பெருந்தோட்டங்களை முகாமை செய்யும் முறை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. தொடக்கத்தில் இக்கம்பெனிகள் அனைத்தும் பிரிட்டிஷ் முதலீட்டாளர்களுக்கு உரித்தானவையாக இருந்து வந்ததுடன், கணக்காளர்களையும் உள்ளிட்ட அவற்றுக்கான ஆளணியினர் ஐக்கிய இராச்சியத்திலிருந்து வந்தனர். இந்நிறுவனங்கள் இலங்கையில் அமைந்திருந்த போதிலும் அவை பிரிட்டனில் அமைந்திருக்கும் நிறுவனங்கள் போலக் கருதப்பட்டு முகாமை செய்யப்பட்டு வந்தன. உள்நாட்டு நிலைமைகளுக்குப் பொருத்தமான கணக்கீட்டு முறையொன்றை அபிவிருத்தி செய்து கொள்வதற்கென எத்தகைய முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. உள்ளூர் ஆட்களும் கூட பிரிட்டனைச் சேர்ந்த கணக்காளர்களால் அதே பாணியில் பயிற்றுவிக்கப்பட்டனர். 1925 வரையில் இலங்கையின் அரசாங்க சேவையில் (ரெயில்வே திணைக்களத்தில் தவிர) தொழில்சார் தகைமை பெற்றிருந்த கணக்காளர்கள் எவரும் இருக்கவில்லை. ரெயில்வே திணைக்களத்தில் கணக்கீட்டு ஆளணியினரைப் பயிற்றுவிக்கும் நோக்கத்துடன் தொழில்சார் தகைமை பெற்றிருந்த ஒரு சில கணக்காளர்கள் இங்கிலாந்திலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

மேலே எடுத்துக்காட்டப்பட்டவாறு பிரிட்டிஷ் கணக்காளர்கள் தமது உள்ளூர் ஆளணியினருக்கு வழங்கிய வேலையுடன் கூடிய பயிற்சி இலங்கையில் அளிக்கப்பட்ட முதலாவது கணக்கீட்டுப் பயிற்சியாகும். இது தவிர 1890 தொடக்கம் கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ட் நிறுவனம், யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி மற்றும் வெள்ளவத்தை தொழில்நுட்ப நிலையம் போன்ற ஒரு சில தனியார் கல்வி நிறுவனங்கள் இலங்கையில் நடத்தப்பட்ட பிரித்தானிய வெளிவாரிப் பரீட்சைகளுக்கு மாணவர்களை தயார் செய்யும் பொருட்டு கணக்கியலை உள்ளிட்ட வணிகவியல் பாடங்களில் வகுப்புக்களை நடத்தி வந்தன. லண்டன் வர்த்தக சம்மேளன சான்றிதழ்கள் மற்றும் கேம்பிரிட்ஜ் சான்றிதழ்கள் என்பவற்றுக்கான தேர்வுகள் பெருமளவுக்கு பிரபல்யம் பெற்றிருந்தன. இத்தகைய பிரிட்டிஷ் தேர்வுகள் 1891 தொடக்கம் இலங்கையில் நடத்தப்பட்டு வந்துள்ளன. எனினும், 1943 வரையில் உள்ளூர் தகைமையொன்றுக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் பாட நெறிகளை எந்த நிறுவனமும் நடத்தவில்லை. மருதானை தொழில்நுட்பக் கல்லூரி காலனித்துவ அரசாங்கத்தினால் 1893 இல் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் அதன் பாட நெறிகளில் கணக்கீட்டுக் கல்விக்கு சுமார் ஐம்பது வருட காலம் எத்தகைய இடமும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. இக்கல்லூரி 1942 இன் பின்னரேயே கணக்கியல் பாடநெறிகளில் சான்றிதழ்களையும் டிப்ளோமாக்களையும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது. இதன் பிரகாரம், கணக்கு வைப்பவர்களுக்கான சான்றிதழ் பாடநெறியொன்றும், கணக்காளர்களாக வர விரும்புபவர்களுக்கான டிப்ளோமா பாட நெறியொன்றும் முறையே 1943 இலும் 1946 இலும் ஆரம்பிக்கப்பட்டன. இப்பாட நெறிகள் ஐக்கிய இராச்சியத்தில் வழங்கப்பட்டு வந்த இதே மாதிரியான பாடநெறிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருந்தன. கணக்கீட்டுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்த கணக்கியல் டிப்ளோமா பாட நெறி நான்கு வருட கால மாலை நேர பாட நெறியாக வழங்கப்பட்டது. இப்பாட நெறிகளின் பாடத்திட்டம் ஐக்கிய இராச்சியத்தின் முன்னணி தொழில்சார் கணக்கியல் நிலையங்களின் பாடத்திட்டங்களை ஒத்ததாகவே இருந்து வந்தது.

1941 தொடக்கம் 1959 வரையில் இலங்கையில் இயங்கி வந்த ஒரேயொரு அதிகாரபூர்வமான கணக்கியல் நிறுவனம் கணக்கீட்டுச் சேவைக்காக பொருத்தமான ஆட்களைத் தெரிவு செய்து கொள்வதற்கு ஒழுங்கு விதிகளை வகுப்பதற்கும் தேர்வுகளை நடத்துவதற்குமென அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கணக்கியல் சபையாகும். அதன் தேர்வுகளுக்கூடாக கணக்கியல் சபையினால் தெரிவு

செய்யப்பட்டவர்கள் இலங்கை பதிவு பெற்ற கணக்காளர்கள் என அழைக்கப்பட்டனர். மேலும், இந்த கணக்கியல் சபை ஒரு சில தனியார் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து கணக்காளர்களாக வர விரும்புவர்களுக்கென சில வகுப்புக்களையும் ஏற்பாடு செய்தது. பிரிட்டிஷ் தொழில்சார் கணக்கீட்டு நிலையங்களின் வெளிவாரிப் பரீட்சைகளுக்கு தாமே தனிப்பட்ட முறையில் தயார் செய்து கொண்டிருந்தவர்களுக்கும் ஒரு சில தனியார் கல்வி நிறுவனங்கள் வகுப்புக்களை நடத்தி வந்தன. அத்தகைய ஒரு வெளிவாரித் தேர்வு முதன் முதலாக 1920 இல் கொழும்பில் நடத்தப்பட்டது. இலங்கையின் கணக்காளர்கள் தமது தொழில்சார் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்காக 1950 களின் பிற்பகுதியிலும் கூட ஐக்கிய இராச்சியத்தின் தொழில்சார் அமைப்புக்களிலேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. இவற்றில் இங்கிலாந்து, வேல்ஸ் பட்டயக் கணக்காளர் நிறுவனம், கூட்டிணைக்கப்பட்ட கணக்காளர் நிறுவனம், சான்றளிக்கப்பட்ட மற்றும் கூட்டு கணக்காளர் கழகம் மற்றும் செலவு மற்றும் வேலைகள் கணக்காளர் நிறுவனம் என்பன மிக முக்கியமானவையாகும். இவற்றில் முதலிரு நிறுவனங்களும் தமது தேர்வு நாடிகள் கணக்கீட்டுத் தொழில் புரியும் கணக்காளர்களிடம் பயிற்சியைப் பெற வேண்டும் என்ற தேவைப்பாட்டை வலியுறுத்தின. கடைசி நிறுவனங்கள் இரண்டும் இத்தேவையை வலியுறுத்தவில்லை. பட்டயக் கணக்காளர்களாக வர விரும்பும் அனைவரும் வேலையுடன் இணைந்த பயிற்சியைப் பெறுவதற்காக ஐந்து வருட காலத்துக்கு ஐக்கிய இராச்சியத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. கூட்டிணைக்கப்பட்ட கணக்காளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தேர்வுகளை எழுதுவதற்காக இங்கிலாந்து செல்வதற்கு முன்னர் நான்கு வருடம் இரண்டு மாதம் இலங்கையில் வேலையுடன் இணைந்த பயிற்சியைப் பெற வேண்டியிருந்தது. ஏனைய இரு தொழில்சார் நிறுவனங்களினதும் உறுப்புரிமை கணக்கீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு திறந்து விடப்பட்டிருந்ததுடன், தேர்வுகளை உள்நாட்டில் பூர்த்தி செய்வதன் மூலமும் தேர்வு நாடியின் அனுபவம் மற்றும் நடத்தை என்பன குறித்த நிபந்தனைகளை நிறைவு செய்வதன் மூலமும் அதனைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. கணிசமான அளவிலான கணக்கியல் மாணவர்கள் பிரதானமாக இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட டிப்ளோமா பாடநெறியின் மூலம் பெற்றுக்கொண்ட அறிவைக் கொண்டு மேற்குறிப்பிடப்பட்ட தொழில்சார் நிறுவனங்களின் தேர்வுகளைப் பூர்த்தி செய்ததுடன், பிரிட்டிஷ் தகைமை பெற்ற தொழில்சார் கணக்காளர்களாகவும் உருவாகினார்கள். கடந்த மூன்று தசாப்த காலத்தில் மருதானை தொழில்நுட்பக் கல்லூரியைப் போலவே ஏனைய பல பிராந்திய தொழில்நுட்பக் கல்லூரிகளும் பல கணக்கீட்டு பாடநெறிகளை நடத்தி வந்துள்ளன. இதில் மிக முக்கியமானது கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறியாகும். இது முன்னர் கணக்கியல் டிப்ளோமா என அழைக்கப்பட்டது.

1959 இன் 23 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1959 டிசம்பரில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் அது கணக்கியல் சபையை பிரதியீடு செய்தது. அன்று தொடக்கம் அது இலங்கையின் ஒரேயொரு தொழில்சார் கணக்காளர் நிலையமாக செயற்பட்டு வருகின்றது. அதன் ஸ்தாபிதம் தொடக்கம் இந்நிலையம் இலங்கையில் கணக்கீட்டுக் கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றுக்கான பிரதான மையமாகவும் இருந்து வருகின்றது. கணக்காளர்களாக வர விரும்புபவர்கள் நாட்டுக்குள்ளேயே பட்டயக் கணக்காளர்களாகத் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை அது வழங்கியது. எனினும், அத்தகைய கணக்காளர்களை உருவாக்குவதற்காக உபயோகப்படுத்தப்படும் போதனை முறை மற்றும் பயிற்சி என்பன இங்கிலாந்து, வேல்ஸ் பட்டயக் கணக்காளர் நிலையத்தின் போதனா முறை மற்றும் பயிற்சி என்பவற்றை ஒத்ததாகவே தொடர்ந்தும் இருந்து வருகின்றது. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் பிரிட்டிஷ் முறையைப் பின்பற்றி தனது சொந்த தொழில்சார் பரீட்சைகளை அறிமுகம் செய்து வைத்தது. இப்பரீட்சைகளில் சித்திபெற்று பட்டயக் கணக்காளர்களின் மேற்பார்வையின் கீழ் ஐந்து வருடகால வேலையுடன் இணைந்த பயிற்சியைப் பெற்றிருப்பவர்களுக்கு மட்டுமே பட்டயக் கணக்காளர்களாக இந்நிலையத்தில் உறுப்புரிமை வழங்கப்படுகிறது.

மேலும், இந்நிலையம் அதன் மாணவர்களை இடைநிலைப் பரீட்சை மற்றும் இறுதிப் பரீட்சை என்பவற்றுக்கு தயார்படுத்தும் பொருட்டு கல்வி நிகழ்ச்சித் திட்டமொன்றையும் வழங்கி வந்துள்ளது. இது அறிமுக விரிவுரைகள், விரிவுரைகளின் மீட்டல் பயிற்சி, ஒவ்வொரு பரீட்சைக்கும் முன்னர் கேள்விகளுக்கு பதில் எழுதும் பயிற்சி என்பவற்றை உள்ளடக்குகிறது. இவற்றுக்கிடையில் கருத்தரங்குகள், பயிலரங்குகள், அச்சிட்ட தாள்கள் என்பவற்றுக்கு குறை நிரப்புச் செய்யும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட தபால் மூலமான பாடநெறியொன்றும் வழங்கப்படுகின்றது. எனினும், இத்துறையில் ஒரு கல்விசார் பாரம்பரியம் வளர்ச்சியடைவதற்கு போதிய வாய்ப்புக் கிடைக்கவில்லை. பட்டயக் கணக்காளர் நிறுவனம் அண்மைக் காலத்தில் அதன் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் ஒரு சில மாற்றங்களை அறிமுகம் செய்து வைத்திருந்த போதிலும் அதன் கல்வி அணுகுமுறையில் கணிசமான அளவிலான மாற்றங்கள் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை. இந்நிலையம் ஒரு பல்கலைக்கழகத்தை அல்லது தொழில்நுட்பக் கல்லூரியை ஒத்த ஒரு கல்வி நிறுவனமாக இருந்து வரவில்லை. அதன் காரணமாக அது முறையான விரிவுரைகள் மற்றும் கேள்விக்கு பதில் எழுதும் பயிற்சி என்பவற்றின் வடிவில் அதன் மாணவர்களுக்கு வரையறுக்கப்பட்ட அளவிலான கல்வி ஆதரவினையே வழங்கி வருகின்றது. எனவே, பரீட்சைகளுக்குத் தயாராகும் மாணவர்கள் தமது அறிவுக்கு குறை நிரப்புச் செய்யும் பொருட்டு பல்வேறு வெளி மூலங்களிலிருந்து மேலதிக உதவியைத் தேடி வருகின்றனர்.

(மிகுதி அடுத்த இதழில்)

# இலங்கையில் நீர்ப்பாசன அபிவிருத்தியும் உணவுப் பாதுகாப்பும்

*எம். ஸமத் ரன்டோல்ப் பார்க்கர்*
*(நீர்ப்பாசன முகாமைக்கான சர்வதேச நிறுவனம்)*

குறிப்பாக அரிசி உற்பத்தி தொடர்பான விவசாய தொழில்நுட்பங்களுடன் இணைந்த விதத்திலான நீர்ப்பாசன அபிவிருத்தி நாட்டின் உணவுப் பயிர் துறையினதும் உணவுப் பாதுகாப்பினதும் வளர்ச்சி வேகத்தினை வழங்கி வந்துள்ளது. தற்பொழுது பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் நிர்மாணம் மற்றும் நீர்ப்பாசனம் பெற்றுக் கொள்ளும் நிலப்பரப்பின் விரிவாக்கம் என்பன முடிவுக்கு வந்துள்ளதுடன், உணவுப் பயிர்த் துறை தேக்கமடைந்துள்ளது. விவசாயம் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி என்பவற்றின் வருங்கால திசை வழிகள் குறித்து ஒரு நிச்சயமற்ற நிலை நிலவி வருகின்றது. அதிகரித்து வரும் நீர்த் தட்டுப்பாடு மற்றும் நீருக்கான போட்டி என்பன இந்த நிச்சயமற்ற நிலையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன. இது இலங்கை மட்டும் எதிர்கொண்டிருக்கும் ஒரு பிரச்சினையல்ல; 1960களின் நடுப்பகுதி தொடக்கம் 1980களின் நடுப்பகுதி வரையில் விவசாயத் துறையில் தீவிர வளர்ச்சி கண்டு வந்துள்ள ஏனைய ஆசிய நாடுகளும் இப்பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளன.

உணவுப் பாதுகாப்பிலும் விவசாய அபிவிருத்தியிலும் நீர்ப்பாசனம் வகித்து வரும் பங்கினை பரிசீலனை செய்வதும், நீர்ப்பாசன விவசாயத்தின் வருங்கால அபிவிருத்தி குறித்த வாய்ப்புக்களை பரிசீலனை செய்வதுமே இக்கட்டுரையின் முக்கியமான குறிக்கோளாகும். எத்தகைய கொள்கைக் குறிக்கோள்கள் பின்பற்றப்பட்டுள்ளன? அதன் மூலம் கிட்டியுள்ள அனுகூலங்களும் செலவுகளும் எவை? நீர்ப்பாசன விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பவற்றின் வருங்கால அபிவிருத்தி தொடர்பாக இவை எத்தகைய தாக்கங்களை கொண்டுள்ளன?

## உலகளாவிய உணவுப் பாதுகாப்பு

உணவுப் பாதுகாப்பு என்பதனை உலகளாவிய நோக்கிலும் தேசிய நோக்கிலும் குடும்ப நோக்கிலும் பரிசீலனை செய்ய முடியும். தேசிய உணவுப் பாதுகாப்புக் கொள்கை உலகளாவிய மற்றும் குடும்ப மட்ட நிலைமையை கவனத்தில் எடுக்க வேண்டும். கெடுபிடி யுத்தம் இடம் பெற்று வந்த காலகட்டத்தின் போது உலகளாவிய உணவுப் பாதுகாப்பு, வளர்ச்சியடைந்த நாடுகளிலும் அதே போல வளர்முக நாடுகளிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாக இருந்து வந்தது. ஆசியா பெருமளவுக்கு கவலையூட்டக்கூடிய ஒரு பிராந்தியமாக இருந்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட திடீர் குடித்தொகைப் பெருக்கம், நிலத்திலிருந்து வழிய மிகை தொடர்பான துரிதமான நிலை மாற்றம் ஒன்று ஏற்படுவதற்கு வழிகோலியது. 1960கள் அளவில் நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், எதிரில் வரக்கூடிய உணவு நெருக்கடியொன்றைத் தவிர்த்துக் கொள்வதற்கும் என வழிமுறைகள் தேடப்பட்டுக் கொண்டிருந்தன. உர வகைகளுக்கு எதிர்விளைவு காட்டும் நவீன அரிசி மற்றும் கோதுமை வகைகளின் அபிவிருத்தியும் வெளியீடும் துரித விளைச்சல் அதிகரிப்புக்களை சாதித்துக் கொள்வதற்கான உள்ளார்ந்த ஆற்றலை வழங்கியிருந்தன. ஆனால், இந்த உள்ளார்ந்த ஆற்றலை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால் நீர்ப்பாசனம், துணை உள்கட்டமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றில் பாரிய அளவிலான முதலீடுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்ற விடயம் தெளிவாகத் தெரிய வந்திருந்தது. இந்திய உபகண்டத்தில் 1960களின் நடுப்பகுதியில் ஏற்பட்ட உணவுற்பத்தி வீழ்ச்சியும் 1970களின் தொடக்கத்தில் தானிய உற்பத்தியில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட தட்டுப்பாடும் தானிய விலைகளில் செங்குத்தான அதிகரிப்புக்கு வழிகோலின. இந்நிலைமை விவசாயத்திலும் நீர்ப்பாசனத்திலும் பாரிய அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு தூண்டுதலாக அமைந்தது. உலக வங்கியும் ஏனைய சர்வதேசக் கொடுகடன் நிறுவனங்களும் பாரிய பொது நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்மாணிப்பதற்கு நிதியுதவி வழங்கின. ஆசியா முழுவதிலும் விவசாயத்திலான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகளின் பெரும் பகுதி நீர்ப்பாசன அடிப்படையிலான அரிசி உற்பத்தியை அதிகரிப்பதற்கான முதலீடுகளாகவே இருந்து வந்தன. 1960 தொடக்கம் 1990 வரையான 3 தசாப்த காலத்தின் போது நீர்ப்பாசனம் பெறும் நிலத்தின் பரப்பு வருடந்தம் 1.7% இனால் அதிகரித்து வந்து 143 மில்லியன் ஹெக்டெயார் அளவினை எட்டியது. ஆசியாவின் சாகுபடி நிலப்பரப்பில் சுமார் மூன்றில் ஒரு பகுதி நீர்ப்பாசனம் பெறும் நிலப்பரப்பாக இருந்து வருகின்றது.

நீர்ப்பாசனத்திலும் புதிய உணவுத் தானிய தொழில்நுட்பங்களிலும் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் விளைவாக அரிசி மற்றும் கோதுமை என்பவற்றின் உலக விலைகள் 1960களின் தொடக்கத்திலிருந்த மட்டங்களிலும் பார்க்க சுமார் பாதியளவில் வீழ்ச்சி கண்டுள்ளன. நீர்ப்பாசன விவசாயத்தின் உற்பத்தி மிகவும் செறிவான முறையில் மேற்கொள்ளப்பட்டமை கடந்த காலத்தில் உலகளாவிய உணவுப் பாதுகாப்பினை சாதித்துக் கொள்வதிலும், பராமரித்து வருவதிலும் முக்கியமான ஒரு பங்கினை வகித்து வந்துள்ளது. வருங்காலத்திலும் அது அவ்வாறே இருந்து வரும். ஆனால், நீர்ப்பாசனம் பெறும் நிலப்பரப்பை மேலும் விரிவாக்குவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருந்து வருவதும், விவசாயம் மற்றும் விவசாயமல்லாத உபயோகங்களுக்கான நீர்த் தட்டுப்பாடு அதிகரித்து வரும் நிலையும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைக்கு ஒரு புதிய பரிமாணத்தை சேர்த்துள்ளது. இக்கட்டுரை உலகளாவிய உணவுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்களின் அபிவிருத்தி என்பவற்றுடன் தொடர்புபட்ட சில விடயங்களை கவனத்தில் எடுக்கின்றது.

## உள்நாட்டு உணவுப் பாதுகாப்பு

இலங்கையில், பெரும்பாலான

ஆசிய நாடுகளில் போலவே அதன் பெருகி வரும் குடித்தொகைக்கான உணவை வழங்கக் கூடிய நாட்டின் ஆற்றல் குறித்து ஒன்றன்பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் அனைத்துமே கவனம் செலுத்தி வந்துள்ளன. "உணவுப் பாதுகாப்பு" என்ற பதத்துக்கு தெளிவான முறையில் வரைவிலக்கணம் வழங்கப்படாவிட்டாலும் கூட, கொள்கை வகுப்போரின் கொள்கை ஆவணங்களும் கூற்றுக்களும் "உணவுப் பாதுகாப்பு" என்பதனை "அரிசியில் தன்னிறைவு நிலையை எட்டுதல்" என்ற விடயத்துடன் சம்பந்தப்படுத்தி நோக்கி வந்துள்ளன. (விவசாய, காணி மற்றும் வனவள அமைச்சின்) விவசாயம், காணி மற்றும் வனவளம் என்பன தொடர்பான தேசிய கொள்கை கட்டமைப்பு குறித்த அறிக்கை (1995) பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"நெல் இலங்கை வாழ் மக்களின் மிக முக்கியமான காபோஹைதரேற்று பண்டமாக இருந்து வருகின்றது. இறக்குமதிப் பிரதியீடு மற்றும் கிராமியக் குடித்தொகையில் பெருந்தொகையானோருக்கு வேலை வாய்ப்பு வழங்குதல் என்பது தொடர்பாக அன்னியச் செலாவணியை சேமித்துக் கொள்வதற்கூடாக தேசியப் பொருளாதாரத்தில் அது பெற்றுள்ள முக்கியத்துவத்தை இங்கு வலியுறுத்திக் கூற வேண்டிய அவசியமில்லை. சுமார் 18 இலட்சம் விவசாயிகள் அல்லது நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 10 சதவீதமானோர் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இலங்கை மக்களின் உணவில் தலைக்குரிய கலோரி மற்றும் புரதச் சத்துக்கள் என்பவற்றைப் பொறுத்தவரையில் அரிசி முறையே 45 சதவீதத்தையும், 40 சதவீதத்தையும் அளித்து வருகின்றது. எனவே, நாட்டின் பிரதான உணவுப் பண்டமான அரிசியில் தன்னிறைவு அடைவதனை நோக்கிய ஒரு கொள்கையைப் பின்பற்றி வருவதன் மூலம் உணவுப் பாதுகாப்பைச் சாதித்துக் கொள்வது முக்கியமான ஒரு கொள்கைக் குறிக்கோளாக இருந்து வருவது அவசியமாகும்."

பாரிய அல்லது சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களிலோ அல்லது மழை நீரை நம்பி சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்புகளிலோ அரிசி மற்றும் ஏனைய களப் பயிர்கள் என்பவற்றை உற்பத்தி செய்வதில் இலங்கை தற்பொழுது ஒப்பீட்டு ரீதியான அனுகூலம் ஒன்றைப் பெற்றிருக்கவில்லை என உலக வங்கியின் சமீபத்திய அறிக்கை ஒன்றில்(1996) வாதிடப்பட்டுள்ளது. "பௌதீக தன்னிறைவு நிலை என்ற அடிப்படையிலான உணவுப் பாதுகாப்பு, பெறுமதி குறைந்த பண்டமொன்றை உற்பத்தி செய்வதற்காக மூலதனச் செறிவு மிக்க நீர்ப்பாசனத் திட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்வதற்கூடாக உயர் செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது" என இந்த அறிக்கை வலியுறுத்துகின்றது.

உணவுப் பாதுகாப்பு தொடர்பான கருத்துகோளினை அரிசியில் தன்னிறைவு நிலையை எட்டுவதில் மட்டும் கவனம் செலுத்தாது அதற்கப்பாலும் விரிவாக்க வேண்டிய தேவை இருந்து வருகின்றது என்பதனை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், பெரும் போகத்தின் போது வேறு எந்த பொருத்தமான மாற்றுப் பயிர்களும் இல்லாதிருந்து வருவதனால் இலங்கை அரிசியை உற்பத்தி செய்வதில் தொடர்ந்தும் ஓர் ஒப்பீட்டு அனுகூல நிலையைப் பெற்றுள்ளது என்பது தெளிவாகும். மேலும், உணவுத் தானிய விலைகளும் அதன் வழியாக அனுகூல – செலவு விகிதங்களும் இன்றுள்ள அளவிலும் பார்க்க பெருமளவுக்கு உயர்வாக இருந்து வந்த ஒரு கால கட்டத்தில் இலங்கையில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்ற நீர்ப்பாசனத்திட்டங்களுக்கும், ஆசியாவின் ஏனைய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய திட்டங்களுக்கும் உலக வங்கியே முக்கியமாக ஆதரவளித்து வந்துள்ளது. இங்கு எழுப்பப்பட வேண்டிய சரியான கேள்வி இதுதான்: உலக வங்கியும் ஏனைய கொடையாளிகளும் 1970களிலும் 1980களிலும் மகாவலி போன்ற பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் நிர்மாணத்துக்கு நிதியளிப்புச் செய்திராவிடின் உணவுத் தானியங்களின் சர்வதேச விலை என்னவாக இருந்து வந்திருக்கும்? இத்தகைய முதலீடுகள் மூலம் சாதித்துக் கொள்ளப்பட்ட உலகளாவிய மற்றும் உள்நாட்டு உணவுப் பாதுகாப்பும் விவசாய மிகைகளும் செலவுக்கு ஏற்ற பயனைத் தந்துள்ளன என்பதனை பெரும்பாலான அவதானிகள் ஏற்றுக் கொள்வார்கள். இன்று பெருமளவுக்கு உணவுத் தானிய விலைகளில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக காணப்படும் குறைந்த மட்டத்திலான அனுகூல செலவு விகிதங்கள் உலகளாவிய மற்றும் உள்நாட்டு உணவுப் பாதுகாப்பு உத்திகளின் வெற்றியையே பெருமளவுக்கு பிரதிபலிக்கின்றன.

வீட்டு நீர் நுகர்வு மாதிரிகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் தேசிய உணவுப் பாதுகாப்பின் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டுள்ளது. உதாரணமாக, கோதுமை இலங்கையின் உணவின் முக்கியமான ஒரு கூறாக படிப்படியாக இடம்பிடித்து வருகின்றது. கோதுமை விலைகள் மீதான மானியங்கள் மற்றும் அரிசி இறக்குமதிகள் மீதான தீர்வைகள் என்பவற்றுக்கூடாக இது அரசாங்கத்தினாலும் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. 1960களின் நடுப் பகுதிக்கும் 1980 களின் நடுப் பகுதிக்கும் இடையில் நெல்லுற்பத்தி ஆண்டொன்றுக்கு 4 சதவீதமாக வளர்ச்சியடைந்து வந்தது.

அட்டவணை 1

மொ.உ.உ யின் சதவீதப் பகிர்வு

| நாடு | விவசாயம் | | கைத்தொழில் | | பணிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | 1970 | 1995 | 1970 | 1995 | 1970 | 1995 |
| இலங்கை | 28 | 23 | 24 | 25 | 48 | 52 |
| பங்களாதேஷ் | 55 | 30 | 09 | 18 | 37 | 52 |
| இந்தோனேசியா | 45 | 17 | 19 | 42 | 36 | 41 |
| பிலிப்பைன்ஸ் | 30 | 22 | 32 | 32 | 39 | 46 |
| தாய்லாந்து | 26 | 11 | 25 | 40 | 36 | 49 |

*ஆதாரம்: உலக வங்கி - உலக அபிவிருத்தி அறிக்கை, 1995 மற்றும் 1997*

இக்கால கட்டத்தின் போது தலைக்குரிய நுகர்வு ஆண்டொன்றுக்கு 105 கிலோ கிராம்கள் தொடக்கம் 115 கி. கி.கள் வரையில் இருந்து வந்தது. 1977 தொடக்கம் அரிசி இறக்குமதி ஆண்டொன்றுக்கு சராசரியாக 200,000 மெற்றிக் தொன்களாக இருந்து வந்துள்ளது. இது அவ்வப்பொழுது 100,000 மெற்றிக் தொன்களுக்கும் 300,000 மெற்றிக் தொன்களுக்கும் இடையிலான வீச்சில் இருந்து வந்ததுடன், நுகர்வில் 7–15 சதவீதமாக காணப்பட்டது. மொத்த இறக்குமதிகளில் அரிசி இறக்குமதிகளின் அளவு சுமார் ஒரு சதவீமாகும்; அந்த வகையில், அரிசி இறக்குமதிகள் மிகவும் தாழ்ந்த மட்டங்களில் வைக்கப்பட்டிருந்தன.

அரிசிக்கு மாறான விதத்தில் வருடாந்த தலைக்குரிய கோதுமை நுகர்வு 1960களின் தொடக்கத்தில் 20 கி. கி. களுக்கும் குறைந்த மட்டத்திலிருந்து 1990களின் நடுப் பகுதியில் 50 கி. கி. களாக அதிகரித்திருந்தது. வருடாந்த கோதுமை இறக்குமதிகள் 1990களில் துரிதமாக அதிகரித்து வந்ததுடன், அது 1995 இல் 100,000 மெற்றிக் தொன்களுக்கும் அதிகமாக இருந்தது. எனவே, அரிசி உற்பத்தியை உள்நாட்டுத் தேவையின் 85-90 சதவீதம் வரையிலான மட்டத்தில் பராமரிப்பதும், கோதுமை மாவின் இறக்குமதியையும் தலைக்குரிய நுகர்வையும் அதிகரித்துக் கொள்வதும் இதுவரை காலமும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு உணவுப் பாதுகாப்பு உத்தியாக இருந்து வருகின்றது. அரிசி மற்றும் கோதுமை என்பவற்றின் விலைகள் சார்பு ரீதியில் உறுதியாக நிலைத்து வந்துள்ளதுடன், இந்த இரு உணவுப் பண்டங்களினதும் விநியோகம் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் உடனடியாக கிடைக்கக் கூடியதாகவும் இருந்து வருகின்றது.

பண்ணைக் குடும்ப மட்டத்தைப் பொறுத்தவரையில் அரிசி உற்பத்தி தொடர்ந்தும் உணவுப் பாதுகாப்பின் முக்கியமான ஒரு அம்சமாக இருந்து வருகின்றது. அரிசியை வீட்டில் நுகர முடியும்; அல்லது இலகுவாக சந்தைப்படுத்த முடியும். நீர்ப்பாசன வசதிகளின் கீழ் அதிகரித்த அளவிலான அரிசி தொடர்ந்தும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. எனினும், சந்தைகளின் வளர்ச்சியற்ற நிலை, உயர் சந்தைப்படுத்தும் செலவுகள், விலை ஊசலாட்டங்கள் என்பவற்றின் காரணமாக அரிசி அல்லாத ஏனைய பயிர் வகைகளின் உற்பத்தி தொடர்ந்தும் உயர் மட்டத்திலான நட்டவச்சக் காரணியொன்றைக் கொண்டுள்ளது. கிராமியத் துறையைப் பொறுத்தவரையில் பண்ணைத் துறையிலோ அல்லது பண்ணை சாராத துறையிலோ வேலை வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே கிடைத்து வருகின்றன. அதன் காரணமாக, உறுதியான மாற்று வருமான மூலம் ஒன்றைக் கண்டறிந்து கொள்ளும் பொருட்டு இக்குடும்ப உறுப்பினர்கள் ஆடைத் தொழிற்சாலைகளிலும் இராணுவத்திலும் வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்புக்களைத் தேடிக் கொள்வதற்கு முயல்கின்றார்கள். கிராமியப் பொருளாதாரம் பண்ணை சாராத வேலை வாய்ப்புக்களுக்கூடாக – குறிப்பாக, வெளிநாடுகளில் வேலை செய்பவர்கள் அனுப்பி வைக்கும் பணத்தின் ஊடாக-தக்க வைத்துக்கொள்ளப்பட்டு வருவதாக டன்ஹாம் மற்றும் எட்வேர்ட்ஸ் ஆகியோர் (1997) சுட்டிக் காட்டுகின்றனர்.

## நீர்ப்பாசன அபிவிருத்தி

இந்தப் பின்புலத்தில் நின்று இலங்கையின் நீர்ப்பாசன அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்டுள்ள காரணிகளை எடுத்து நோக்குவோம். சுதந்திரத்தின் பின்னர் வந்த கால கட்டம் முழுவதிலும் புதிய நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் நாட்டின் மிக முக்கியமான முதலீட்டு வாய்ப்புக்களாக கருதப்பட்டு வந்ததுடன், ஒன்றன் பின் ஒன்றாக வந்த அரசாங்களின் ஆதரவையும் பெற்று வந்தன. மொத்த பொது முதலீடுகளில் நீர்ப்பாசனத்தின் பங்கு 1950 களில் 30 சதவீதத்துக்கும் மேற்பட்டதாக இருந்தது; அதனையடுத்து 1980களின் பிற்பகுதி வரையில் அது 15 சதவீதத்துக்கும் 20 சதவீதத்துக்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. நீர்ப்பாசனம் பெறும் நிலப்பரப்பின் அளவு 1950களின் தொடக்கத்தில் 250,000 ஹெக்டேயார்களிலிருந்து 1980களின் நடுப் பகுதியில் சுமார் 550,000 ஹெக்டேயார்களாக அதிகரித்துக் காணப்பட்டது. அதன் பின்னர், அது அநேகமாக அதே மட்டத்தில் நிலையாக இருந்து வருகின்றது. இதே காலப் பிரிவின் போது பாரிய பொது நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் உள்ள நிலப்பரப்பு - 100,000 ஹெக்டேயார்களிலிருந்து 300,000 ஹெக்டேயார்கள் வரையில் – சுமார் 3 மடங்கினால் – அதிகரித்திருந்தது.

1977 தேர்தலையடுத்து இடம் பெற்ற அரசாங்க மாற்றம் தேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் மிக முக்கியமான ஒரு திருப்பு முனையை எடுத்து வந்தது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பவற்றுடன் கலந்தாலோசனை செய்து ஒரு புதிய உத்தி துவக்கி வைக்கப்பட்டது. அரசாங்கத்தின் தலையீடுகளைக் குறைத்து, பொருளாதார நடவடிக்கைகளின் மாதிரியை சந்தைச் சக்திகள் வழிநடாத்திச் செல்வதற்கு இடமளிக்கும் திசையிலேயே இச்சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறிப்பினும், நீர்ப்பாசனம் மற்றும் நீர் ஆதாரங்களின் அபிவிருத்தி என்பவற்றின் மீதான பொது முதலீட்டுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டது. துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்திச் செய்திட்டம் – அதன் பாரிய பரிமாணம் பொருளாதாரத்தின் மீது எடுத்து வரக்கூடிய தாக்கம் குறித்த கவலைகளுக்கு மத்தியிலும் கூட – துவக்கி வைக்கப்பட்டது. கடந்த இரு தசாப்த காலத்தின் போது நாட்டின் மொத்த நீர்ப்பாசன முதலீடுகளில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் 90 சதவீதத்தைப் பெற்றிருந்தது.

துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்வதற்கான தீர்மானத்தின் மீது மூன்று காரணிகள் ஒரே அளவில் செல்வாக்குச் செலுத்தி இருப்பதுபோல் தோன்றுகின்றது; உணவுப் பாதுகாப்பு, நீர் மின் உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு.

1970களின் நடுப் பகுதியில் தானிய உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி உலகளாவிய ரீதியில் விலை அதிகரிப்புக்களை எடுத்து வந்தது. இலங்கையில் 1972–73 காலப் பிரிவிலும், மீண்டும் 1975–76 காலப் பிரிவிலும் இடம்பெற்ற வறட்சி காரணமாக அரிசி உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது. அநேகமாக இதே காலப் பிரிவில் உருவாகிய உலக வலு நெருக்கடி, நீர் மின் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான உறுதியான தூண்டுதலை அளித்தது.

இறுதியாக, பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் முதலீடு வேலை வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பையும் அளித்தது. 1971-81 காலப்பிரிவின் போது பிரதானமாக பசுமைப் புரட்சி தொழில்நுட்பம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதன் காரணமாக விவசாயம் வருடாந்தம் 3.4 வீதத்தினால் அதிகரித்து வந்திருந்தது. ஆனால், இதே காலப்பிரிவின் போது வேலை வாய்ப்பில் வீழ்ச்சி

ஏற்பட்டிருந்தது. உலர் வலயத்தின் புதிதாக நீர்ப்பாசன வசதி பெற்ற பிரதேசங்களில் மீள் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி, அவ்விதம் குடியேறுபவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதே மகாவலித் திட்டத்தின் முக்கியமான நோக்கமாக இருந்து வந்தது.

## நீர்ப்பாசன அபிவிருத்தியும் உணவு உற்பத்தியும்

நாட்டின் அரிசி உற்பத்தியை அதிகரிப்பதிலும் அரிசியில் தன்னிறைவடைதல் என்ற முதன்மையான தேசியக் கொள்கைக் குறிக்கோளை சாதித்துக் கொள்வதிலும் நீர்ப்பாசன அபிவிருத்தி மிக முக்கியமான ஒரு பங்கினை வகித்து வந்துள்ளது என்பதற்கு தெட்டத் தெளிவான சான்றுகள் உள்ளன. 1952 க்கும் 1985க்கும் இடைப்பட்ட காலத்தில் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் அரிசி உற்பத்தி செய்யப்படும் நிலப்பரப்பின் அளவு வருடாந்தம் 4 சதவீதமாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் மழைநீர் சாகுபடி என்பவற்றின் கீழான அரிசி உற்பத்தியில் முறையே 2 சதவீதமாகவும் 1.5 சதவீதமாகவும் அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது. பல பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் தமக்குள் உறிஞ்சிக் கொண்டிருந்தன.

எவ்வாறிப்பினும், 1980களின் நடுப்பகுதி தொடக்கம் மழை நீரைக் கொண்டு அரிசி உற்பத்தி செய்யப்படும் நிலப் பரப்பின் அளவு கணிசமான அளவில் வீழ்ச்சி கண்டு வந்துள்ளது. வீடமைப்பு மற்றும் ஏனைய நகரத் தேவைகள் என்பவற்றில் கணிசமான அளவிலான ஓர் அதிகரிப்பு இடம் பெற்று வந்துள்ள ஈர வலயத்தைச் சேர்ந்த நகர்மயமாக்கப்பட்ட பிரதேசங்களில் இந்த வீழ்ச்சியை மிகவும் தெளிவாக அவதானிக்க முடிந்தது. இக் காணிகளின் இழப்பின் விளைவாக நெல்லுற்பத்தியில் ஏற்பட்ட குறைபாடு, நீர்ப்பாசனத் திட்டங்களில் மிகவும் செறிவான முறையில் நெல்லுற்பத்தி செய்யப்பட்டதன் மூலம் ஈடு செய்யப்பட்டது. அரிசியிலான தன்னிறைவு நிலை நீர்ப்பாசனம் பெறும் நிலப் பரப்பின் விரிவாக்கத்துடன் பெருமளவுக்கு சம்பந்தப்பட்டுள்ளது. இலங்கை 1994 இல் அரிசியில் 97 சதவீதம் தன்னிறைவு நிலையை எட்டியிருந்தது. பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் முதலீடுகள் மேற்கொள்ளப்படாதிருந்தால் இது 78 சதவீதமாகவே இருந்திருக்கும்.

மேலும், பாரிய நீர்ப்பாசனத் திட்டப் பிரதேசங்களில் பெரும் போகத்தின் போது கணிசமான அளவில் விளைச்சல் இடம்பெற்று வந்துள்ளது. சிறு போகத்தின் போதும் பாரிய நீர்ப்பாசனத்திட்டப் பிரதேசங்களில் விளைச்சல் உயர்வாகவே இருந்து வந்துள்ளது. உயர் மட்டத்திலான உர உபயோகம் மற்றும் ஏனைய உள்ளீடுகளின் பிரயோகம் என்பன இதற்குப் பங்களிப்புச் செய்திருக்க முடியும். மழைநீர் சாகுபடி பிரதேசங்களுடன் ஒப்பிடும் பொழுது நீர்ப்பாசனம் பெறும் நிலப்பரப்புக்களின் வருடாந்த விளைச்சல் அளவு பெருமளவுக்கு வேறுபட்டுச் செல்வதனைக் காண முடிகின்றது. பாரிய நீர்த்தேக்கங்களில் தற்பொழுது நீர் வளங்கள் நிர்வகிக்கப்பட்டு வரும் விதமே பெருமளவுக்கு இதற்குக் காரணமாக இருந்து வர முடியும்.

## நீர்ப்பாசன அபிவிருத்தியும் வேலை வாய்ப்புக்களின் உருவாக்கமும்

நீர்ப்பாசன அபிவிருத்தியின் மற்றொரு முக்கியமான குறிக்கோள் வேலை வாய்ப்புக்களின் உருவாக்கமாகும். உலர் வலயத்தில் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்தியை அடுத்து மீள் குடியேற்றமும் வேலை வாய்ப்புக்களின் உருவாக்கமும் இடம் பெற்றது. உலர் வலயம் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 62 சதவீதத்தைக் கொண்டுள்ளது. இதன் குடித்தொகை 1946 இல் 12 இலட்சமாக – நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 12 சதவீதமாக – இருந்து வந்தது. இது 1981 இல் 38 இலட்சமாக – நாட்டின் மொத்தக் குடித்தொகையின் 26 சதவீதமாக – அதிகரித்துக் காணப்பட்டது (தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம், 1995). நாட்டின் ஈரவலயப் பிரதேசங்களைச் சேர்ந்த நிலமற்ற குடும்பங்களே பெருமளவுக்கு இப்பிரதேசங்களில் குடியேற்றப்பட்டன. இவர்களுக்கு விவசாயத் துறையில் வேலை வாய்ப்பும் வழங்கப்பட்டது. பாரிய நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களின் கட்டுமான வேலைகளும் இவர்களுக்கு போதிய அளவிலான மேலதிக வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தன.

எவ்வாறிருப்பினும், மீள் குடியமர்த்தல் அதற்கே உரித்தான பல பிரச்சினைகளையும் கொண்டிருந்தது: (I) செய்திட்டத்தின் திட்டமிடலிலும் நிறைவேற்றலிலும் பெருமளவுக்கு பொறியியல் துறைக்கு சார்பாக இருந்த நிலை (II) சமூக சேவைகளின் மீது போதியளவில் கவனம் செலுத்தப்படாமை, மற்றும் (III) குடியேற்றவாசிகளின் இரண்டாவது தலைமுறையினர் தொடர்பாக திட்டமிடல் மேற்கொள்ளப்படாமை என்பவற்றை முக்கிய குறைபாடுகளாக சில விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பாக இரண்டாவது தலைமுறையினர் தொடர்பாக திட்டமிடல் மேற்கொள்ளப்படாமையின் விளைவாக உடமைகள் சிறுசிறு துண்டுகளாகப் பிரிக்கப்படுதல், வறுமை மற்றும் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் என்பன உருவாகியிருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (மளர் மற்றும் ஹெட்டிகே, 1995). இந்த முதலீடுகள் மூலம் செய்திட்டப் பிரதேசம் முழுவதும் சிறிய பிழைப் பூதிய மட்ட குடும்ப உற்பத்தி அலகுகளை உருவாக்குவதற்குப் பதிலாக, விவசாயப் பன்முகப்படுத்தலுக்கும் கைத்தொழில் மயமாக்கலுக்குமான நிலைமைகளை உருவாக்கும் பிராந்திய வளர்ச்சியையும் அபிவிருத்தியையுமே சாதித்துக் கொண்டிருக்க வேண்டும் என அவர்கள் மேலும் வாதிடுகின்றனர்.

இயல்பாகவே ஒரு பொருளாதாரம் அபிவிருத்தியடைந்து வரும் பொழுது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தின் பங்கு வீழ்ச்சி அடைகின்றது. விவசாயத்திலான இந்த நிலை மாற்றம் விவசாயத் துறையிலான வேலை வாய்ப்புக்களிலும் வீழ்ச்சியேற்படுவதற்கு வழிகோலுகின்றது. இன்று ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் விவசாயத் துறை மொத்த வேலை வாய்ப்புக்களில் 3 சதவீதத்துக்கும் குறைவான அளவையும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு சதவீதத்தையும் மட்டுமே பிரதிநிதித்துவம் செய்து வருகின்றது. ஆனால், கமத்தொழில் சமுதாயத்திலிருந்து கைத்தொழில் சமுதாயத்தை நோக்கிய நிலை மாற்றம் சுமார் ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட கால கட்டம் முழுவதிலும் இடம்பெற்று வந்துள்ளது. அபிவிருத்தியின் ஆரம்ப கட்டங்களில் அவர்கள் பின்பற்றிய உத்தி, கிராமியப் பொருளாதாரத்தில் முதலீடுகளை செய்வது தொடர்பான உறுதியான ஒரு அர்ப்பணிப்புணர்வினை எடுத்துக் காட்டியது. அதனையடுத்து விவசாயம் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தின் ஒரு சிறு துறையாக உருவாகிய நிலையில் விவசாயத் துறை பாரிய அளவில் மானியமயப்படுத்தப்பட்டது.

இங்கு தரப்பட்டுள்ள அட்ட

வணை 1 இலங்கை மற்றும் ஒரு சில அண்டைய ஆசியப் பொருளாதாரங்களில் 1970 தொடக்கம் 1990 வரையில் இடம்பெற்று வந்துள்ள மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதப் பங்களிப்பு மாற்றங்களை எடுத்துக் காட்டுகின்றது. இந்த நிலைமாற்றம் இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் மிகத் துரிதமாக இடம்பெற்று வந்திருப்பதுடன், பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் மிக மெதுவாக இடம்பெற்று வந்துள்ளது. முன்னைய இரு நாடுகளிலும் கிராமியத் துறை ஊழியர் படையைச் சேர்ந்தவர்கள் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்புக்களை பெற்றிருந்தனர். பின்னைய இரு நாடுகளிலும் கிராமியத் துறை, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை செய்தவர்கள் அனுப்பி வைத்த பண உதவியைப் பெற்று வந்தது. இந்த 4 நாடுகளிலும் கணிசமான அளவிலான சீராக்கல் பிரச்சினைகள் இருந்து வந்திருப்பதுடன், கிராமியத் துறை பின்தங்கிய நிலையில் விடப்பட்டுள்ளது. டன்ஹாம் மற்றும் எட்வர்ட்ஸ் ஆகியோர் (1997) தமது விரிவான கட்டுரையில், இலங்கைக் கிராமியப் பொருளாதாரத்தின் மாறி வரும் இயல்பினையும், பெருகி வரும் வறுமையையும் வெளியிலிருந்து அனுப்பப்படும் பணம் மற்றும் ஏனைய நிதி மாற்றல்கள் என்பவற்றின் முக்கியத்துவத்தையும் மிகச் சிறந்த முறையில் ஆவணப்படுத்தியுள்ளனர்.

பொருளாதார தாராளமயமாக்கலின் குறிக்கோள்களில் ஒன்று விவசாய நிலைமாற்ற செயல் முறையை விரைவுபடுத்துவதாகும். ஆனால், மிக வேகமாக வளர்ச்சி கண்டு வரும் பொருளாதாரங்கள் சந்தித்து வரும் நிதி மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளையும், ஒரு சில பிராந்தியங்களில் பெருகி வரும் வறுமையையும் கவனத்தில் எடுக்கும் பொழுது விவசாயத் துறையின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், வறுமையின் மீது தாக்குதல் தொடுப்பதற்கும் கிராமியத் துறையில் அதிகரித்த அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றே கூற வேண்டியுள்ளது. அது ஓரளவுக்கு மெதுவான பொருளாதார வளர்ச்சியை எடுத்து வந்தாலும் கூடப் பரவாயில்லை.

## நீர்ப்பாசன விவசாயத்தின் எதிர்காலம்

நீர்ப்பாசன விவசாயம், மேலும் வளர்ச்சிக்கும் பயிர் உற்பத்தியை செறிவாக்குவதற்குமான அதிகரித்த அளவிலான உள்ளார்ந்த வாய்ப்புக்களை வழங்குகின்றது. வெளியீட்டு வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி நீர்ப்பாசன விவசாயத்தை மேலும் விரிவாக்குவதற்கான வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்கள் மற்றும் பெருகி வரும் கிராமியத் துறை வறுமை என்பவற்றுக்கு மத்தியில், விவசாயத் துறை இப்பொழுது ஒரு முக்கியமான சந்தியில் வந்து நின்றிருக்கின்றது. விவசாயத் துறையின் வருங்காலத் திசை வழிகள், விவசாய அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் முதலீடுகள் என்பன தொடர்பாக இப்பொழுது அரசாங்கத்தில் பெருமளவுக்கு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. தாராளமயமாக்கலுக்கான உலக வங்கியின் வழியை ஆதரிப்பவர்களும் பெருமளவுக்கு பாரம்பரிய நோக்கொன்றினைக் கொண்டிருப்பவர்களும் உள்ளனர். ஆனால், இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்தின் தற்போதைய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு இந்த உத்திகளில் எவையும் பொருத்தமானதாக இருப்பதாகத் தோன்றவில்லை.

வேறு சில நாடுகளின் அனுபவம், பொருளாதார அபிவிருத்தியின் ஆரம்ப கட்டங்களில் உயர் பண்ணை வருமானங்களுக்கும் விவசாயத் துறையின் முக்கியமான பங்களிப்புக்கும் வழிகோலக் கூடிய ஒரு மாற்றச் செயன்முறை இருந்து வருகின்றது என்பதனைக் காட்டுகிறது. கிராமியப் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டி விடுவதற்கு அவசியமான கொள்கைகள் மற்றும் முதலீடுகள் என்பன தொடர்பாக முழுமையான ஒரு இணக்க நிலை காணப்படவில்லை. ஆனால், எதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும் மற்றும் அபிவிருத்தி நிகழ்வுப் போக்கில் கிராமியத் துறை பின்தங்கி விடாதிருப்பதனை உறுதி செய்தல் என்பவற்றை மேற்கொள்வதற்கென எமக்கு பல படிப்பினைகள் கிடைக்கின்றன.

உணவுப் பாதுகாப்பு மற்றும் வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம் என்பன எமது கொள்கைத் திட்டத்தில் தொடர்ந்தும் உயர் முன்னுரிமையைப் பெற்றிருக்கும். எனினும், உள்நாட்டு உணவுப் பாதுகாப்பு ஏற்கனவே ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்று வருகின்றது. கிராமியப் பொருளாதாரத்தைச் சேர்ந்த மிக வறியோரான 30 சதவீதத்தினருக்கு உணவு முத்திரை, சனசக்தி உதவி மற்றும் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் தொடர்ந்தும் ஒரு பாதுகாப்பு வலை வழங்கப்பட்டு வருதல் வேண்டும். அடிப்படை உணவுப் பொருட்கள் உள்நாட்டு உற்பத்திக் கூடாக (அரிசி) அல்லது இறக்குமதிக்கு ஊடாக (கோதுமை) வழங்கப்பட்டு வருகின்றன. உணவு தானிய இறக்குமதிகளில் படிப்படியாக ஏற்பட்டு வரும் அதிகரிப்பு உணவுப் பாதுகாப்புக்கான ஒரு பாரிய அச்சுறுத்தலாக நோக்கப்படக் கூடாது. ஏனெனில், இந்த இறக்குமதிச் செலவு மொத்த உள்நாட்டு இறக்குமதிகளின் மிகச் சிறு பாகமாக மட்டுமே இருந்து வருகின்றது. அரிசி உற்பத்தித் துறையை மிதமிஞ்சிய அளவில் பாதுகாத்துக் கொள்ளும் விஷயத்தில் நாங்கள் சற்று எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். எனினும், உடனடி எதிர்காலத்திலும் அரிசி, நீர்ப்பாசன விவசாயத்தின் முதுகெலும்பாக இருந்து வருவதுடன், கிராமியப் பொருளாதாரத்திலும் ஒரு முக்கிய பங்கினை வகித்து வரும். இந்த நிலையில் அரிசி தொடர்பான ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றின் மீதான முதலீடுகள் பலப்படுத்தப்படுவது அவசியமாகும்.

விவசாயம் பெருமளவுக்கு வர்த்தகமயமாகி வரும் பொழுது உயர் அளவில் பன்முகப்படுத்தப்படும் ஒரு போக்கினையும் அது காட்டுகின்றது. ஆனால், பன்முகப்படுத்தப்படல் கருதுகோள் குறித்து அதிகளவில் குழப்ப நிலை காணப்படுகின்றது. நுகர்வு மாதிரிகளிலும் விவசாயத் துறையிலும் மற்றும் பண்ணை மட்டத்திலும் பன்முகப்படுத்தல் 3 மட்டங்களில் இடம்பெற முடியும். வர்த்தகத்தில் அதிகரிப்பு இடம்பெற்று வருவதுடன் இணைந்த விதத்தில் நுகர்வு மாதிரிகளிலான பன்முகப்படுத்தல் மிகத் தெளிவாக இடம்பெறுகின்றது. விவசாயத் துறை பெருமளவுக்கு பன்முகப்படுத்தப்பட முடியும். ஆனால், பண்ணைகள், பயிர்களைப் பொறுத்து உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் என்பன தொடர்பாக அளவுச் சிக்கனங்களை சாதித்துக் கொள்ளும் விதத்தில் சிறப்புத் தேர்ச்சியினை பெற்றுக் கொள்ள முடியும். வளர்ச்சியடையாத சந்தைகள் இலங்கையில் விவசாய அபிவிருத்திக்கான ஒரு முக்கியமான இடையூறாக இருந்து வருகின்றன. தனியார் சந்தைப்படுத்தலையும் கிராமிய சிறு கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு பாதைகள், மின்சாரம் மற்றும் தொலைத் தொடர்புகள் போன்ற கிராமிய உள்கட்டமைப்பு வசதிகளில் அரசாங்க முதலீடுகள் அவசியமாகும்.

# அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் மாற்று பொருளாதார முறைகள் மற்றும் புதிதாக அறிமுகம் செய்து வைக்கப்பட்ட $M_{2b}$ பண நிரம்பல்

வின்சன்ட் மேர்வின் பெர்னான்டோ
(மூத்த உதவிப் பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி)

எந்த ஒரு சமூகமும் மூன்று அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது:

(I) எத்தகைய பண்டங்களை எந்த அளவில் உற்பத்தி செய்ய வேண்டும்?

(II) எவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டும்?

(III) யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும்?

இந்த அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் அனைத்துச் சமூகங்கள் தொடர்பாகவும் பொதுவானவையாக இருந்து வருவதற்கான காரணம், ஒப்பீட்டு ரீதியில் தேவைகளுடன் ஒப்பிடுகையில் அச்சமூகங்களில் மூலவளங்கள் தொடர்பாக ஒரு பற்றாக்குறை நிலவி வருவதாகும்.

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எத்தனை இருந்து வருகின்றன என்பது தொடர்பாக பல்வேறு நூல்களிலும் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. அவற்றை இங்கு தொகுத்து நோக்குவோம்:

* எதனை எந்த அளவில் உற்பத்தி செய்ய வேண்டும்? என்ற பிரச்சினையை ஒரு பிரச்சினையாக கவனத்தில் எடுக்க வேண்டியிருப்பதுடன், எதனை உற்பத்தி செய்வது? எந்த அளவில் உற்பத்தி செய்வது? என அதனை இரு வேறு பிரிவுகளாக எடுத்துக் காட்டுவதிலும் தவறில்லை.

* எதிர்காலம் தொடர்பாக மூலவளங்களை ஒதுக்குவது எப்படி என்பதன் பொருள், குறிப்பிட்ட ஒரு காலப் பிரிவுக்குள் இருந்து வரும் மூலவளங்களில் தற்பொழுது நுகர்வதற்குத் தேவையாக இருக்கும் நுகர் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு எந்த அளவைப் பயன்படுத்துவது? மூலதனத் திரட்டை அதிகரித்துக் கொள்வதற்கு எந்த அளவைப் பயன்படுத்திக் கொள்வது என்பன தொடர்பாக முடிவு எடுப்பதாகும். இதனைச் சிலர் தனிப்பட்ட ஒரு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையாக எடுத்து விளக்கிய போதிலும், அதனை எதனை எந்த அளவில் உற்பத்தி செய்வது என்ற அடிப்படைப் பொருளாதார பிரச்சினையாக எடுத்து நோக்க முடியும் என்பதே எமது கருத்தாகும்.

* உற்பத்தி செய்வர்கள் யார்? என்பது தொடர்பாகவும் சில சந்தர்ப்பங்களில் பேசப்படுகின்றது. அதாவது, ஒரு நாட்டில் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டியது அரசாங்கமா? தனியார் துறையா அவ்வாறில்லாவிடில் கூட்டுறவுத் துறையா? என்பதனை முடிவு செய்வதாகும். அப்பிரச்சினை எவ்வாறு உற்பத்தி செய்வது என்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையின் கீழேயே கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

* மேற்குறித்த விளக்கத்தின் பிரகாரம், பார்ட்சை நோக்கங்களுக்காக அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் மூன்று உள்ளன எனக் குறிப்பிடுவது போதுமானதாகும். (பேராசிரியர் சமுவெல்சன் எழுதியுள்ள நூலிலும், பேராசியர்களான லைக், பிஷர் மற்றும் டோன் புஷ் ஆகிய மூவரும் இணைந்து எழுதியுள்ள நூலிலும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் மூன்று மட்டுமே உள்ளன என வலியுறுத்தப் பட்டுள்ளது).

எந்த ஒரு சமூகமும் சாதித்துக் கொள்வதற்கு முயற்சிக்கும் முக்கிய பொருளாதாரக் குறிக்கோள்கள் இதனிலும் பார்க்க வேறுபட்ட ஒரு விடயமாகும். அக்குறிக்கோள்களாவன:

(I) பொருளாதாரத்தில் விலை உறுதிப்பாட்டை எடுத்து வருவதற்கு அல்லது பணவீக்கப் போக்குகளை கட்டுப்படுத்துவதற்கு முயற்சித்தல்.

(II) பொருளாதாரத்தின் மூலவளங்களில் முழுமையான பயனீட்டு மட்டங்களை சாதித்துக் கொள்ளல்.

(III) வருமானப் பகிர்வில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை குறைந்த மட்டத்தில் வைத்திருத்தல்.

(IV) உயர் பொருளாதார வளர்ச்சியொன்றை எடுத்து வருதல்.

### எதனை எந்த அளவில் உற்பத்தி செய்வது?

பற்றாக்குறையாக இருந்து வரும் மூலவளங்களை மாற்று உபயோகங்களுக்கிடையில் பகிர்ந்தளிப்பதே இதன் பொருளாகும். அதாவது, பொருளாதாரம் ஒன்றில் உள்ள நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் தொழில் முனைவு போன்ற பற்றாக்குறையான மூலவளங்களிலிருந்து முதலில் எத்தகைய பண்டங்களை உற்பத்தி செய்ய வேண்டும் போன்ற பிரச்சினைகளாகும். ஒரு சில சமூகங்கள் நுகர் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அதிக அளவிலும் முதலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு குறைந்த அளவிலும் மூலவளங்களை ஒதுக்குவதுடன், வேறு சில சமூகங்கள் அதிகளவில் முதலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் குறைந்தளவில் நுகர் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் அருமையான மூலவளங்களை ஒதுக்குகின்றன. ஒரு சமூகத்துக்கு தேவைப்படும் அனைத்துப் பொருட்களையும் போதியளவில் உற்பத்தி செய்து கொள்வதற்கு அவசியமான மூலவளங்கள் இல்லாதிருப்பதனால் அநேகமாக உலகிலுள்ள அனைத்துப் பொருளாதாரங்களும் இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன. எதனை எந்த அளவில் உற்பத்தி செய்வது என்ற விடயம் சுருக்கமாக "மூலவள ஒதுக்கீடு" என குறிப்பிடப்படுகின்றது. இது ஒரு வகையில் தெரிவு செய்து கொள்ளல் குறித்த ஒரு பிரச்சினையாகும்.

### எவ்வாறு உற்பத்தி செய்வது?

எவ்வாறு உற்பத்தி செய்வது என்ற அடிப்படைப் பொருளாதார பிரச்சினையின் பொருள் பண்ட உற்பத்தியில் உற்பத்திக் காரணிகளை பயன்படுத்திக் கொள்வதை - அதாவது, உற்பத்தி நுட்பங்கள் அல்லது தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்திக் கொள்வதை தீர்மானிப்பதாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், குறைந்த பட்ச உற்பத்திச் செலவுடன் கூடிய முறைகள் அல்லது உச்ச மட்ட உற்பத்தி முறைகளை தெரிவு செய்து கொள்வதாகும். அதன் பிரகாரம் எதனை எந்த அளவில் உற்பத்தி செய்வது என்ற விடயத்தில் போலவே எவ்வாறு உற்பத்தி செய்வது என்ற விடயத்திலும் எந்த ஒரு சமூகமும் தெரிவு செய்து கொள்வது தொடர்பான ஒரு பிரச்சினையை எதிர்கொள்கின்றது. எல்லாச் சமூகங்களிலும் உற்பத்தி மூலவளங்கள் தொடர்பாக ஒரு பற்றாக்குறை நிலவி வருவதே இதற்கான காரணமாகும்.

### உற்பத்தி முறைகள்

முக்கியமான மூன்று மாற்று முறைகளை எடுத்துக் காட்ட முடியும்:

(I) ஊழியச் செறிவுமிக்க உற்பத்தி முறை

(II) மூலதனச் செறிவுமிக்க உற்பத்தி முறை

(III) நிலச் செறிவுமிக்க உற்பத்தி முறை

இங்கு "செறிவு" என்பது அதிகளவில் பயன்படுத்திக் கொள்ளப்படுதல் என்ற பொருளைத் தரும் ஒரு பதமாக உள்ளது. அதன் பிரகாரம், ஊழியச் செறிவு மிக்க உற்பத்தி முறை என்பது ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு சார்பு ரீதியில் ஏனைய உற்பத்திக் காரணிகளிலும் பார்க்க அதிகளவில் ஊழியத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு முறையாகும். உதாரணமாக, இலங்கையின் ஆடைக் கைத்தொழில், பெற்றோலியக் கைத்தொழிலும் பார்க்க அதிகளவில் ஊழியச் செறிவு மிக்கதாக இருந்து வருகின்றது. மூலதனச் செறிவு மிக்க உற்பத்தி முறை என்பது ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு ஏனைய உற்பத்திக் காரணிகளிலும் பார்க்க சார்பு ரீதியில் மூலதனத்தை அதிகளவில் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு முறையாகும். அமெரிக்காவின் கம்ப்யூட்டர் பொறிகளின் உற்பத்தி ஆடை உற்பத்தியிலும் பார்க்க அதிகளவில் மூலதனச் செறிவைக் கொண்டதாக இருந்து வருகின்றது. நிலச் செறிவு மிக்க உற்பத்தி முறை என்பது சார்பு ரீதியில் ஏனைய உற்பத்திக் காரணி களிலும் பார்க்க அதிகளவில் நிலத்தைப் பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்ளும் ஒரு முறையாகும். உதாரணமாக, இலங்கையின் அரிசி உற்பத்தி, ஆடை உற்பத்தியிலும் பார்க்க அதிகளவில் நிலச் செறிவினைக் கொண்டுள்ளது.

### ஊழிய மூலதன விகிதமும் உற்பத்தி வளைகோடும்

பெறுமதியின் அடிப்படையில் பேசும் பொழுது ஊழியச் செறிவு அல்லது மூலதனச் செறிவு என்பவற்றை ஊழிய/மூலதன விகிதத்தின் மூலம் தீர்மானித்துக் கொள்ள முடியும்.

உதாரணம்: 1000 பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு X மற்றும் Y ஆகிய பொருளாதாரங்களில் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட மூலதனத்தின் பெறுமதியும் ஊழிய அலகுகளும் வருமாறு:

| காரணி | X பொருளாதாரம் | Y பொருளாதாரம் |
|---|---|---|
| மூலதனம் (ரூ) | 10000 | 12000 |
| ஊழிய அலகுகள் | 500 | 750 |

இதில் எந்தப் பொருளாதாரம் ஊழியச் செறிவைக் கொண்டுள்ளது, எந்தப் பொருளாதாரம் மூலதனச் செறிவைக் கொண்டுள்ளது என்பதனை நிர்ணயிப்பது எவ்வாறு? அதற்கென ஊழிய/மூலதன விகிதத்தை கணிக்க வேண்டியுள்ளது:

X நாட்டின் ஊழிய மூலதன விகிதம்

$= 10000 \div 500 =$ ரூ 20

Y நாட்டின் ஊழிய மூலதன விகிதம்

$= 12000 \div 750 =$ ரூ 16

இதன் பிரகாரம் Y நாட்டிலும் பார்க்க X நாடு மூலதனச் செறிவு கொண்டதாக இருந்து வருவதாகவும் Y நாடு ஊழியச் செறிவுமிக்கதாக இருந்து வருவதாகவும் அனுமானித்துக் கொள்ள முடியும்.

ஏதேனும் ஒரு பண்டம் தொடர்பாக வழங்கப்படும் எந்த அளவு உள்ளீடுகளின் கீழும் அந்தப் பண்டத்திலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய உச்ச மட்ட வெளியீடுகளின் அளவு உற்பத்திக் கருமம் என அழைக்கப்படுகின்றது. அது ஒரு கணித சமன்பாடாகும்:

QX = F (L, K)

இங்கு QX = X பண்டத்தின் உச்சமட்ட வெளியீட்டு அளவான

F = சமன்பாடு என்ற பொருளைத் தரும் ஒரு குறியீடாகும்.

L = ஊழியம்

K = மூலதனம்

ஒரு நாட்டின் காரணிச் செறிவுத் தன்மை அந்நாட்டின் காரணி கட்டமைப்புக்கேற்பவே நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு நாட்டின் காரணி கட்டமைப்பின் கீழ் பல விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படுகின்றன:

- நாட்டின் தொழில்நுட்ப மட்டம்
- மூலவளங்களின் அளவு
- நாட்டில் காணப்படும் நிபுணத்துவ மட்டம்
- வேலையில்லாத் திண்டாட்ட மட்டம்
- சமூக உணர்வுகள்
- உற்பத்திச் செலவுகள்

இதன் பொருள் பண்ட உற்பத்தி பல்வேறு நிறுவனங்களினாலும் பல்வேறு தனி நபர்களாலும் மேற்கொள்ளப்பட முடியும் என்பதாகும். இதன் பிரகாரம், உற்பத்தி யாரால் மேற்கொள்ளப்படுகின்றது என்ற விடயம் மூலவளங்கள் யாருக்குச் சொந்தமாக இருக்கின்றன என்பதனைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகின்றது. இந்த உற்பத்தி செயன்முறை மூன்று விதங்களின் இடம்பெற முடியும்:

I. தனிநபர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்தல்.

   உதாரணம்: தனிநபர் நிறுவனங்கள், பங்குடைமை நிறுவனங்கள் மற்றும் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட கம்பெனிகள் என்பவற்றால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தனியார் பொருட்கள் (Private goods) என அழைக்கப்படுகின்றன. இப் பொருட்கள் ஒரு விலையைக் கொண்டிருப்பதுடன் தனிப்பட்ட முறையில் நுகரப்பட்டு வருகின்றன.

II. அரசாங்கத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுதல்.

   உதாரணம்: அரசாங்கத்தின் மூலம் நேரடியாக வழங்கப்படும் பாதுகாப்பு, விளையாட்டு அரங்குகள், வெளிச்ச வீடுகள் போன்ற பொதுப் பண்டங்கள் (Public Goods) இதில் அடங்குகின்றன. இவை கூட்டாக நுகரப்பட்டு வருவதுடன் அவற்றுக்கு ஒரு விலையை அறவிட்டுக் கொள்வதும் சிரமமாகும்.

III. கூட்டுறவு அமைப்பின் மூலம் உற்பத்தி செய்யப்படுதல்.

### உற்பத்தி யாருக்காக மேற்கொள்ளப்படுகின்றது?

காரணி மற்றும் சேவைகள் என்பவற்றை சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கிடையே வருமானம் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகின்றது என்பதனையே இது காட்டுகின்றது. காரணிகளை வைத்திருப்பவர்களின் வருமானங்கள் காரணி விலைகளுக்கு ஏற்பவே நிர்ணயிக்கப்படுகின்றன. அதாவது, நிலத்தை வைத்திருப்பவர்களுக்குக் கிடைக்கும் வாடகை, ஊழியர்களுக்கு கிடைக்கும் சம்பளம், மூலதனத்தை வைத்திருப்பவர்களுக்கு கிடைக்கும் வட்டி மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு கிடைக்கும் இலாபம் என இவற்றை விளக்கிக் கூறலாம். இதன் பிரகாரம் யாருக்காக உற்பத்தி செய்வது என்ற விடயம் உற்பத்திக் காரணிகளின் விலைகளுடன் சம்பந்தப்பட்ட வருமானப் பகிர்வுப் பிரச்சினை ஒன்றாக இருந்து வருகின்றது. ஒரு குடும்பத்துக்கு எந்த அளவு பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்ய முடியும் என்பது இதன் மூலமே தீர்மானிக்கப்படுகின்றது.

உதாரணம்: ஊழியச் செறிவு மிகுந்த உற்பத்தி முறை பின்பற்றப்படும் ஒரு நாட்டில் மூலதனத்துக்கு சார்பு ரீதியாக ஊழியம் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருவதனால் ஊழியர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் மூலதனச் செறிவு மிக்க ஒரு நாட்டிலிருக்கும் ஊழியர்களுக்குக் கிடைக்கும் சம்பளத்திலும் பார்க்க உயர்வானதாக உள்ளது. ஊழியர்களுக்கு சம்பளங்கள் என்ற முறையில் அதிகளவில் பணம் கிடைக்கும் பொழுது அவர்களுடைய கொள்வனவுச் சக்தியும் அதிகரிக்கின்றது. இவ்விதம் ஒவ்வொரு நாட்டிலும் குறிப்பிட்ட ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் அளவு அந்நாட்டின் ஒவ்வொரு காரணி உரிமையாளருக்கும் கிட்டும் வருமானத்தின் அளவின் பிரகாரம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்து வரும். எனவே, இது காரணி விலைகளின் பகிர்வு அல்லது காரணி வருமானப் பகிர்வு (வருமானத்தின் கருமங்கள் ரீதியான பகிர்வு) என்பவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ள ஒரு பிரச்சினையாகும்.

### வருமானத்தின் கருமங்கள் சார்ந்த பகிர்வு

வருமானத்தின் கருமம் சார்ந்த பகிர்வென்பது ஒரு நாட்டின் வருமான உற்பத்திக் காரணிச் சொந்தக்காரர்கள் அதாவது ஊழியர்கள், நிலச் சொந்தக்காரர்கள், மூலதனச் சொந்தக்காரர்கள் மற்றும் தொழில்முனைவோர் என்போருக்கிடையே சம்பளங்கள், குத்தகை வாடகைகள், வட்டி, மற்றும் இலாபங்கள் போன்ற காரணிகள் வருமானங்களாக பகிரப்படும் விதமாகும். இது காரணி வருமானப் பகிர்வு என்றும் அழைக்கப்படுகின்றது. கருமம் சார்ந்த வருமானப் பகிர்வு பல வகைகளில் முக்கியத்துவம் பெறுகின்றது:

I. அதன் மூலம் யாருக்காக உற்பத்தி செய்வது என்பதனை முடிவு செய்தல்.

II. காரணி வருமானங்களின் பிரகாரம் ஒரு நாட்டின் தேசிய வருமானக் கட்டமைப்பு எடுத்துக் காட்டப்படுதல்.

III. ஊழியர்கள் மற்றும் சொத்து உரிமையாளர்கள் ஆகிய இரு சமூக வர்க்கங்களுக்குமிடையே வருமானப் பகிர்வினை எடுத்துக் காட்டுதல்.

கவனிக்கவும்: குடும்பங்களுக்கிடையே வருமானப் பகிர்வு அல்லது ஒப்பீட்டு ரீதியான வருமானப் பகிர்வு இதிலும் பார்க்க ஒரு மாறுபட்ட கருதுகோளாகும். ஒப்பீட்டு ரீதியான வருமானப் பகிர்வு என்பது வருமானக் குழுக்கள் மொத்த வருமானத்தில் பெற்றுக் கொள்ளும் சதவீதங்களை வழங்குவதன் மூலம் எடுத்துக் காட்டப்படும் வருமானப் பகிர்வாகும். இதன் மூலம் பொருளாதாரத்தின் வறுமை மற்றும் பொருளாதாரத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வு என்பன கணிக்கப்படுகின்றன.

## மாற்றுப் பொருளாதார முறைகள்

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் முறையின் அடிப்படையில் உலகின் பல பொருளாதார முறைகள் உருவாகியுள்ளன. இப்பொருளாதார முறைகளை வகைப்படுத்துவது தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முறை இல்லாதிருந்த போதிலும் அவை முதலாளித்துவப் பொருளாதார முறை, சோஷலிஸப் பொருளாதார முறை மற்றும் கலப்புப் பொருளாதார முறை எனப் பல சந்தர்ப்பங்களில் பொதுவாக வகைப் படுத்தப்படுகின்றன.

முதலாளித்துவப் பொருளாதார முறை அல்லது தனியார் தொழில் முயற்சி பொருளாதார முறை என்பது உற்பத்திக் காரணிகள் தனிநபர்களுக்கு சொந்தமாக இருந்து வரும் ஒரு சமூகத்தையே குறிக்கின்றது. இதில் தொழில் முனைவுப் பணியினை தனி நபர்களே மேற்கொள்கின்றனர். சோஷலிஸப் பொருளாதார முறை அல்லது அரச தொழில் முயற்சிப் பொருளாதார முறை என்பது உற்பத்திக் காரணிகள் அரசுக்கு சொந்தமாக இருந்து வரும் ஒரு அமைப்பாகும். இங்கு தொழில் முனைவுப் பணியினை ஒன்றில் அரசாங்கம் அல்லது மத்தியமயப்படுத்தப்பட்ட திட்டமிடல் சபை மேற்கொண்டு வருகின்றது.

முதலாளித்துவப் பொருளாதார முறையின் பொறி முறை விலைப் பொறிமுறை ஆகும். இதற்கு சந்தைப் பொருளாதார முறை என்றும் கூறப்படுகின்றது. சந்தை முறை என்பது சந்தையின் முக்கிய சக்திகளாக கேள்வி மற்றும் வழங்கல் என்பவற்றுக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படும் விலைக்கூடாக பண்ட உற்பத்தியும் அதன் பகிர்வும் நிர்ணயிக்கப்படும் ஒரு முறையாகும்.

சோஷலிஸ அமைப்பொன்றில் திட்டமிடல் முறையே பொறிமுறையாக இருந்து வருகின்றது. அதாவது, பண்டங்களின் உற்பத்தியும் விநியோகமும் ஒரு திட்டத்துக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வகையில், முதலாளித்துவப் பொருளாதார முறை சந்தை அமைப்பின் கீழ் செயல்பட்டு வருவதுடன் சோஷலிஸப் பொருளாதார முறை திட்டமிடல் முறையின் கீழ் செயல்பட்டு வருகின்றது. நடப்பு நிலையை எடுத்து நோக்கும் பொழுது இன்று தூய்மையான முதலாளித்துவமோ அல்லது தூய்மையான சோஷலிஸமோ காணப்படவில்லை. பல்வேறு வகைகளிலும் கலப்பு இயல்பினைக் கொண்டிருக்கும் பொருளாதார முறையே இன்று காணப்படுகின்றது. அந்த அடிப்படையில் சார்பு ரீதியில் அதிகளவுக்கு முதலாளித்துவ குணாம்சங்களைக் கொண்டிருக்கும் பொருளாதாரங்களை முதலாளித்துவப் பொருளாதாரங்கள் என்றும், சார்பு ரீதியில் அதிகளவுக்கு சோஷலிஸ குணாம்சங்களைக் கொண்டிருக்கும் பொருளாதாரங்களை சோஷலிஸப் பொருளாதாரங்கள் என்றும் அழைப்பதற்கு நாம் பழகியுள்ளோம். முதலாளித்துவப் பொருளாதாரங்களில் ஓரளவுக்கு சோஷலிஸக் குணாம்சங்களும் சோஷலிஸப் பொருளாதாரங்களில் ஓரளவுக்கு முதலாளித்துவக் குணாம்சங்களும் கலந்துள்ளன என்பதே இதன் பொருளாகும். எனவே, நவீனப் பொருளாதார முறைகளை இரு மாற்று முறைகளாக வகுத்துக் காட்ட முடியும்.

## முதலாளித்துவம் - சந்தை முறை
## சோஷலிஸம் - திட்டமிடல் முறை

இன்றைய உலகின் பல நாடுகள் முதலாளித்துவச் சந்தைப் பொருளாதாரத்தைப் பின்பற்றி வருகின்றன. வட கொரியா, கியூபா போன்ற நாடுகளில் மட்டும் சோஷலிஸத் திட்டமிடல் அடிப்படையிலான பொருளாதார முறைகள் செயல்பட்டு வருவதனைக் காண முடிகின்றது. ஆரம்ப காலத்தில் இப்பொருளாதார முறைக்குள் பிரவேசித்த சோவியத் ரஷ்யாவை உள்ளிட்ட நாடுகள் இன்று சோஷலிஸத் திட்டமிடல் பொருளாதார முறைகளிலிருந்து விலகி சந்தைப் பொருளாதார முறைகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில், நிலை மாற்றப் பொருளாதாரங்கள் குறித்தும் இன்று நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

சீனா மற்றும் வியட்நாம் ஆகிய இரு நாடுகளும் நாம் இதுவரையில் எடுத்து விளக்கிய இரு பொருளாதார முறைகளுக்கும் முற்றிலும் மாறுபட்ட ஒரு பாதையில் சென்று கொண்டிருக்கின்றன. அந்நாடுகளில் மூலவளங்கள் அரசுக்கு சொந்தமானவையாக இருந்து வந்த போதிலும், பொறிமுறை சந்தைப் பொறிமுறையாகவே உள்ளது. அதன் காரணமாக இந்த இரு நாடுகளிலும் நிலவி வரும் பொருளாதார முறை 1937 இல் போலந்து நாட்டுப் பொருளியலாளரான ஒஸ்காலன் என்பவர் அறிமுகம் செய்து வைத்த "சந்தை சோஷலிஸம்" என்ற கருதுகோளின் கீழ் வருகின்றன. இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இந்நாட்டில் முதலாளித்துவப் பொருளாதாரச் சந்தை முறையே நிலவி வந்தது. அது 1956-77 காலப் பிரிவின் போது பெருமளவுக்கு சோஷலிஸத் திட்டமிடல் பொருளாதார முறையொன்றின் பக்கம் சாய்வினைக் கொண்டிருந்தது. 1977 இன் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் முதலாளித்துவச் சந்தைப் பொருளாதார முறைக்கூடாக பயணித்து வருகின்றது.

## சந்தையும் சந்தை முறையும்

சந்தை என்பதன் பொருள் ஏதேனும் ஒரு பண்டம் அல்லது சேவை தொடர்பாக தேவை உள்ளவர்களுக்கும் வழங்குபவர்களுக்குமிடையில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்

பெறும் ஏதேனும் ஒரு நிலைமையை அல்லது அமைப்பினைக் குறிக்கின்றது. இந்த வரைவிலக்கணத்தின் பிரகாரம் ஒரு சந்தை இடம் பெறுவதற்கு பூகோள இடம் ஒன்று இருந்து வர வேண்டும் என்ற அவசியமில்லை. தொடர்பாடல் வசதிகளைப் பயன்படுத்தி சர்வதேச ரீதியில் பல்வேறு விதமான கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ள முடியும். குறிப்பாக, இலங்கையின் இன்றைய நிதியியல் சந்தை எனக் கருதப்படும் பணச் சந்தையிலும் மூலதனச் சந்தையிலும் பெரும்பாலான நடவடிக்கைகள் தொடர்பு சாதன ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உதாரணம்: தொலைபேசி வங்கித் தொழில் முறை (Tele Banking)

எந்த ஒரு சந்தையிலும் இரு முக்கிய சக்திகள் உள்ளன. பொருட்களைக் கொள்வனவு செய்யும் கொள்வனவாளர்கள் இதில் ஒரு சக்தியாகும். பொருட்களையும் சேவைகளையும் வழங்கல் செய்யும் வழங்குனர்கள் மற்றொரு சக்தியாக செயல்பட்டு வருகின்றனர். பொருளாதாரப் பகுப்பாய்வில் இரு சந்தை முறைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன:

I. பண்டங்கள் சந்தை
II. காரணிச் சந்தை

அதாவது முதலாளித்துவப் பொருளாதாரம் ஒன்றில் ஆட்களுக்கு தாம் விரும்பும் பொருளைத் தெரிவு செய்து கொள்ளும் சுதந்திரம் உள்ளது. அதன் பிரகாரம் முடிவுகள் எடுக்கப்படும் நிலை பெருமளவுக்கு மத்தியமயப்படுத்தப் பட்டுள்ளது. விலைப் பொறிமுறையானது அவ்விதம் மத்தியமயப்படுத்தப்பட்டிருக்கும் தனிநபர்களின் முடிவுகளை ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொள்கின்றது. அந்த வகையில், எதனை எந்த அளவில் எவ்வாறு யாருக்காக உற்பத்தி செய்வது என்பது குறித்த அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் விலைகளின் மூலம் தீர்த்து வைக்கப் படுவது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தனித்துவமான ஒரு பண்பாக இருந்து வருகின்றது. அதாவது, எந்த ஒரு பொருளாதார நடவடிக்கைக்கும் விலையே ஒரு சமிக்ஞையாக செயல்பட்டு வருகின்றது. இங்கு பண்டங்கள் சந்தையில் நிர்ணயிக்கப்படும் பண்டங்களின் விலையும் காரணிச் சந்தையில் நிர்ணயிக்கப்படும் காரணிகளின் விலை ஆகிய இரண்டும் கவனத்தில் எடுக்கப்படுகின்றன.

கவனிக்கவும்: முதாலளித்துவத்தில் ஒரு விலைப் பொறிமுறை இருந்து வருகின்றது. ஆனால், சோஷலிஸத்தில் ஒரு விலை (A Price) மட்டுமே உள்ளது. திட்டமிட்ட முறையில் உருவாக்கப்பட்டிருக்கும் சோஷலிஸத்தின் விலைப் பொருளாதாரத்தின் கணக்கீட்டு முறை, நாளாந்த முகாமைத் துவ நடவடிக்கைகளை எளிதாக்குவதற்கான ஒரு வழியாக வும் பொருளாதார திட்டமிடலுக்கு அவசியமான ஒரு கருவியாகவும் கருதப்படுகிறது. எனினும், சோஷலிஸத்தில் அனைத்து விலைகளும் ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன என்பதனை நாங்கள் கவனிப்பது அவசிய மாகும்.

## நுகர்வோர் இறையாண்மை

முதலாளித்துவ அல்லது சந்தைப் பொருளாதார முறையொன்றில் உற்பத்தி செய்யப்பட வேண்டிய பண்டங் களின் வகை மற்றும் அளவு என்பவற்றை முடிவு செய்யும் அதிகாரம் பொருளாதாரத்தின் ஒரு சக்தியாக செயல்பட்டு வரும் நுகர்வோருக்கு (கேள்வியை முன்வைப்போர்) உரித்தான தாக இருந்து வருவதனை முதலாளித்துவப் பொருளாதாரம் ஒன்றின் நுகர்வோர் இறையாண்மை என்ற கருதுகோள் எடுத்துக் காட்டுகின்றது.

சந்தைப் பொருளாதாரம் ஒன்றுக்குள் நுகர்வோர் இறையாண்மை உள்ளது எனக் கூறப்பட்ட போதிலும் அது ஓரளவுக்கு மட்டுமே உண்மையானது என அண்மைக் கால பொருளியலாளர்கள் வாதிடுகின்றனர். இவர்களில் மிக முக்கியமான பொருளியலாளரான கென்னத் கல்பிரைத் 1958 இல் எழுதிய The Affluent Society என்ற நூலில் நுகர்வோர் இறையாண்மையைப் பெற்றிருக்கவில்லையென்றும், அவர்களுடைய விருப்புக்கள் பெருமளவுக்கு விளம்பரத்தின் மூலம் வழிநடாத்தப்பட்டு வருவதாகவும் கூறுகிறார். முதலாளித்துவப் பொருளாதாரம் ஒன்றுக்குள் நுகர்வோர் இறையாண்மை உள்ளது என்ற கூற்றினை மறுத்துரைக்கும் ஒரு வாதமாக இது காணப்படுகிறது. ஏனெனில் விளம்பரங்களுக்கூடாக இதுவரையில் இல்லாத ஒரு கேள்வியைக் கூட உருவாக்க முடியும்.

போட்டிச் சந்தை நிலைமைகளில் கூட இது ஓரளவுக்கு மட்டுமே உண்மையாகும் என்பது இரண்டாவது வாதமாகும். ஏனெனில், மூலவளங்கள் வெவ்வேறு நோக்கங்களுக்காக பகிரப்படும் பொழுது கேள்விச் சக்திகள் மட்டுமன்றி நிரம்பல் சக்திகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு சந்தையில் ஒரு பண்டத்தின் விலை மற்றும் அளவு என்ப வற்றின் சமநிலை நிர்ணயிக்கப்படுவது நுகர்வோர் முடிவுகள், நிரம்பல் செய்வோர் முடிவுகள் ஆகிய இரண்டின் அடிப் படையிலாகும். அரசாங்கத் தலையீடுகள் மற்றும் சந்தையில் ஏகபோக சக்திகள் செயல்பட்டு வரும் நிலை என்பவற்றின் போது சந்தையில் நுகர்வோர் கொண்டிருக்கும் இறை யாண்மை மட்டுப்படுத்தப்படுகின்றது.

## சந்தை முறிவடைதல்

சந்தை முறிவு என்பதன் பொருள் விலைப் பொறி முறையில் காணப்படும் குறைபாடுகளையே குறிக்கின்றது. வெளிக் காரணிகள், பூரணத்துவமற்ற போட்டி என்பன சந்தை முறிவடையும் இரு சந்தர்ப்பங்களாக குறிப்பிட முடியும். தனிப்பட்ட செலவு மற்றும் இலாபம், சமூகச் செலவு மற்றும் இலாபம் என்பவற்றுக்கு சமமானதாக இருந்து வராதிருக்கும் சந்தர்ப்பத்திலேயே வெளிக் காரணி நிலை தோன்றுகின்றது.

உதாரணம்: இரசாயனப் பொருள் தொழிற்சாலை கழிவுப் பொருள்களை ஒரு ஆற்றில் கொட்டிவிடும் நிலையை நோக்குவோம். இங்கு ஆற்று நீர் மாசடைகின்றது.

அப்பொழுது அந்நீர் குடிப்பதற்கோ அல்லது குளிப்பதற்கோ பொருத்தமற்றதாகி விடுகின்றது. அது மட்டுமன்றி மீன் வளம் அழிவுறுதல் போன்ற வேறு சுற்றுச்சூழல் இழப்புக் களும் தோன்றுகின்றன.

எனினும், முதலாளித்துவத் தொழில் முனைவோன் உற்பத்தியாளன் என்ற முறையில் தனக்கு தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட செலவுகளையும் சந்தை விலையையும் கருத்தில் கொண்டே தனது பண்டங்களின் விலைகளை நிர்ணயிக்கின்றான். சமூகச் செலவு ஒன்று இருப்பதனை அவன் பொருட்படுத்துவதில்லை.

பூரணத்துவமற்ற போட்டியும் சந்தை முறிவடையும் மற்றொரு சந்தர்ப்பமாகும். போட்டி இடம் பெறாத ஏகபோக நிலைமை, சிலருரிமை போட்டி நிலமைகள் மற்றும் ஏகபோக போட்டி என்பன இதற்கான உதாரணங்களாகும். இந்த அனைத்து நிலைமைகளின் கீழும் சந்தையில் முறிவு ஏற்படுகின்றது. ஓர் உற்பத்தியாளர் அல்லது ஒரு சில உற்பத்தியாளர்கள் மட்டும் சந்தையில் முனைப்புடன் செயல்பட்டு வருவதே இதற்கான காரணமாகும்.

முதலாளித்துவப் பொருளாதார முறையில் விலைப் பொறி முறையின் செயல்பாட்டில் ஒரு சில சந்தர்ப்பங்களில் அரசாங்கம் தலையிட்டு வருகின்றது:

* நுகர்வோருக்கு பாதுகாப்பு அல்லது நிவாரணம் வழங்க வேண்டிய சந்தர்ப்பங்களில்.
* ஏகபோக நிலைமையொன்று தோன்றுவதன் விளைவாக ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளைத் தவிர்ப்பதற்கு.
* பொருள் நுகர்வினை ஊக்குவிப்பதற்கு அல்லது ஊக்கமிழக்கச் செய்வதற்கு தேவையேற்படும் சந்தர்ப்பங்களில்.
* பொருளாதாரங்களில் ஏற்ற இறக்கங்களை தவிர்ப்பதற்கு முதலாளித்துவப் பொருளாதாரம் ஒன்றில் விலைப் பொறிமுறையில் செல்வாக்குச் செலுத்துவதற்கு அரசு ஒரு சில கருவிகளை உபயோகித்து வருகின்றது.

## நிதிக் கொள்கை

நிதிக் கொள்கை என்பது பண நிரம்பல், கடன் வழங்கல் மற்றும் வட்டி விகிதத்தைக் கட்டுப்படுத்துதல் என்பவற்றின் மூலம் பொருளாதாரத்தின் நடவடிக்கைகளில் ஒரு செல்வாக்கினைக் கொண்டிருக்கும் கொள்கையாகும். நிலையான விலை மட்டத்தைப் பேணுதல், சென்மதி நிலுவையில் சமநிலையைப் பராமரித்தல், வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை எடுத்து வருதல் என்பன நிதிக் கொள்கையின் குறிக்கோள்களாகும். இதற்கென அரசாங்கத்தின் வங்கி என்ற முறையில் மத்திய வங்கி பல்வேறு வழிமுறைகளையும் உபயோகித்து வருகின்றது. இவற்றில் வங்கி வட்டி வீதம் பல்வேறு சந்தை நடவடிக்கைகள், சட்ட பூர்வமான ஒதுக்கு விகிதங்கள் மற்றும் கடன் கட்டுப்பாடு என்பன முக்கியமானவையாகும்.

## அரசாங்கத்தின் நிதிக் கொள்கைகள் (வரவு செலவுத் திட்டக் கொள்கைகள்)

அரச வரிக் கொள்கைகள், செலவு தொடர்பான கொள்கைகள், அரச முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் அரச கடன் கொள்கைகள் என்பன பொதுவாக அரசாங்க நிதிக் கொள்கைகளாக கருதப்படுகின்றன. அதன் பிரகாரம் வரிகள் மற்றும் மானியங்கள் போன்ற கருவிகளின் மூலம் அரசாங்கம் விலைப் பொறிமுறையின் செயல்பாட்டில் தலையிடுகின்றது:

* செலாவணி விகிதக் கொள்கை (உதாரணம் பணத்தின் பெறுமதியிறக்கம்)
* மறைமுகமான கட்டுப்பாட்டு முறைகள் (உதாரணம் விலைக்கட்டுப்பாடு, இறக்குமதிக் கட்டுப்பாடு)
* சட்டவாக்கங்கள் (உதாரணம் குறைந்த பட்ச ஊதிய சட்டங்கள்.

இதில் ஐந்தாவது விடயமாக போட்டியற்ற நிலைமையும் ஆறாவது விடயமாக தொழில் முனைவோர் சுதந்திரமாக முடிவுகளை எடுத்து செயல்பட முடியாதிருக்கும் நிலைமையும் இறுதி விடயமாக அரசாங்கம் அனைத்துக்கும் மேலாக அனைத்து விடயங்களையும் நெறிப்படுத்தி வருவதனையும் எடுத்துக் காட்ட முடியும். சோஷலிசப் பொருளாதாரங்கள் தோல்வி அடைவதற்கு இவையே வழிகோலுகின்றன என சுருக்கமாகக் குறிப்பிட முடியும்.

## நிலைமாற்றப் பொருளாதாரங்கள்

மத்தியமயப்படுத்தப்பட்ட திட்டமிடலுடன் கூடிய பல சோஷலிசப் பொருளாதாரங்கள் முதலாளித்துவ சந்தைப் பொருளாதார முறைகளை நோக்கி மாற்றமடைந்து வரும் நிகழ்வுப்போக்கினைக் குறிப்பதற்கு அண்மைக் காலத்தில் "நிலைமாற்றப் பொருளாதாரங்கள்" என்ற புதிய கருதுகோள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. உலக வங்கி 1996 இல் வெளியிட்ட உலக அபிவிருத்தி அறிக்கையும் கூட "திட்டமிடலிலிருந்து சந்தையை நோக்கி" என்ற தொனிப் பொருளையே கொண்டுள்ளது. எனவே, இத்தகைய நிலைமாற்றப் பொருளாதாரங்கள் குறித்து அறிந்து கொள்வது மிக அவசியமாகும்.

நிலைமாற்றப் பொருளாதாரங்கள் என்பது, முதலாளித்துவச் சந்தைப் பொருளாதாரங்களாக மாற்றம் கண்டு வரும் திட்டமிடப்பட்ட சோஷலிச பொருளாதாரங்களாகும். அதில் அரச ஏகபோகம் ஒழிக்கப்படுவதுடன், பொருளாதாரத்தில் ஒரு திறந்த நிலை ஏற்பட வேண்டும் என்றும், தொழில் முனைவோர் தமது ஆற்றல்களுக்கு ஏற்ப செயல்படுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும் என்றும், தனியார் தொழில் முயற்சி மீண்டும் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்றும் எதிர் பார்க்கப்படுகின்றது. இந்த நிலைமாற்றப் பொருளாதாரங்கள் பின்பற்றி வரும் கொள்கைகள் "சந்தை நட்புடன் கூடிய பொருளாதாரக் கொள்கைகள்" என அழைக்கப்படுகின்றன. சந்தை நட்புடன் கூடிய கொள்கை என்பது அரசாங்கப்

சந்தையுடன் பகைமை பாராட்டாது நட்புணர்வுடன் கூடிய ஓர் அணுகுமுறையைப் பின்பற்றி வருவதாகும்.

நிலைமாற்றப் பொருளாதாரங்கள் எனக் கருதப்படும் பொருளாதாரங்களை உலக வங்கி பின்வருமாறு வகைப் படுத்தியுள்ளது:

1. **மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள்**
   உதாரணம்: அல்பேனியா, போலந்து, பொஸ்னியா, பல்கேரியா, ருமேனியா, யுகோஸ்லாவியா, ஹங்கேரி, சொல்வேனியா, மசிடோனியா மற்றும் வேறு 13 நாடுகள் இக் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளன.

2. **புதிதாக சுதந்திரம் பெற்ற அரசுகள்**
   உதாரணம்: ஆர்மேனியா, அஸர்பைஜான், பெல்ரூஸ், எஸ்தோனியா ஜோர்ஜியா, லித்து வேனியா, ரஷ்யா, உக்ரைன் போன்ற 15 நாடுகள்.

## சோஷலிஸ மத்தியில் திட்டமிடப்பட்ட பொருளாதார முறை

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்த முடிவுகள் மத்திய திட்டமிடல் முறையின் மூலம் மேற் கொள்ளப்படும் பொருளாதார முறை "மத்தியில் திட்ட மிடப்படும் சோஷலிஸப் பொருளாதார முறை" என அழைக்கப்படுகின்றது. இப்பொருளாதார அமைப்பில் மூலதனம் போன்ற பௌதீக உற்பத்தி வளங்கள் அரசுக்குச் சொந்தமானவையாக இருந்து வருவதுடன், பொருளாதார நடவடிக்கைகளை அரசாங்கமே நெறிப்படுத்தி வருகின்றது. அரச தொழில் முயற்சி முறை நிலவி வருதல் சோசலிஷ பொருளாதார அமைப்பின் சிறப்பம்சமாகும். இப்பொருளா தார முறையின் கீழ் எதனை எந்த அளவில் உற்பத்தி செய்வது என்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினை, அரசாங்கத்தினால் அல்லது திட்டமிடல் குழுவினால் தீர்மானிக்கப்படும் முன்னுரிமைப் பட்டியல் ஒன்றுக்கு ஏற்ப தீர்த்து வைக்கப்படுகின்றது. மேலும், எவ்வாறு உற்பத்தி செய்வது என்ற விடயத்தைப் பொறுத்தவரையில் பொருத்தமான தொழில்நுட்பத்தின் தெரிவும் மூலப் பொருட்களின் தெரிவும் அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது. இங்கு பொருளாதார சூழல் மற்றும் சமூகத் தேவை என்பன கவனத்தில் எடுக்கப் படுகின்றன.

## சோஷலிஸப் பொருளாதாரங்கள் சீரழிவதற்கு வழிகோலிய காரணிகள்

நவீன பொருளாதாரங்கள் மிகவும் சிக்கலானவையாக இருந்து வருவதுடன் அத்தகைய பொருளாதாரங்களில் ஒட்டுமொத்தக் கேள்வி மற்றும் ஒட்டுமொத்த நிரம்பல் என்பன தொடர்பான முடிவுகள் மத்திய திட்டமிடல் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்படும் பொழுது பல நடைமுறைச் சிக்கல்கள் தோன்றுகின்றன. இப்பொருளாதாரங்கள் சீர் கேடடைந்தமைக்கு வழிகோலிய முதலாவது காரணம் இதுவாகும். அதாவது, கேள்வி நிரம்பல் நிலைமையினை சீராக்கம் செய்யும் பிரச்சினையும் பல சந்தர்ப்பங்களில் மிதமிஞ்சிய கேள்வி உருவாகிய நிலைமையும் அந்நிலைமை களைத் தவிர்ப்பதற்கு மத்தியில் திட்டமிடும் முறை ஆற்ற லற்றிருந்தமையும் சோஷலிஸப் பொருளாதாரங்களின் வீழ்ச்சிக்கு வழிகோலிய பிரதான காரணிகளாக இருந்து வந்தன.

இரண்டாவதாக, அரச தொழில் முயற்சியின் கீழ் உற்பத்தியில் வினைத்திறன் காணப்படவில்லை. அதாவது, ஆகக் குறைந்த செலவில் மிகச் சிறந்த உற்பத்திப் பொருள் உருவாக்கப்படும் நிலை இருந்து வரவில்லை. தொழில் நுட்பத்தில் தீவிர முன்னேற்றம் ஏற்படாதிருந்தமையினால் புத்தாக்கங்கள் உருவாக்கப்படாமை மூன்றாவது காரண மாகும். தொழிற்சாலைகள் உற்பத்தி இலக்குகளை சாதித்துக் கொள்வதில் கவனம் செலுத்தினவே தவிர உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்துவதில் கவனம் செலுத்த வில்லை. இது இந்த வீழ்ச்சிக்கு வழிகோலிய நான்காவது காரணமாகும்.

## மங்கோலியா, சீனா மற்றும் வியட்நாம்

1917-1950 காலப் பிரிவின் போது உலகக் குடித்தொகையில் மூன்றிலொரு பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்த மேற்குறித்த நாடுகள் சந்தைப் பொருளாதாரத்துக்குப் பதிலாக மத்தியில் திட்டமிடப்பட்ட பொருளாதாரங்களையே தெரிவு செய்திருந்தன. தொடக்க காலத்தில் சோவியத் ரஷ்யாவும், இரண்டாம் உலகப் போரின் பின்னர் மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சீனா, வட கொரியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளும் அரசாங்கத்தின் திட்டமிடலுக்கு ஊடாக உற்பத்திக்கென மூலவளங்களைப் பகிர்ந்தளித்தலை மிகப் பொருத்தமான அபிவிருத்தி வழிமுறையாக தெரிவு செய்து கொண்டிருந்தன. எனினும், இந்நாடுகளுள் பெரும்பாலானவை தீவிரமான முறையில் பொருளாதாரச் சீரழிவை நோக்கி சென்றிருந்தமையின் விளைவாக, அண்மைக் காலத்தில் மத்தியில் திட்டமிடப்பட்ட பொருளாதார முறையிலிருந்து சந்தைப் பொருளாதார முறைக்கு நிலைமாற்றமடைவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டுள்ளன. உதாரணமாக, சோவியத் ரஷ்யா 1950களில் 10 சதவீதமாகவும், 1960களில் 7 சதவீதமாகவும், 1970களில் 5 சதவீதமாகவும், 1980களில் 2 சதவீதமாகவும் மிகவும் மெதுவான வளர்ச்சி வீதங்களையே காட்டியது.

## நிலைமாற்றப் பொருளாதாரங்களுக்கென மேற்கொள்ளப் பட்ட சீர்திருத்தங்கள்

இந்நாடுகள் மத்தியில் திட்டமிடப்பட்ட பொருளாதார முறையிலிருந்து சந்தைப் பொருளாதார முறையை நோக்கி பயணிப்பதற்கென பெருந்தொகையான சீர்திருத்தங்களை மேற்கொண்டன:

1. தனியார் உரித்துக்கும் தனியார் தொழில் முயற்சிக்கும் வாய்ப்பளித்தல்.
2. மத்தியில் திட்டமிடப்பட்ட நெகிழ்ச்சித் தன்மையற்ற பொருளாதார முகாமைக்குப் பதிலாக பன்முகப்படுத் தப்பட்ட நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய பொருளா தார முகாமை முறையொன்றை எடுத்து வருவதற்கு

அவசியமான மாற்றங்களை மேற்கொள்ளல்; அல்லது சந்தைச் சக்திகளுக்கு ஏற்ப முடிவுகளை எடுப்பதற்கு அரச தொழில் முயற்சிகளுக்கு இடமளித்தல்.

3. அரச தொழில் முயற்சிகளை தனியார்மயமாக்கல்: குறிப்பிட்ட சில நாடுகளில் 1995 இன் முடிவு வரையில் அரச நிறுவனங்களில் தனியார் மயமாக்கப்பட்ட நிறுவனங்களின் சதவீதம் வருமாறு:

| நாடு | தனியார்மயமாக்கல் சதவீதம் |
|---|---|
| செக்கோஸ்லோவக்கியா | 90 |
| எஸ்தோனியா | 96 |
| ஹங்கேரி | 78 |
| லித்துவேனியா | 75 |
| மொங்கோலியா | 70 |
| போலந்து | 46 |
| ரஷ்யா | 66 |

ஆதாரம்: உலக அபிவிருத்தி அறிக்கை, 1996

4. விலைக் கட்டுப்பாடுகளை ஓரளவுக்கு அகற்றுதல் மற்றும் விலைகள் மூலம் ஆக்கச் செலவு பிரதிபலிக்கப் படுதல் வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்ளல். மத்தியில் திட்டமிடப்பட்ட முறையின் கீழ் மூலவளங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்குப் பதிலாக விலைப் பொறி முறையின் கீழ் அது இடம்பெற வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்ளல்.

5. பழம்பாணியிலான தொழில்நுட்பங்களை நவீனமயமாக்குவதற்கென பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்கி, வெளிநாட்டு மூலதனம் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றை வரவேற்றல். அவற்றுக்கூடாக பொருளாதாரத்தை வெளி உலகுக்கு திறந்துவிடலும் சுதந்திர வர்த்தக வலயம் போன்றவற்றை ஸ்தாபித்தலும்.

## நிலைமாற்றப் பொருளாதாரங்களின் வெற்றி தோல்வி

நிலைமாற்றப் பொருளாதாரங்களாக உருவாவதற்கு முன்னரும் பின்னரும் குறிப்பிட்ட சில மத்தியில் திட்டமிடப் பட்ட பொருளாதாரங்களின் பொருளாதார வளர்ச்சி வேகம் வருமாறு:

| நாடு | சராசரி வருடாந்த வளர்ச்சி வேகம் (%) நிலைமாற்றத்துக்கு முன்னர் | | நிலைமாற்றத்துக்குப் பின்னர் | | |
|---|---|---|---|---|---|
| | 71–80 | 81–89 | 90 | 93 | 95 |
| 1. ரஷ்யா | +6.5 | +3.0 | –3.6 | –8.7 | –4.0 |
| 2. சீனா | +5.5 | +11.1 | +3.9 | +13.4 | +10.8 |
| 3. ஹங்கேரி | +4.6 | +1.8 | –2.5 | –2.3 | +2.0 |
| 4. ருமேனியா | +7.6 | –1.0 | –5.6 | +1.3 | +7.0 |
| 5. ஆர்மேனியா | +14.5 | +3.5 | –7.2 | –14.8 | +7.0 |

ஆதாரம்: உலக அபிவிருத்தி அறிக்கை: 1996

*சீனா 1978 இல் ஒரு நிலைமாற்றப் பொருளாதாரமாக மாற்றம் கண்டது.

சீனாவைத் தவிர்ந்த ஏனைய பல மத்தியில் திட்டமிடப்பட்ட பொருளாதாரங்கள் 1980களில் நிலைமாற்றப் பொருளாதாரங்களாக மாற்றம் கண்டிருந்தன. ஆனால், சீனா 1978 இலேயே இவ்விதம் மாற்றமடைந்தது. இந்த நிலைமாற்றத்துக்கு முன்னர் சராசரியாக 5.5 % வருடாந்த வளர்ச்சியைக் கொண்டிருந்த அந்நாடு, பிரதானமாக நிலைமாற்றத்தின் விளைவாக 1981–89 காலப் பிரிவின் போது மிக உயரளவில் 11 சதவீத வருடாந்த வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. மேலும், 1990–94 காலப்பிரிவின் போது சீனா உலகின் ஏனைய அனைத்து நாடுகளிலும் பார்க்க உயரளவில் 13 சதவீத வளர்ச்சியை சாதித்துக் கொண்டிருந்தது. அந்நாடு 2020 இல் அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை முந்திச் சென்று முன்னணியிலிருந்து வரும் என உலக வங்கி ஏற்கனவே தெரிவித்துள்ளது. எனினும், ரஷ்யாவின் நிலை இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். 1950கள் தொடக்கம் 1990கள் வரையில் ஓரளவுக்கு மிதமான வளர்ச்சி வேகத்தினைப் பதிவு செய்து வந்திருந்த அந்நாடு 1990–94 காலப் பிரிவில் – 11% வளர்ச்சியைக் காட்டியிருந்தது. ஒரு நாடு நிலைமாற்றப் பொருளாதாரமாக இருந்து வரும் ஒரே காரணத்தினால் அதன் பொருளாதாரம் வெற்றிகரமாக முன்னோக்கிச் செல்லும் என எதிர்பார்க்க முடியாது என்பதனை இது எடுத்துக் காட்டுகின்றது. சீனா வெற்றியடைந்தமைக்கும் ரஷ்யப் பொருளாதாரம் தோல்வி கண்டமைக்கும் பல காரணிகள் வழிகோலியிருந்தன:

I. சீனாவில் காணப்பட்ட அரசியல் ஸ்திர நிலை, சட்டம் ஒழுங்கு, ஒற்றையாட்சி முறை மற்றும் தேசிய ஒருமைப்பாடு என்பன ரஷ்யாவில் நிலவி வரவில்லை.

II. சீனப் பொருளாதார சீர்திருத்தங்களின் இலக்கு சோஷலிச சந்தைப் பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புவதாகவே இருந்தது. ரஷ்யா அதே வேளையில் மேற்கத்திய பாணியிலான கட்டற்ற சந்தைப் பொருளாதாரமொன்றை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டிருந்தது.

III. சீனப் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மெதுவாக – ஆனால் நடைமுறைச் சாத்தியமான விதத்தில் – மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால், ரஷ்யாவில் சீர்திருத்தங்கள் துரித கதியிலும் மேலைய நாடுகளின் ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றின் அடிப்படையிலுமே மேற்கொள்ளப்பட்டு வந்தன.

IV. சீனாவுக்கு தேவையான அளவிலும் பார்க்க அதிகமாக வெளிநாட்டு முதலீடுகள் கிடைத்தன. ஆனால், ரஷ்யாவுக்கு அவை போதியளவில் கிடைக்கவில்லை.

I. எதனை எந்த அளவில் உற்பத்தி செய்வது என்ற விடயம் முதலாளித்துவப் பொருளாதாரம் ஒன்றில் தீர்த்து வைக்கப்படும் முறை

எதனை எந்த அளவில் உற்பத்தி செய்வது என்பது, அருமையான மூலவளங்களிலிருந்து எந்தப் பொருளை எந்த அளவில் உற்பத்தி செய்வது என்பதாகும். முதலாளித்துவப்

பொருளாதாரம் ஒன்றில் சார்பு ரீதியான விலைகளினடிப் படையிலேயே இது தீர்மானிக்கப்படுகின்றது. சார்பு ரீதியான விலை என்பதன் பொருள், ஒரு பண்டத்தின் விலையை ஏனைய பண்டத்துடன் சார்பு ரீதியில் தொடர்புபடுத்தி முன்வைப்பதாகும். உதாரணம், கோவா ஒரு கிலோவின் விலை ரூபா 10 ஆகவும், அரிசி ஒரு கிலோவின் விலை ரூபா 20 ஆகவும் இருந்து வந்தால் கோவா விலையுடன் ஒப்பீட்டு ரீதியில் அரிசியின் விலை இரு மடங்கு உயர்வானதாகும். கோவாவின் விலை அரிசி விலையிலும் பார்க்க அதிகரித்து, கோவாவின் மூலம் கிட்டும் ஒப்பீட்டு ரீதியான இலாபம் அரிசியிலிருந்து கிடைக்கும் இலாபத்திலும் பார்க்க உயர்வானதாக இருந்து வந்தால் உற்பத்தியாளர்கள் அதிகளவில் கோவாவை உற்பத்தி செய்வதற்கு தமது மூலவளங்களை ஒதுக்குவார்கள். எனவே, இதன் பிரகாரம் ஒப்பீட்டு ரீதியான விலைகள் மற்றும் இலாப எல்லை களினடிப்படையில் இப்பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும்.

*II. எவ்வாறு உற்பத்தி செய்து என்ற பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் விதம்*

மூலவளங்கள் அருமையாக இருந்து வருவதனால்; குறைந்த செலவினைக் கொண்ட உற்பத்தி முறைகளை தெரிவு செய்து கொள்ளல் அல்லது உற்பத்திக் காரணிகளை சிக்கனத்துடன் பயன்படுத்திக் கொள்ளல் இங்கு முக்கியத் துவம் பெறுகின்றது. காரணிச் சந்தையில் காரணிகளுக்குள்ள கேள்வி, நிரம்பல் என்பவற்றுக்கு ஏற்ப ஏற்படும் விலை களினடிப்படையில் நிர்ணயிக்கப்படும் ஒப்பீட்டு ரீதியான இலாபத்தினடிப்படையில் இப்பிரச்சினை தீர்த்து வைக்கப் படுகின்றது. ஒப்பீட்டு ரீதியான காரணி விலை என்பது உற்பத்திக் காரணிகள் மற்றும் பணிகள் என்பவற்றின் விலைகளுக்கிடையில் - அதாவது சம்பளங்கள், கூலிகள் மற்றும் வட்டி என்பவற்றுக்கு இடையில் - நிலவி வரும் விகிதமாகும். ஒப்பீட்டு ரீதியான காரணி விலை அந்தந்த நாடுகளில் காரணிகள் ஒன்று திரண்டிருக்கும் விதத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் மூலதனத்துடன் ஒப்பிடும் பொழுது ஊழியம் அதிகளவுக்கு காணப்படும் ஒரு நாட்டில் சம்பள/வட்டி விகிதம் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருந்து வருவதனால் இத்தகைய ஒரு நாட்டில் ஊழியச் செறிவு மிக்க உற்பத்தி முறைகள் இலாபகரமானவையாக இருந்து வரும்.

*III. யாருக்காக உற்பத்தி செய்வது என்ற விடயம்*

இது வருமானப் பகிர்வு அல்லது காரணி விலைகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ள ஒரு பிரச்சினையாகும். ஒரு குடும்பத்தின் கொள்வனவுச் சக்தி வருமானத்தின் அடிப் படையிலேயே நிர்ணயிக்கப்படுகின்றது. முதலாளித்துவப் பொருளாதாரம் ஒன்றில் ஒரு குடும்பத்தின் கொள்வனவுச் சக்தியை நிர்ணயிக்கும் வருமானத்தின் மீது பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன:

I. பௌதீக வளங்கள்: (நிலம், மூலதனம்) பரம்பரை உரிமையின் மூலமும் செல்வத்தைத் திரட்டிக் கொள் வதன் மூலமும் இத்தகைய மூலவளங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

II. மனித மூலவள உரிமை: ஊழியம் மற்றும் கல்வி வாய்ப்புக்கள் என்பவற்றின் மூலம் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

III. சந்தையின் மூலம் காரணிச் சேவை விலைகள் நிர்ண யிக்கப்படுதல்.

*I. எதனை எந்தளவில் உற்பத்தி செய்வது என்ற பிரச்சினை திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தினால் தீர்த்து வைக்கப்படும் முறை*

எதனை எந்த அளவில் உற்பத்தி செய்வது என்ற விடயம் மத்திய திட்டமிடல் குழுவினால் குறிப்பிட்ட ஒரு திட்டத்தின் பிரகாரம் தீர்த்து வைக்கப்படுகின்றது. இங்கு சமூகத் தேவை அல்லது சமூக முன்னுரிமை என்ற விடயத்தின் மீதே அதிகளவுக்கு கவனம் செலுத்தப்படுகின்றது.

*II. எவ்வாறு உற்பத்தி செய்வது என்ற பிரச்சினை*

பொருளாதாரச் சூழல் மற்றும் சமூகத் தேவை என் பவற்றைக் கவனத்தில் எடுத்த பின்னர் இதற்கு பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப முறையை அரசாங்கம் தீர்மானிக்கின்றது.

*III. யாருக்காக உற்பத்தி செய்வது என்ற பிரச்சினை*

இது ஒரு குடும்பத்துக்கு கிடைக்கும் வருமானத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. சோஷலிசப் பொருளாதாரம் ஒன்றில் பிரதானமாக இரு வழிகளில் ஒரு குடும்பம் வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றது:

I. அரச தொழில் முயற்சியில் ஓர் ஊழியராக பணிபுரிவதன் மூலம் கிடைக்கும் சம்பளம் ஒரு வருமானமாகும்.

II. கூட்டுத் தொழில் முயற்சி ஒன்றின் ஓர் உறுப்பினர் என்ற முறையில் உற்பத்திற்கு ஊழியத்தைப் பங் களிப்புச் செய்துள்ள அளவுக்கு ஏற்ப கூட்டு வரு மானத்தில் ஒரு பாகத்தினைப் பெற்றுக் கொள்வது மற்றொரு வருமான வழியாகும். இங்கு சம்பளங்களை யும் கூட அரசாங்கம் ஒரு திட்டத்தின் அடிப்படை யிலேயே நிர்ணயிக்கின்றது. இதன் பிரகாரம், வரு மானப் பகிர்வு தொடர்பாக (ஊழியம் அதன் பயிற்சி மற்றும் தரச் சிறப்பு போன்ற) மனித மூலவளமே முக்கியத்துவம் பெறுகிறது. நிலம், மூலதனம் போன்ற பௌதீக வளங்களின் உரிமை இங்கு முக்கியத்துவம் பெறுவதில்லை. அந்த வகையில், யாருக்காக உற்பத்தி செய்வது என்ற விடயம் மனித வள வருமானத்தின் மீது தீர்மானிக்கப்படுகின்றது.

**கலப்புப் பொருளாதாரமும் அடிப்படைப் பொருளாதார பிரச் சினைகளும்**

கலப்புப் பொருளாதாரம் என்பது விலைப் பொறி முறையின் செயற்பாடு மற்றும் பொதுத் துறையின் பங் கேற்பு என்பவற்றின் மூலம் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் ஒரு பொருளாதார முறையாகும். அதாவது, சுதந்திர பொருளாதாரம் ஒன்றி லிருக்கும் வினைத்திறன் மற்றும் மத்தியில் திட்டமிடப்படும் பொருளாதாரம் ஒன்றில் இருக்கும் பொதுத் துறைப் பங்கேற்பின் சாதகமான நிலைமைகள் ஆகிய இரண்டினதும்

கலவையை இத்தகைய பொருளாதாரம் ஒன்றில் காண முடிகிறது. கலப்புப் பொருளாதாரம் ஒன்றில் 3 வகையான தொழில் முயற்சிகள் காணப்படுகின்றன:

I. தனியார் துறை தொழில் முயற்சி

II. பொதுத் துறைத் தொழில் முயற்சி

III. கூட்டுறவுத் தொழில் முயற்சி

தனியார் தொழில் முயற்சியின் அல்லது விலைப் பொறி முறையின் பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்கு அரச தொழில் முயற்சி முன்வருகின்றது. ஒரு சில உற்பத்தி நடவடிக்கைகளில் (உதாரணம், பாதுகாப்பு) அரசாங்கம் நேரடியாகத் தலையிடுவதுடன், வேறு சில பொருளாதார நடவடிக்கைகளில் (உதாரணம், மானியங்கள்) அரசாங்கம் மறைமுகமாக தலையிடுகின்றது.

உலகின் பல நாடுகளில் இன்று கலப்பு பொருளாதாரங்களே நிலவி வருகின்றன. எனினும், பொதுத் துறையின் பங்கேற்பின் அளவு நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. அரசாங்கத்தைப் போலவே தனியார் துறையும் பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான பங்குப் பணியினை நிறைவு செய்து வருகின்றது.

*I. கலப்புப் பொருளாதாரம்: எதனை எந்த அளவில் உற்பத்தி செய்வது?*

தனியார் துறை இலாபமீட்டக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தூண்டப்படுவதுடன், அரசாங்கம் நலன்புரி நோக்குடன் பொருட்களை உற்பத்தி செய்கின்றது. கலப்புப் பொருளாதாரம் ஒன்றில் அரசாங்கம் வரிகள் மற்றும் மானியங்கள் என்பவற்றின் மூலம் விலைப் பொறி முறையில் செல்வாக்குச் செலுத்துவதற்கூடாக அல்லது (விலைக் கட்டுப்பாடு, உத்தரவாத விலை போன்ற) நேரடியான முறைகளுக்கூடாக விலைப் பொறிமுறையின் செயல்பாட்டை மாற்றியமைக்கின்றது. அதன் பிரகாரம், எதனை எந்த அளவில் உற்பத்தி செய்வது என்ற விடயம் கேள்வி, நிரம்பல் சக்திகளுக்கு ஏற்பவும், அதேபோல அந்த முறைகள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு ஊடாகவும் தீர்மானிக்கப்பட்டு வருவதனைக் காண முடிகிறது.

*II. எவ்வாறு உற்பத்தி செய்வது?*

தனியார் துறை இலாபமீட்டக்கூடிய குறைந்த பட்ச செலவுடன் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொண்டு வருவதுடன், அரசாங்கம் சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி நுட்ப முறைகளைத் தெரிவு செய்து கொள்கின்றது. தனியார் துறை, ஒரு காரணிக்கு இருந்து வரும் கேள்வி மற்றும் நிரம்பல் என்பவற்றுக்கு ஏற்ப காரணி விலையை நிர்ணயிக்கின்றது. பொதுத் துறை சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு காரணி விலைகளை நிர்ணயித்துக் கொள்கின்றது. உதாரணம்: குறைந்த மட்ட வேதனங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகள்.

*III. யாருக்காக உற்பத்தி செய்வது?*

தனியார் துறையின் கொள்வனவுச் சக்தி மற்றும் அக்கொள்வனவுச் சக்தியின் மீதான அரசாங்கத்தின் தலையீடு என்பவற்றின் அடிப்படையில் இது நிர்ணயிக்கப்படுகின்றது. இங்கு தனியார் துறையின் கொள்வனவுச் சக்தி பௌதீக வளங்களின் பற்றாக்குறை மற்றும் மனித வளப் பற்றாக்குறை மற்றும் காரணி விலைகள் என்பவற்றின் மீத தீர்மானிக்கப்படுகின்றது. எனினும், அரசாங்கத்தின் தலையீட்டுக்கு ஊடாக இக்கொள்வனவுச் சக்தி பல விதங்களில் மாற்றமடைகின்றது:

உதாரணம்:

I. வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றின் மீது படிப்படியான வரி அறவிடல் மூலம்.
II. குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மானியங்களை வழங்குவதன் மூலம்.
III. ஊழியர்களுக்குச் சாதகமான குறைந்த பட்ச ஊதியம் தொடர்பான ஒழுங்குவிதிகளை வகுப்பதன் மூலம்.
IV. சமூகப் பாதுகாப்பு முறைகளை ஏற்படுத்துவதன் மூலம்.
V. சொத்துரிமையை கட்டுப்படுத்துவதன் மூலம்.
VI. முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு வரி விடுமுறைகள் மற்றும் வரிச் சலுகைகள் என்பவற்றை அளிப்பதன் மூலம்.
VII. அரச தொழில் முயற்சிகளை தனியார்மயமாக்கல் / மக்கள்மயமாக்கல் மூலம் இந்த மாற்றங்கள் எடுத்து வரப்படுகின்றன.

## $M_{2b}$ அல்லது சீராக்கம் செய்யப்பட்ட $M_2$ பண நிரம்பல்

இலங்கை மத்திய வங்கி 1998 ஜனவரி மாதத்தில் வெளியிட்ட மத்திய வங்கி செய்தி விவரணத்தின் பிரகாரம் இதுவரை காலமும் இருந்து வந்த விரிந்த பண நிரம்பலின் ($M_2$) மற்றொரு விரிவாக்கம் $M_{2b}$ என அழைக்கப்பட்டது. இது குறித்து இங்கு ஒரு விளக்கம் தரப்படுகின்றது.

$M_{2b}$ பண நிரம்பலில் உள்ளடக்கப்படுபவை பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகிறது:

$$M_{2b} = M_2 + QM_{NRFC} + RD_{FCBU}$$

இங்கு $M_{2b}$ = சீராக்கம் செய்யப்பட்ட பண நிரம்பல்

$M_2$ = விரிந்த பண நிரம்பல்

QM NRFC = வதிவிடப் பிரஜைகள் அல்லாதோரின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள பொது மக்களுக்குச் சொந்தமான தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களின் அளவு.

RD FCBU = வெளிநாட்டு நாணய வங்கி அலகுகளிலுள்ள உள்நாட்டவர்களின் வைப்புக்களின் அளவு

$M_{2b}$ யின் அறிமுகத்துக்கு முன்னர் இருந்த குறுகிய பண நிரம்பல் ($M_1$) விரிந்த பண நிரம்பல் ($M_2$) என்பவற்றுக்கு, முன்னரைப் போலவே வரைவிலக்கணம் வழங்கப்பட்டு வருகின்றது. அதாவது, குறுகிய பண நிரம்பல் ($M_1$) பொது மக்களிடம் புழக்கத்தில் உள்ள பணம் (CP) மற்றும் பொது மக்களுக்குச் சொந்தமான கேள்வி வைப்புக்கள் (DDP) என்பவற்றின் கூட்டுத் தொகையாகும். (இங்கு பொதுமக்கள் என்பது நாட்டு மக்கள் + கம்பெனிகள் + கூட்டுறவுச் சங்கங்கள் + நியதிச் சபைகள் + அரச கூட்டுத்தாபனங்கள் + ஏனைய சங்கங்கள் + கம்பெனிகள் என்பனவாகும்.)

$$M_1 = CP + DDP$$

விரிந்த பண நிரம்பல் ($M_2$) என்பது குறுகிய பண நிரம்பல் மற்றும் பொது மக்களுக்குச் சொந்தமான வர்த்தக வங்கிகளில் வைக்கப்பட்டிருக்கும் தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் என்பவற்றின் கூட்டுத் தொகையாகும். (இங்கு வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கி அலகுகள் - DBU மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.)

$$M_2 = M_1 + QM_{DBU}$$

### இலங்கையில் $M_{2b}$ யை கணித்தல்

இலங்கையில் $M_{2b}$ என அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள சீராக்கம் செய்து வைக்கப்பட்ட $M_2$ வுடன் சம்பந்தப்பட்ட தகவல்களும் 1998 ஜனவரி செய்தி விவரணத்தின் மூலம் முன் வைக்கப்பட்டுள்ளன. அத்தரவுகள் மூலம் $M_{2b}$ யை கணிக்கும் முறை குறித்து நாம் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது.

திருத்தியமைக்கப்பட்ட நிதி ஆய்வின் பிரகாரம் 1997 டிசம்பர் முடிவில் இலங்கையின் நிதிக் கூட்டுக்கள் (நிதிக் கூட்டுக்கள் என்பவை வங்கி அமைப்புக்குள் உள்ள பொது மக்களுக்குச் சொந்தமான நிதிக் கடப்பாடுகள் அல்லது நிதிச் சொத்துக்களாகும்) பின்வருமாறு (பெறுமதி ரூ. மில்லியனில் தரப்பட்டுள்ளது):

1. பொது மக்கள் வசமுள்ள புழக்கத்தில் உள்ள பணம் (CP) — 45,680
2. பொதுமக்களுக்கு சொந்தமான கேள்வி வைப்புக்கள் — 40,172
3. வர்த்தக வங்கிகளிலுள்ள பொது மக்களுக்குச் சொந்தமான தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் $QM_{DBU}$ — 202,406
4. வதிவிடப் பிரஜைகள் அல்லாதோரின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் ($QM_{NRFC}$) — 23,543
5. வெளிநாட்டு நாணய வங்கி அலகுகளிலுள்ள உள்நாட்டவர்களின் வைப்புக்கள் ($RD_{FCBU}$) — 19,853

மேலே தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் 1997 இன் முடிவில் இலங்கையில் $M_1$ $M_2$ மற்றும் $M_{2b}$ என்பவற்றை கணக்கிட்டுக் கொள்ள முடியும்.

- *$M_1$ (குறுகிய பண நிரம்பல்)*
  - பொதுமக்கள் வசமுள்ள புழக்கத்திலுள்ள பணம் — 45,680
  - பொது மக்களின் கேள்வி வைப்புக்கள் — 40,172
  - குறுகிய பண நிரம்பல் ($M_1$) — 85,852
- *$M_2$ (விரிந்த பண நிரம்பல்)*
  - குறுகிய பண நிரம்பல் ($M_1$) — 85,852
  - வர்த்தக வங்கிகளிலுள்ள பொது மக்களுக்குச் சொந்தமான தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் — 202,406
  - விரிந்த பண நிரம்பல் ($M_2$) — 288,258
- $M_{2b}$ (சீராக்கம் செய்யப்பட்ட விரிந்த பண நிரம்பல் — 288,252
  - + வதிவிடப் பிரஜைகளல்லாதோரின் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள தவணை மற்றும் சேமிப்புக் கணக்குக்கள். — 223,543
  - + வெளிநாட்டு நாணய வங்கி அலகுகளிலுள்ள உள்நாட்டவர்களின் வைப்புக்கள் — 19,853
  - $M_{2b}$ அல்லது சீராக்கம் செய்யப்பட்ட விரிந்த பண நிரம்பல் — 331,654

### $M_{2b}$ மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

ஒரு நாட்டின் பண நிரம்பலின் பெறுமதி அதன் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளின் பெறுமதியின் கூட்டுத் தொகைக்கு சமமானதாகும். அதன் பிரகாரம் $M_{2b}$ மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 3 ஐந்தொகைகளுக் கூடாக பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது:

I. மத்திய வங்கி ஐந்தொகையின் தகவல்கள்
II. வர்த்தக வங்களின் ஒன்றிணைந்த ஐந்தொகைகளின் தகவல்கள்
III. வெளிநாட்டு நாணய வங்கி அலகுகளின் ஐந்தொகை தகவல்கள்.

இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு $M_{2b}$ யின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை பின்வருமாறு தொகுத்து கூற முடியும்:

$M_{2b}$ = NFA+NDA
இங்கு NFA = தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்
NDA தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்

இங்கு NFA அல்லது தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் பின்வரும் முறையில் கணிக்கப்படுகிறது.

NFA - FA-FL

இங்கு FA = ஒருங்கிணைந்த வங்கி அமைப்பின் மொத்த வெளிநாட்டு சொத்துக்கள்:

FL = ஒருங்கிணைந்த வங்கி அமைப்பின் மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்கள்

மத்திய வங்கி, உள்நாட்டு வர்த்தக வங்கி அலகுகள் மற்றும் வெளி நாட்டு நாணய வங்கி அலகுகள் என்பவற்றின் நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களுமே ஒருங்கிணைந்த வங்கி அமைப்பில் உள்ளடக்கப்படுகின்றன.

இங்கு NDA அல்லது தேறிய உள்நாட்டு சொத்துக்கள் பின்வரும் முறையில் கணிக்கப்படுகின்றது:

NDA = DA + OI

இங்கு DA = உள்நாட்டு சொத்துக்கள் (தேறியது)
OI = ஏனைய விடயங்கள் (தேறியது)

DA அல்லது உள்நாட்டு சொத்துக்களில் 3 விடயங்கள் உள்ளடக்கப்படுகிறது:

I. ஒருங்கிணைந்த வங்கி அமைப்பினால் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட தேறிய கடன்
II. அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்
III. தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்

OI அல்லது ஏனைய தேறிய விடயங்கள் என்பவை ஒருங்கிணைந்த வங்கி அமைப்பின் ஏனைய சொத்துக்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் என்பவற்றின் வித்தியாசமாகும்.

(முன் உள்ளட்டைத் தொடர்ச்சி)

1981/82 காலப் பகுதியில் தொழில் வாய்ப்பின்மை வீதத்தினை 11.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையச் செய்தது. எனினும், 1986/87 காலப் பகுதியில் மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் பாரிய முதன்மை வேலைகளும் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களும் முற்றுப் பெற்றமையின் காரணமாக 1986/87 நுகர்வோர் நிதி, சமூக பொருளாதார அளவீட்டுத் தரவுகளில் காட்டப்பட்டவாறு தொழில் வாய்ப்பின்மை வீதம் அதிகரித்தது. அதன் பின்னர் 1990களில் பொருளாதார நடவடிக்கைகள் சூடுபிடிக்கத் தொடங்கியமையின் காரணமாக தொழில் வாய்ப்பின்மை இலகுபடுத்தப்படுவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. மிக அண்மிய அளவீட்டின்படி தொழில் வாய்ப்பின்மை வீதமானது 11.5 சதவீதத்திற்குக் குறைந்துள்ளதோடு இது நுகர்வோர் நிதி சமூக, பொருளாதார அளவீட்டுத் தொடரில் பதியப்பட்ட ஆகக் குறைந்த வீதமுமாகும். ஏற்றுமதியினால் வழிநடத்தப்பட்ட வளர்ச்சியின் காரணமாக பொருளாதாரத்தின் விரைந்த விரிவாக்கமும் தனியார் துறையின் இயக்க விசையும் தொழிலாளர் ஈர்ப்பின் தீவிரப்படுத்தலுக்கு இட்டுச் சென்றுள்ளன. கிராமிய, நகர்ப்புற, தோட்டத் துறை ஆகிய மூன்று துறைகளிலும் தொழில் வாய்ப்பின்மையில் குறைப்பொன்று காணப்படுகின்றது.

நுகர்வோர் நிதி, சமூக பொருளாதார அளவீட்டு தரவுகளினால் வெளிப்படுத்தப்பட்டவாறு வருமானப் பகிர்ந்தளிப்பு 1953 இலிருந்து 1963 மற்றும் 1973 இல் படிப்படியாக பாரிய சமப்படுத்தலுக்கு நகர்ந்துள்ளது. சமப்பாட்டினைக் கருத்திற் கொள்ளாது விரைந்த பொருளாதார அபிவிருத்திக்கான கொள்கை வலியுறுத்தலின் காரணமாக 1978/79இல் இந்தப் போக்கு நேர் மாற்றமடைந்தது. 1981/82, 1986/87 அளவீடுகளில் வருமானச் சமமின்மைகள் மேலும் தெளிவாகக் காணப்பட்டன. 1996/97 இன் அளவீடு மோசமடைந்த வருமானச் சமமின்மைப் போக்கின் மீண்டுமொரு நேர்மாற்றமொன்றினைக் குறித்துக் காட்டுகின்றது. இது சார்புரீதியில் விரைந்த பொருளாதார அபிவிருத்தியின் ஊடான பரந்தளவு தொழில்வாய்ப்பு உருவாக்கம், அரசின் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் சிறப்பாக இலக்கிடப்பட்டமை, குறைந்த வருமானக் குழுக்களுக்கு தாராளமயமாக்கல் வழிமுறைகளின் நன்மைகள் சென்றடைந்தமை என்பனவற்றின் விளைவாகும். வெளிநாட்டில் தொழில் புரிவோரினால் தமது குடும்ப உறுப்பினருக்கான வெளிநாட்டுப் பண அனுப்பல்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் வறியவர்களின் வருமான மட்டத்தினை உயர்த்துவதற்கு உதவியதோடு வருமானத்தின் மிகச் சமமான பங்களிப்பொன்றுக்கும் இட்டுச் சென்றன.

இத்துடன் தரப்பட்டுள்ள அட்டவணையானது 1953 இலிருந்து நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதி, சமூக பொருளாதார அளவீடுகளின் சமூக, பொருளாதாரக் குறிகாட்டிகள் சிலவற்றின் போக்குகளைத் தொகுத்துத் தருகின்றது. முழுமையாகப் பார்க்கையில் எழுத்தறிவு, கல்விப் பெறுபேறுகள், தொழிற்படை மற்றும் தொழில் உருவாக்கம், வருமானப் பகிர்ந்தளிப்பு, கிடைக்கத்தக்க தன்மை என்பனவற்றினால் மேல் நோக்கிய போக்கொன்றினை அனைத்துக் குறிகாட்டிகளும் காட்டுகின்றன.

அளவீட்டுத் தொடர்களிலிருந்தான முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள் (1953-1996/97)

| குறிகாட்டிகள் | 1953 | 1963 | 1973 | 1978/79 | 1981/82 | 1986/87 | 1996/97* |
|---|---|---|---|---|---|---|---|
| 1. குடித்தொகை | | | | | | | |
| 1.1 வயதுக்குழுக்களின்படி குடிப்பரம்பல் (ஆண்டுகளில்)% | | | | | | | |
| 0 - 13 | - | 40.5 | 38.4 | 34.2 | 34.0 | 30.8 | 25.9 |
| 14 - 18 | - | 11.5 | 11.5 | 12.3 | 11.3 | 11.7 | 11.3 |
| 19 - 25 | - | 10.9 | 13.1 | 13.7 | 13.5 | 12.5 | 11.3 |
| 26 - 35 | - | 12.4 | 12.3 | 13.7 | 14.4 | 14.3 | 14.6 |
| 36 - 45 | - | 10.1 | 9.9 | 9.6 | 9.9 | 11.2 | 13.2 |
| 46 - 55 | - | 7.3 | 6.4 | 7.6 | 8.0 | 8.4 | 10.4 |
| 55 இற்கு மேல | - | 7.2 | 8.4 | 8.9 | 8.9 | 11.1 | 13.3 |
| 1.2 பால் ரீதியாக குடித்தொகை (%) | | | | | | | |
| ஆண் | 51.7 | 50.7 | 50.1 | 48.9 | 49.0 | 48.5 | 48.2 |
| பெண் | 48.3 | 49.3 | 49.9 | 51.1 | 51.0 | 51.5 | 51.8 |
| 2. குடித்தொகையின் எழுத்தறிவு மற்றும் கல்விப் பெறுபேறு | | | | | | | |
| 2.1 எழுத்தறிவு வீதம் (%) | - | 82.2 | 80.8 | 86.2 | 85.4 | 86.6 | 91.1 |
| 2.2 கல்விப் பெறுபேறுகள் (%) | | | | | | | |
| பள்ளி செல்லாத | 41.5 | 36.6 | 32.2 | 24.4 | 25.0 | 11.8 | 8.3 |
| ஆரம்ப | 45.8 | 39.3 | 37.9 | 38.9 | 37.9 | 41.1 | 35.7 |
| இரண்டாந்தர | 9.8 | 19.6 | 23.9 | 26.4 | 25.8 | 32.1 | 41.1 |
| மூன்றாந்தர | 1.8 | 4.5 | 6.0 | 10.3 | 11.3 | 15.0 | 14.9 |
| 3. தொழிற்படை தொழில்நிலை தொழில வாய்ப்பின்மை | | | | | | | |
| 3.1 பொருளாதார செயற்றிறன் வாய்ந்த குடித்தொகை (%) | | | | | | | |
| அனைத்துத்துறைகளும் | 40.0 | 31.7 | 33.9 | 38.0 | 34.3 | 38.1 | 40.2 |
| ஆண் | 56.0 | - | 48.0 | 50.1 | 49.7 | 51.7 | 53.4 |
| பெண் | 22.9 | - | 19.8 | 26.0 | 19.4 | 25.4 | 28.0 |
| 3.2 தொழில்நிலைப் பரம்பல் (%) | | | | | | | |
| முதன்மை | - | 53.2 | 54.8 | 49.5 | 52.8 | 49.6 | 38.5 |
| வேளாண்மை, காடாக்கல், மீன்பிடி | - | 53.0 | 54.5 | 48.3 | 51.2 | 41.7 | 37.1 |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | - | 0.2 | 0.3 | 1.3 | 1.6 | 1.9 | 1.5 |
| இரண்டாந்தர | - | 9.2 | 11.1 | 19.1 | 17.6 | 19.1 | 23.8 |
| தயாரிப்பு | - | 7.3 | 9.3 | 13.8 | 12.4 | 13.4 | 17.3 |
| கட்டுமானம் | - | 1.9 | 1.8 | 5.3 | 5.2 | 5.7 | 6.5 |
| மூன்றாம்தர | - | 37.6 | 34.1 | 31.3 | 29.6 | 31.3 | 31.6 |
| மொத்த சில்லறை விற்பனை உணவகங்கள் | - | 7.9 | 7.0 | 9.1 | 10.7 | 11.9 | 13.5 |
| பொதுநிருவாகம், பாதுகாப்பு, ஏனைய தனிப்பட்ட பணிகள் | - | 18.5 | 26.0 | 20.6 | 18.6 | 18.5 | 22.5 |
| ஏனைய | - | 11.2 | 0.3 | 0.8 | 0.2 | 0.8 | 1.6 |
| 3.3 தொழிற்படையின் % மாக தொழில் வாய்ப்பற்றோர் | | | | | | | |
| அனைத்துத் துறைகளும் | 16.5 | 14.6 | 24.0 | 14.7 | 11.7 | 15.5 | 11.5 |
| ஆண் | 15.3 | - | 18.9 | 9.2 | 7.8 | 11.3 | 6.9 |
| பெண் | 20.0 | - | 36.4 | 24.9 | 21.3 | 23.6 | 19.7 |
| 4. வருமானப் பகிர்ந்தளிப்பு | | | | | | | |
| 4.1 செலவிடும் அலகின் வருமானத்தின் சதவீதப் பங்கு | | | | | | | |
| ஆகக்குறைந்த 20 சதவீதம் | 5.2 | 5.4 | 7.2 | 6.3 | 5.7 | 5.1 | 5.5 |
| அதி கூடிய 20 சதவீதம் | 53.8 | 52.3 | 42.9 | 48.9 | 51.8 | 52.3 | 50.2 |
| அதி கூடிய 10 சதவீதம் | 40.6 | 36.8 | 23.0 | 34.5 | 37.1 | 37.4 | 34.8 |
| 4.2 ஜினி விகிதம் (செலவிடும் அலகுகள்) | 0.46 | 0.45 | 0.35 | 0.43 | 0.45 | 0.46 | 0.43 |
| 5. வசதிகளையும் உபகரணங்களையும் கொண்ட குடும்ப அலகுகளின் சதவீதம் | | | | | | | |
| 5.1 மின்சாரமும் வெளிச்சமும் | 4.1 | 7.0 | 8.0 | 13.1 | 15.8 | 36.5 | 54.8 |
| 5.2 குழாய் குடிநீர் | 11.3 | 5.0 | 21.0 | 21.8 | 18.4 | 22.6 | 30.6 |
| 5.3 வானொலி | 0 | 20.0 | 25.4 | 49.9 | 60.7 | 67.1 | 72.3 |
| 5.4 தையல் மெசின் | - | 22.0 | 26.2 | 31.3 | 30.7 | 37.2 | 41.7 |
| 5.5 குளிர்சாதனப் பெட்டி | 0.9 | 1.0 | 1.3 | 2.3 | 2.9 | 8.1 | 17.4 |
| 5.6 தொலைபேசி | - | 0.8 | 0.3 | 0.7 | 0.9 | 1.4 | 3.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி, சமூக, பொருளாதார அளவீடு
* அளவீட்டின் முதல் இரண்டு சுற்றுக்களின் அடிப்படையில்.

நன்றி: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, 1997.

தலைமை அஞ்சல் அலுவலகத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்: **QD/16/News**

**தொழில்நுட்பம்:** பீபள்ஸ் ஸ்மார்ட் காஷ் கார்ட் உள்ளார்ந்த நுண் முறைப்படுத்தல் சிப் ஒன்றையும் தனிப்பட்ட அடையாள எண் (PIN) ஒன்றையும் கொண்டிருப்பதுடன், அது உங்கள் நிலுவையை கார்டில் துல்லியமாக வைத்திருக்கின்றது. உலகெங்கிலும் உள்ள பல வளர்ச்சியடைந்த நாடுகளில் இந் தொழில்நுட்பமே இப்பொழுது பயன் படுத்தப்பட்டு வருகிறது.




**எளிமை:** தகைமைத் தேவைப்பாடுகள் இல்லை; கடன்கள் தொடர்பாக பர்ட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுவது மில்லை. நீங்கள் செய்ய வேண்டிய தெல்லாம் நீங்கள் விரும்பும் உச்ச வரம்பு அளவு வரையில் உங்கள் ஸ்மார்ட் காஷ் கார்டுக்கு பணத்தை முன்னதாகவே செலுத்துவதோ அல்லது உங்கள் தனிப்பட்ட கணக்கிலிருந்து பணத்தை மாற்றல் செய்வதோ தான்.

**வெகுமதி:** இந்தக் கார்டைக் கொண்டு நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு கொள்வனவுக்கும் உங்களுக்கு தகைமைப் புள்ளிகள் கிடைக்கும். பரிசுகள் அல்லது விலைக் கழிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையை இப்புள்ளிகள் வழங்கும்.

**வசதி:** கடன் கொடுக்கல் வாங்கல்களில் மேற்கொள்ளப்படுவது போல கையொப்பங்களோ அல்லது அதிகாரம் வழங்குவதோ அவசியமில்லை. சிறு சிறு கொடுக்கல் வாங்கல்களிலும் கூட அதனை உபயோகிக்க முடியும். துரித சேவையும் எளிமையும் அதன் தனிச் சிறப்புக்கள்.

**பாதுகாப்பு:** பீபள்ஸ் ஸ்மார்ட் காஷ் கார்ட் முழுமையாக பாதுகாப்பானதாகும். அதனை நீங்கள் தொலைத்து விட்டாலும் கூட கவலைப்படத் தேவையில்லை. இரகசிய எண் இருப்பதனால் வேறு எவரும் அதனை உபயோகிக்க முடியாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் மக்கள் வங்கி ஸ்மார்ட் கார்ட் மையத்துக்கு தெரிவியுங்கள். உடனடியாக உங்கள் கார்ட் இரத்து செய்யப்பட்டு பணத்துக்கு பாதுகாப்பு அளிக்கப்படும்!

அது

பாதுகாப்பானது

அதி நவீனமானது

வசதியானது

உலகம் தழுவியது

புதிய பணம்




பிரதி விலை: ரூ. 25/-

உரிய முறையில் பொருளியல் நோக்கு இதழின் பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம் பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

Cover printed at the sumathi Book printing (Pvt) Ltd. Colombo 14, Sri Lanka.